marxist.tncpim.org 999 477 6471

ஜூன் 2019, விலை ரூ.15.00

மார்க்சிஸ்ட்

தத்துவார்த்த மாத இதழ்

2018 ஜனவரி முதல் ஒலி இதழாகவும் வெளியாகிறது

* தேர்தல்கள் பற்றி மார்க்சும் எங்கல்சும்
* 2019 தேர்தலுக்கு பிறகான இந்திய சூழல் பற்றி



மீண்டும் ஒருமுறை சாதி வர்க்கம் குறித்து

மார்க்சிஸ்ட் தத்துவார்த்த மாத இதழ்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)

தமிழாக்கம் - *மின்னூல் வெளியீடு :*

FreeTamilEbooks.com

பதிவிறக்கம் செய்ய -

http://FreeTamilEbooks.com/ebooks/marxist_monthly_journal_june

மின்னூலாக்கம் - அ. அருந்தமிழ்யாழினி -

aruntamilyazhiniaravindan@gmail.com

This Book was produced using LaTeX + Pandoc

பொருளடக்கம்

1. வளர்ச்சி என்ற பெயரில் நிகழும் வன்முறைக்கு எதிராக... 5
2. 17வது மக்களவை தேர்தல் முடிவுகள்: உறுதிப்படுத்தப்பட்ட வலதுசாரி திருப்பம் 20
3. மீண்டுமொருமுறை சாதிகள், வர்க்கங்கள் குறித்து... 33
4. தேர்தல்கள் பற்றி மார்க்சும் எங்கெல்சும் 54
5. கருந்துளை; அறிதல், அறிவியல், இயக்கவியல் பொருள் முதல்வாதம்! . . . 59

1. வளர்ச்சி என்ற பெயரில் நிகழும் வன்முறைக்கு எதிராக…

விஜூ கிருஷ்ணன்

தமிழில்: என். சுரேஷ் குமார்

கார்ப்பரேட் ஆதரவு சக்திகள், அரசின் துணையோடு பெருமளவு நிலங்களை கையகப் படுத்த முயற்சிக்கின்றன. எனினும், அவர்களது இந்த நடவடிக்கைகளை, நில உரிமையாளர்கள் மற்றும் நிலத்தை சார்ந்தவர்கள் முன்னெப் போதும் இல்லாத அளவிலான ஒற்றுமையோடு எதிர்கொள்ளத் தொடங்கியுள்ளனர்.

இந்தியா முழுமையும் கற்பனைக்கெட்டாத வகையில் நில அபகரிப்பு அரங்கேறி வருகிறது. மத்திய, மாநில அரசுகள், இந்திய, அந்நிய நிறு வனங்கள் மற்றும் தனிநபர்களும் கூட பெருமளவு நிலங்களை, மிகக் குறைந்த விலை கொடுத்து வாங்குகின்றனர்; அல்லது நீண்ட கால ஒப்பந்தம் மூலம் கையகப்படுத்துகின்றனர். சிறப்புப் பொருளா தார மண்டலங்கள், தேசிய முதலீடு மற்றும் உற்பத்தி மண்டலங்கள், தொழில்துறை கூடங் கள், பொருளாதாரக் கூடங்கள், ஸ்மார்ட் சிட்டி உள்ளிட்ட பல புதிய பெயர்களோடு முன்னெடுக் கப்படும் பிரம்மாண்டமான திட்டங்கள் என்ற போர்வையில், இவர்கள் தடையற்ற மூலதன திரட்சிக்குச் சாதகமாகத் திகழ்பவர்களேயன்றி வேறல்லர்.

இவ்வாறான ஆக்கிரமிப்புகள், பலம் கொண்ட கார்ப்பரேட்டுகளின் சார்பாக, அரசின் தீவிர மான, திமிர்த்தனமான தலையீட்டையே வெளிப் படுத்துகின்றன. நாடு முழுவதும் அரங்கேறுகிற இத்தகைய தளவாடக் கூடங்கள், தேசிய முதலீடு மற்றும் உற்பத்தி மண்டலங்கள், சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் ஆகியவை பல லட்சக்கணக்கான மக்களின் வாழ்க்கையை சூறையாடி வருகின்றன. முன்பு காலனியாதிக்க காலத்தில், எப்படி தேச எல்லைகள், அப்பகுதிகளில் வாழ்ந்து வந்த மக்களுக்கு அற்ப மதிப்பளித்து, வெறும் காகிதங்களில் வரைபடங்களாக வரையப்பட்டனவோ, அதனையொத்த ஒரு நடவடிக்கை இது எனலாம். ஆனால், காலனியாதிக்க யுகத்தைப் போலன்றி, இத்திட்டங்கள் மிகப் பெரும் கொந்தளிப்புகளை உருவாக்கியுள்ளன.

இவை பெருமளவு நிலங்களிலிருந்து அங்கிருந்த மக்களை அப்புறப்படுத்தியுள்ளன. இந்தப் பிரம் மாண்டமான கட்டமைப்புத் திட்டங்கள், தொழில் துறை கூடங்கள், சுரங்கங்கள், துறைமுகங்கள் மற்றும் பாசனம், நிலம் மற்றும் மனை சார்ந்த திட்டங்கள், விவசாயிகள், பழங்குடி மக்கள், வனவாசிகள், மீனவ சமூகத்தினர் மற்றும் ஏற் கனவே நிலையற்ற வாழ்நிலையில் உழலும் விளிம்பு நிலை மக்களை வெளியேற்றுகிற நடவடிக்கையை உள்ளடக்கியதாக உள்ளன. போராடிப் பெற்ற நில உரிமைகளை கிழித்தெறியவும், இந்த வாழ் வாதாரச் சூறையாடல் வகைசெய்கிறது.

மேலும், மாற்று இடம் வழங்கி, மறுவாழ்வு மற்றும் மீள் குடியேற்ற வாய்ப்புகள் ஏதுமின்றி, அனைத்து நீதிக் கோட்பாடுகளையும் இது காற்றில் பறக்க விட்டுள்ளது. மூலதனத்தின் கண்மூடித்தனமான இத்தாக்குதல் எதிர்ப்புக்குள் ளாகாமல் இல்லை. நில அபகரிப்பு நடைபெற்ற இடங்களிலெல்லாம், அனைத்துத் தரப்பு மக்கள் கூட்டாக இணைந்தும், பாதிக்கப்பட்ட மக்கள் முன்னெப்போதும் கண்டிராத ஒற்றுமை உணர்வோடும் தொய்வற்ற போராட்டங்களை முன்னெடுப்பதை நம்மால் காண முடிகிறது.

நவீன தாராளமய முன்னெடுப்பு

பழமையான காலனியாதிக்க கால நிலம் கையகப்படுத்தல் சட்டம் 1894ன் படி நிலங்களை அபகரிப்பிற்கு எதிரான பெரும் எதிர்ப்புகள், பல்லாண்டுகளாகவே, இந்தியாவின் வெவ்வேறு பகுதிகளிலும், கொடூரமான அடக்குமுறைக்கு ஆளாயின; உயிர் பலிகளும் ஏற்பட்டன. காங் கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி (யுபிஏ) அரசு, பலதரப்பட்ட உடைமை யாளர்களுடனான விரிவான கலந்தாய்வு மற்றும் பாராளுமன்ற விவாதங்களுக்குப் பின்பு, உரிய இழப்பீடு மற்றும் வெளிப்படையான நிலம் கையகப்படுத்தல் உரிமையை உறுதி செய்ய, நிலம் கையகப்படுத்தல், மறுவாழ்வு மற்றும் மீள்குடியேற்ற சட்டம் 2013 ஐ நிறை வேற்றிட நிர்ப்பந்திக்கப்பட்டது.

நிலம் கையகப்படுத்தல், மறுவாழ்வு மற்றும் மீள்குடியேற்ற சட்டம் 2013 பல குறைபாடுகளைக் கொண்ட தாக இருந்தது. அகில இந்திய விவசாயிகள் சங்கம், மக்கள் இயக்கங்களின் தேசிய கூட்ட மைப்பு போன்ற அமைப்புகள்

மற்றும் இடது சாரிக் கட்சிகளால் அவை சுட்டிக்காட்டப்பட்டு, பாராளுமன்றத்தில் சட்டத்திருத்தங்களாக கொண்டு வந்ததன் மூலம், விவசாயிகளின், நிலம் சார்ந்து பிழைப்பவர்களின் நலன்களை பாது காக்க வல்லதாக வலுப்படுத்தப்பட்டது. இச்சட்டத் தின் இறுதி வடிவமானது, (காங்கிரஸ் மற்றும் பாஜக இடையிலான சமரசத்தைத் தொடர்ந்து) நீர்த் துப் போனதாக இருந்தாலும், முந்தைய காலனிய காலத்து சட்டத்தை விட மேம்பட்டதாகவே இருந்தது. குறிப்பாக, முன்னரே தெரிவித்து ஒப்புதல் பெற வேண்டும் என்ற நெறிமுறை, சமூக தாக்கம் குறித்த மதிப்பீட்டு கொள்கை இணைப்பு மற்றும் தேசத்தின் உணவுப் பாதுகாப்பு நலன் களை உறுதி செய்வது ஆகியன ஆகும்.

ஆட்சிக்கு வந்த பின், தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு நிலம் கையகப்படுத்தல், மறுவாழ்வு மற்றும் மீள்குடியேற்ற சட்டம் 2013 மீதான அதன் முந்தைய நிலைப்பாட்டிலிருந்து பின் வாங்கிய தோடு, டிசம்பர் 2014-ல் அவசரச் சட்டங்கள் வாயிலாக சட்டத்திருத்தங்களை மேற்கொள்ளப் பார்த்தது. கார்ப்பரேட் லாபமீட்டலுக்கும், நிலச் சூதாட்டத்திற்கும் உகந்த வகையில் நில அபகரிப் பினை இது இலகுவாக்கியது. நடைமுறையில், பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்திலும் கூட இல்லாத வகையில் தனியார் கம்பெனிகளுக்காவும் நிலங் களை கையகப்படுத்தலாம்; அதற்கு ஒப்புதல் பெற வேண்டிய அவசியமில்லை என்ற சாரத்தைக் கொண்டிருந்ததால், காலனியாதிக்கத்தை விட மிகவும் பிற்போக்கான நிலைக்குத் தள்ளியதாக இத்திருத்தம் அமைந்தது.

காலனியாதிக்க சட்டத்தின்படி, விவசாயி களின் ஒப்புதலைக் கோராமலேயே, பிரத்யேக அதிகார கோட்பாட்டின் கீழ் வலுக்கட்டாயமாக நிலங்களைப் பறிக்க முடியும். எனினும், அவை அரசின் திட்டங்களுக்காக மட்டுமே செய்யப் பட்டது. பாஜக அரசானது, ஜெர்மனியின் நாஜி காலத்திய நடவடிக்கைகளைப் போன்று, சட்டங் கள் இயற்றப்பட்டுவிட்டால், பொது பயன்பாடு என்ற பெயரில் கட்டுப்பாடற்ற நிலக் கையகப் படுத்தலை மேற்கொள்ள தடையேதும் இருக்க முடியாது என்கிறது.

இதன் விளைவாக, காலனியாதிக்க நிலம் கையகப்படுத்தல் சட்டம் 1894ன் கொடூரமான பல சரத்துக்கள் மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்டுள்ளன.

விவசாயிகளிடமும், நிலம் சார்ந்து பிழைப்பவர் களிடமும் ஒப்புதல் கோருவது அவசியம் என்ற பிரிவை அகற்றியதன் மூலம், சமூகம் மீதான தாக்கத்தின் மதிப்பீட்டை முற்றிலுமாகத் துடைத்தெறிந்துள்ளது. புதிய பிரிவின் கீழான திட்டங்களுக்கு இந்நிபந்தனைகளிலிருந்து விலக்களிக்கப்படுகின்றது.

இது ஐந்து பகுதிகளை உள்ளடக்கிய சிறப்புப் பிரிவாகும். அதில் தொழிற்சாலைக் கூடங்கள் மற்றும் படுபாதகமான பொது-தனியார் கூட்டு என்ற பெயரிலான கட்டமைப்புத் திட்டங்களுக் கான நிலங்களும் அடங்கும். பெரும்பாலான கையகப்படுத்தல்கள் இவ்விரு பிரிவின் கீழ் வந்து விடுகிற காரணத்தால், நிலம் கையகப்படுத்தல், மறுவாழ்வு மற்றும் மீள்குடியேற்ற சட்டம் 2013 லிருந்த குறைந்தபட்ச பாதுகாப்புகளையும் இல்லாமல் செய்து விட்டனர். அதோடு, வல்லுனர்களைக் கொண்ட மறுஆய்விற்கான வாய்ப்பும் மறுக்கப் பட்டு விட்டது.

அரசு, தொழிற்சாலைக் கூடங்களுக்கான வரையறையை, அக்கூடங்களுக்குச் செல்லும் குறிப்பிட்ட சாலை அல்லது தண்டவாளங்களின் இருபுறமும் உள்ள ஒரு கிலோமீட்டர் வரையி லான நிலங்களையும் உள்ளடக்கியது என மாற்றியிருக்கிறது. அகில இந்திய விவசாயிகள் சங்கம் உள்ளிட்ட அமைப்புகள், தேவையான அளவிற்கு மட்டுமே நிலங்கள் கையகப்படுத்தப் படுவதையும், நில உரிமையாளர்கள் சட்டப்பூர் வமாக பாதுகாக்கப்படுவதை உறுதிசெய்யும் வழிவகைகள் அவசியம் என கோரிக்கை விடுத் துள்ளன.

நீர்த்துப் போகும் சமூக உரிமைகள்

எனினும், நில உரிமையாளர்கள், நிலம் சார்ந்தவர்கள் ஆகியோரின் உரிமைகள் மற்றும் சமூக உரிமைகள் நீர்த்துப் போகச் செய்யப்பட் டுள்ளன. மேலும், அடிப்படை வெளிப்படைத் தன்மை கோட்பாடுகள் கண்டு கொள்ளப்பட வில்லை. பல பயிர் விளையும் விளைநிலங்கள் மற்றும் நன்செய் விளைநிலங்களும் கூட எவ்வித நிபந்தனைகளுமின்றி அபகரிக்கப்படலாம் என்ற தன் வாயிலாக, உணவு பாதுகாப்பு சார்ந்த பாது காப்பு அம்சங்கள் யாவும் முற்றிலுமாக கைவிடப் பட்டுள்ளன.

நில உரிமையாளர்கள், நிலம் சார்ந்தவர்கள் நலன்களுக்கான குறைந்தபட்ச

அடிப்படை மறுவாழ்வு, மீள் குடியேற்றத்திற்கான வாய்ப்பு கள் இதன்மூலம் முழுவதுமாக மறுக்கப்பட் டுள்ளன. நிலப் பயன்பாடு குறித்த கொள்கை களுக்கான முன்மொழிவுகள் ஏதும் மத்திய, மாநில அரசுகளிடம் இல்லை. அதிவேகமாக விரிவாகும் வருவாய், நிலப்பயன்பாட்டில் மாற்றங் களுக்கு வழிவகுப்பதோடு, கார்ப்பரேட் நிறுவனங் களின் கைகளில் முடிவில்லா லாபம் கொழிக்க இது வகை செய்கிறதே தவிர, உண்மையான நில உரிமையாளர்கள், நிலம் சார்ந்தவர்களுக்கு உரிய பங்கினை அளித்திட எந்த வழிமுறைகளும் செய்யப் படவில்லை.

குடும்பத்தில் ஒருவருக்கு பணி வழங்கப்படும் என அரசு சொல்வதென்பதும், குடும்பத்தின் ஒட்டுமொத்த வாழ்வாதாரத்தை முழுவதுமாகப் பறித்து விட்டு, பெயரளவிற்கான ஒரு வேலையை தருவதேயாகும். இது இந்தியாவில் விவசாயம் என்பது பெரும்பாலும் விவசாயிகள் ஒட்டு மொத்த குடும்பமாக ஈடுபடுகிறார்கள் என்ற அடிப்படையை தகர்ப்பதாகும். மேலும், பலருக்கு ஏற்படும் இழப்புகளை ஒரு சிலருக்கு, பெயரளவில் பணி வழங்கி ஈடுசெய்யமுடியாது.

ஒன்றுதிரளும் பாதிக்கப்பட்டோர்

இந்த நடவடிக்கைகள் நாடு முழுவதும் முன்னெப்போதும் இல்லாத எதிர்ப்பலைகளை உருவாக்கியது. தங்கள் நிலம் பறிப்பு, இருந்த ஒரே வாழ்வாதாரமும் இழப்பு என்ற வகையில், விவசாயிகள், நிலம் சார்ந்தவர்கள் ஒன்றுபட் டுள்ளனர். விவசாயிகளின் அமைப்பான அகில இந்திய விவசாயிகள் சங்கம், ஏனைய விவசாயத் தொழிலாளர்கள், ஆதிவாசிகள், தலித்துகள், வனவாசிகள் உள்ளிட்ட அனைவரையும் இணைத்து ‘பூமி அதிகார் அந்தோலன்’ (நில உரிமைகளுக் கான இயக்கம்) என்ற அமைப்பு உருவாக்கப்பட்டு, பெரும் எதிர்ப்பியக்கம் கட்டமைக்கப்பட் டுள்ளது. எதிர்க்கட்சிகளும் பாராளுமன்றத்திற்கு உள்ளேயும், வெளியேயும் அவசரச் சட்டத்திற்கு எதிராக ஒன்று திரண்டுள்ளன. அரசியல் நெருக் கடிகளாலும், தேர்தலைக் கணக்கில் கொண்டும் மத்திய அரசு இம்முன்மொழிவுகளை ஒத்தி வைத்தது என்றாலும், அது தற்காலிகமானதே.

பாஜகவின் அதிரடி முயற்சிகள்

இருக்கின்ற நிலச்சீர்திருத்தம், நிலம் கையகப் படுத்தல், நில குத்தகை மற்றும்

நிலப்பயன் பாட்டுச் சட்டங்களை புரட்டிப் போடுகிற முயற்சி கள் அதிவேகமாக முடுக்கி விடப்பட்டுள்ளன. டுஹசுசு 2013ஐத் திருத்துகிற தொடர் முயற்சிகள் தோல்வி கண்டதால், பா.ஜ.க நிலச்சீர்திருத்தத் திற்கான தன்னுடைய நிகழ்ச்சி நிரலை, தான் அல்லது தனது கூட்டணிக் கட்சிகள் ஆளும் மாநிலங்களில் நிலச்சட்டங்களில் கைவைப்பதன் மூலம் அமலாக்க முனைந்துள்ளது.

சுதந்திரமாக செயல்படுவதாக பாசாங்கு கூட செய்யாத, நிதி ஆயோக், நிலம் சார்ந்த சட்டங் களில் உள்ள பயனுள்ள பல சரத்துக்களை நீர்த்துப் போகச் செய்ய பரிந்துரைத்துள்ளது. பல மாநிலங்கள், அதன் நில உச்சவரம்பு மற்றும் நிலப் பயன்பாட்டுச் சட்ட திட்டங்களைத் திருத்தி யுள்ளன. வசுந்தரா ராஜே தலைமையிலிருந்த பாஜக அரசு, ராஜஸ்தானில், சிறப்பு முதலீட்டு பகுதிச் சட்டம் மற்றும் நிலக் குவிப்பு திட்டத்தை சட்டமாக்கியுள்ளது.

ஆகஸ்ட் 2016ல் குஜராத், உரிய நிவாரணம் மற்றும் வெளிப்படையான நிலம் கையகப் படுத்தல் உரிமை, மறு வாழ்வு, மீள்குடியேற்றம் (குஜராத் சட்டத்திருத்தம்); ஆந்திராவில், நில சேகரிப்புச் சட்டம் என்ற பெயரிலும்; தெலுங்கானா 123 அரசு ஆணை வெளியிட்டு, அது உயர்நீதி மன்றத்தால் தடை செய்யப்பட்டதால், உரிய நிவாரணம் மற்றும் வெளிப்படையான நிலம் கையகப்படுத்தல் உரிமை, மறு வாழ்வு, மீள் குடியேற்றம் (தெலுங்கானா சட்டத்திருத்தம்) சட்டம் 2016 போன்ற சட்ட ரீதியான முயற்சிகள், நிலம் கையகப்படுத்துவதை இலகுவாக்கியது.

ஜார்க்கண்ட் பா.ஜ.க அரசானது, சோட்டா நகர் குத்தகை சட்டம் 1908ல் திருத்தங்களை மேற்கொண்டதோடு, சட்ட விரோத நில உரிமை மாற்றத்திற்கு எதிராகவும், சட்ட விரோதமாக மாற்றப்பட்ட பழங்குடி நிலங்களை அதன் உண் மையான உரிமையாளர்களுக்கே மீண்டும் தரு வது என்ற சரத்துக்களையும் கொண்ட சந்தால் பர்கானா குத்தகைச் சட்டம் 1949லும் சட்டத் திருத்தங்களை மேற்கொண்டது.

பா.ஜ.க மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகள் ஆளும் மாநிலங்களில் நவீன தாராளமயக் கொள்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. அதே நேரத்தில், காங்கிரஸ்- ஐக்கிய ஜனதா தளம் ஆளும் கர்நாடகா, பிஜூ ஜனதா தளம் ஆளும் ஒடிசா ஆகியவையும் இதில் சளைத்தவையல்ல. அவர்களும் நில அபகரிப்பினை எளிமையாக்கும் சட்டதிட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

மிகவும் ஒடுக்கப்பட்ட பிரிவினரான தலித்து கள், ஆதிவாசிகள் இக்கொள்கைகளினால் மிகக் கொடூரமான தாக்குதல்களுக்கு உள்ளாகின்றனர். பஞ்சாயத்து (பட்டியல் பகுதிகளுக்கான விரி வாக்கம்) சட்டம் 1996, வன உரிமை கள் சட்டம் 2006, அரசியலமைப் பின் 5வது அட்டவணை உள்ளிட்டவை, சந்தே கத்திற்கு இடமின்றி பழங்குடியினர் நிலங்களை விற்பதோ, அவர்களுக்குள் மாற்றுவதோ தடை செய்யப்பட்டுள்ளது அல்லது தடுக்கப்பட்டுள் ளது என்று கூறினாலும், வளம்மிக்க அப்பகுதிகள் அதிகமாக குறி வைக்கப்படுவதோடு, இப்பகுதி களில்தான் சட்டத்திற்கு புறம்பான நில அபகரிப்பு புகார்கள் அதிகமாக எழுந்துள்ளன.

துயரங்களுக்கு இட்டுச் செல்லும் கூடங்கள்

இப்பின்னணியில் பெருமளவு நிலம் கையகப் படுத்தல், விவசாய நிலங்கள், வன நிலங்கள், சிறப்பு பொருளாதார மண்டலங்களுக்கென, சுரங்கம், தொழிற்சாலைகள் மற்றும் நகர்மய மாதலுக்கான சீரமைப்பு வேலைகள் நடைபெற்று வருகின்றன. சிறப்புப் பொருளாதார மண்டலங் கள் மற்றும் தொழில்மயமாக்கல் என்ற பெயரில் நிலம் கையகப்படுத்தலானது பெரும்பாலும் முறையற்ற வகைகளிலும், நில மனை விற்பனை நோக்கத்திற்கென தவறாகவே பயன்படுத்தப்பட்டு வருகிறது.

தலைமை தணிக்கை அதிகாரியின் அறிக்கை, சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கு குறிப் பிடப்பட்ட நிலங்களுள் பயன்படுத்தப்படாதவை பற்றிச் சொல்லியுள்ளது. 2014-ல் சிறப்புப் பொருளா தார மண்டலங்களுக்கு ஒதுக்கப்பட்ட 45,053.63 ஹெக்டேர் நிலத்தில், 28,488.48 ஹெக்டேரில் மட்டுமே பணிகள் துவங்கப்பட்டுள்ளன. 17 மாநிலங்களில் சட்டங்கள் மீறப்பட்டுள்ளதாக வும் அந்த அறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது.

96.58 சத சிறப்புப் பொருளாதார மண்டல நிலங்களை உபயோகிக்காமல் ஒடிசா மாநிலம் இதில் மிக மோசமான, முதன்மைக் குற்றவாளி யாக உள்ளது. இம் மாநிலத்தில், சட்டத்திற்குப் புறம்பாக இந்த நிலங்களை அடமானம் வைத்து, பத்தாண்டுகளில், ரூ.75,000 கோடிகளுக்கும் மேலாக பெறப்பட்டுள்ளது. 2 சதவீதத் திட்டங் கள் மட்டுமே தொடங்குவதற்கான தயார் நிலை யில் உள்ளன. கையகப்படுத்தப்பட்ட நிலக்கரி சுரங்கங்கள் மற்றும் அதனைச் சார்ந்த நிலங்களை

குறிவைத்துப் பெற்ற பெரும்பான்மை நிறுவனங் கள் அவற்றின் சொந்த மதிப்பை உயர்த்திக் கொள்வதைத் தவிர வேறெதற்கும் அவற்றைப் பயன்படுத்தவில்லை.

பொதுப்பயன்பாடு என்று சொல்லி சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கென கையகப் படுத்தப்பட்ட பல ஹெக்டேர் நிலங்கள் பின்னர் வேறு பல காரணங்களுக்காகப் பயன்படுத்தப் பட்டன; அல்லது விற்கப்பட்டுள்ளன. சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கு என கைப் பற்றப்பட்ட நிலங்களை மடைமாற்றிய பல நிறுவனங்களில் ரிலையன்ஸ் குழுமம் மற்றும் எஸ்ஸார் ஸ்டீல்ஸ் ஆகியவை உள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

சிறப்புப் பொருளாதார மண்டல சட்டம் 2005 அமலாக்கப்பட்டதிலிருந்து, 60,374.76 ஹெக் டேருக்கான 576 சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கு முறையான ஒப்புதல்கள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் 45,635.63 ஹெக் டேர் அளவுள்ள 392 சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கான அறிவிக்கை மார்ச் 2014ல் வெளியிடப்பட்டது. அறிவிக்கப்பட்ட 392ல் வெறும் 152 மட்டுமே செயல்பட்டன. மேலும், தணிக்கை அறிக்கையின்படி, சிறப்புப் பொருளா தார மண்டலங்களால் இந்தியப் பொருளா தாரத்தில் குறிப்பிடத்தக்க எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்த முடியவில்லை.

ஒரு தகவல் அறியும் உரிமைச் சட்ட கேள்வி யின்படி, முந்தைய சட்டங்கள் தான் மேம்பாட் டுக்கான திட்டங்களைத் தடுத்தன என்ற அரசின் வாதங்கள் முரணானவை என்பதை தெளிவு படுத்தி உள்ளது. 804 தொழிலகத் திட்டங்களில் 8 சதம் மட்டுமே நிலம் கையகப்படுத்தல் பிரச்சினைகளினால் தடைபட்டவை ஆகும்.

தொழிற்சாலை மற்றும் பொருளாதார கூடங் களின் சங்கிலித் தொடர் நாடு முழுவதும் திட்ட மிடப்பட்டது. டெல்லி – மும்பை தொழிற் கூடத்திற்கு 1,483 கி.மீ நீளமுள்ள, 6 மாநிலங் களைச் சார்ந்த பகுதிகள் ஒதுக்கப்பட்டது. தேசிய முதலீடு மற்றும் உற்பத்தி மண்டலத்திற்கென 6 லட்சம் ஹெக்டேர் கணக்கிடப்பட்டுள்ளது. (ஒரு ஏக்கர் – 0.4 ஹெக்டெர்). விசாகபட்டினம் – சென்னை தொழிற்சாலை கூடங்கள் 800 கி.மீ நீளத்தில், கிழக்குக் கடற்கரைக் கூடத்தின் ஒரு பகுதியாக விளங்குகிறது.

ஆந்திராவில் மட்டும் 4 முனைகள் மற்றும் 11 சாத்தியமான தொகுப்புகளுக்கென

79,960 ஏக்கர் நிலம் கையகப்படுத்த எண்ணி யுள்ளனர். இதற்கெனக் கண்டறியப்பட்ட 560 கிமீ நீளமுள்ள மூன்று முனைகளும் (தமிழகம், கர் நாடகம், ஆந்திரம் தலா ஒன்று) கொண்ட, சென்னை – பெங்களூரு தொழிற்சாலை கூடத்திற் கென, 47,563 ஏக்கருக்கும் மேலான நிலம் கையகப் படுத்தப்படும் அபாயம் உள்ளது. அமிர்த்ஸர் – கொல்கத்தா தொழிற்கூடத்திற்கென 1,840 கி.மீ ல், இதுவரை 17 முனைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. பெங்களூரு – மும்பை பொருளாதாரக் கூடம், 1,000 கிமீ நீளத்தில், கர்நாடகா, மகாராஷ் டிராவில் 10, ஏனையவற்றில் தலா 2 கூடங்கள் அமையவுள்ளன. இப்புள்ளிவிவரங்கள் ஒரு சிறு அடையாளமே.

நாடு முழுவதும், ஏழு பிரத்யேக சரக்குப் பெட்டக ரயில் கூடங்களுக்கான திட்டமும், வடிவமைப்பும் பல கட்டங்களில் தயாராகி வருகின்றன. மெக்கின்சி மற்றும் வெவ்வேறு நிதியாளர்களான உலக வங்கி, ஆசிய வளர்ச்சி வங்கி மற்றும் ஜப்பான் வங்கி ஆகியவை சித்தரிக் கின்ற, தளவாடங்கள் வீணடிப்பைக் குறைப்பதற் கான முயற்சி மற்றும் சீனாவை எட்டுவதற்கான சர்வதேச ஒத்துழைப்பு என்பது, சுதந்திர வர்த்த கம் மற்றும் சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களுக்கு உதவக்கூடிய ஐ.எம்.எஃப், உலகவங்கி, உலக வர்த்தக நிறுவனம் மற்றும் சர்வதேச பொருளா தார கூட்டமைப்பு ஆகியவற்றின் ஒன்றிணைந்த மற்றும் சர்வதேசக் கூடங்களின் வலைபின்னலின் ஒரு பகுதியே ஆகும்.

அது சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்திற்கு உகந்த சட்டங்கள் மற்றும் நீதி அதிகாரத்திற்கான அனைத்து உபகரணங்களோடு, கட்டணத் தடைகள் ஏது மற்ற தடையற்ற சரக்கு பரிமாற்றத்தை அனுமதிக் கிற வகையில் அமலாகும். லைசென்ஸ்டு லார் சென்சி நூலின் ஆசிரியர் நிக்கோலஸ் ஹில்யார்டு, கட்டமைப்பு, நிதி., மற்றும் குளோபல் சவுத், இதனை இடத்தை காலத்தால் நிர்மூலமாக்குவது என்கிறார்.

அவர் மேலும் சொல்கிறார்: இது, பெரிய துரிதமான, ரயில்வே, சாலைகளை விடப் பெரியது; ஆழமான, பெரிய துறைமுகம் மற்றும் விமான நிலையங்களை விடப் பெரியது. தற்போது திட்ட மிடப்படும் கூடங்கள் யாவும், விலை நிர்ணயம் கொஞ்சம் கொஞ்சமாக ஒழிக்கப்படும் சுதந்திர வர்த்தக மண்டலங்களுமாகும். இத்தகைய பெரும் கூடங்கள், மிகப் பெரிய அளவில் செல்வ வளத்தை உறிஞ்சிடவே

உலகம் முழுவதும் கட்டமைக்கப் படுகின்றன என்றும் அவர் சொல்கிறார்.

ஆந்திர மாநில மூலதன பகுதி மேம்பாட்டு ஆணையம் 8,603 ச.கிமீ (21 லட்சம் ஏக்கர்) அளவுள்ள நிலத்தைக் குறிவைத்துள்ளது. தயா ராகி வரும் தலைநகரமான அமராவதி 53,621 ஏக்கரில் அமையவுள்ளது. அதில் 32,000 ஏக்கர் நிலம், பல்வகைப்பட்ட, பல போக விளைநிலங் களாகும். அவை யாவும், அப்பட்டமாக மிரட்டி, கட்டாயப்படுத்தி பறித்து, சேர்க்கப்பட்ட நிலங் களாகும். ஐரோப்பா, அமெரிக்கா, பிரான்ஸ், ஜெர்மனி உள்ளிட்ட எந்தவொரு பெரிய நாடு களின் தலைநகரங்கள் கூட இத்தனை பெரிய அளவு நிலத்தைக் கொண்டிருக்கவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

ஆந்திர அரசு, மசூலிப்பட்டின துறைமுகம் மற்றும் தொழிலகக் கூடத்திற்கென ஒரு லட்சம் ஏக்கர் நிலத்தை கைப்பற்ற இலக்கு நிர்ணயித்துள்ளது. ஒரு பொருத்தமான துறைமுகத்திற்குத் தேவையானதை விட பலப்பல மடங்கு நிலங்களை கையகப்படுத்தும் பெரும் நடவடிக்கையாகும் இது. மாநில அரசு 4 லட்சம் ஏக்கரை இதுவரை கையகப்படுத்தியுள்ளதோடு நிலவங்கிக்கென இன்னும் ஏழு லட்சம் ஏக்கர் நிலங்களை கைப்பற்ற திட்டமிட்டுள்ளது. தெலுங்கானா அரசும் 6 லட்சம் ஏக்கரை கையகப் படுத்தியுள்ளதோடு, இன்னும் பல லட்சம் ஏக்கர் நிலத்தை கைப்பற்ற திட்டமிடுகிறது.

நிதி ஆயோக், கடற்கரையோர பொருளாதார மண்டலங்களை சீரமைக்கப் பரிந்துரைத்துள்ளது. அவற்றில் 2,000 முதல் 3,000 சதுர கி.மீ. அல்லது 5 முதல் 7.5 லட்சம் ஏக்கர் பரப்பளவுள்ள, சுற்றுச் சூழல் சீரழிவிற்கு ஆளாகக் கூடிய நிலங்களை உள்ளடக்கிய, இரண்டு திட்டங்கள் திட்டமிடப் பட்டுள்ளன. சாகர்மாலா திட்டம், 12 துறைமுகங்கள், 1,208 தீவுகளென விரிவாக்கப்பட உள்ளது. ஊடக தகவல் ஆணையத் தகவலின்படி, 2015 முதல் 2035 வரை படிப்படியாக, 415 திட்டங்களை, சுமார் 8 லட்சம் கோடி முதலீட்டில், புதிய துறை முகங்கள், துறைமுக நவீனமயம், மேம்பட்ட துறைமுக இணைப்பு, துறைமுகத்துடன் பிணைக் கப்பட்ட தொழில்மயம், கடற்கரையோர சமூக மேம்பாடு போன்றவை செயல்படுத்தப்பட உள்ளன.

உத்தரபிரதேசத்தில் நிலம் கையகப்படுத்தலால் 23,000 கிராமங்கள் பாதிக்கப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. யமுனா விரைவு பாதையைப்

பொறுத்தவரை 1.43 லட்சம் ஏக்கர் நிலம் கையகப் படுத்தப்பட்டுள்ளது. கங்கை விரைவு பாதைக்கு 37,362 ஏக்கர், பிரத்யேக சரக்கு கூடங்களுக்கென ஆயிரக்கணக்கான ஏக்கர் விளைநிலங்கள் கைய கப்படுத்தப்பட உள்ளன. யமுனா விரைவு பாதைக் கென எடுக்கப்பட்ட நிலங்களில் பெருமளவு நிலங்கள், கோல்ஃப் மைதானம், ஃபார்முலா 1 ரேஸ் தடங்கள் மற்றும் வேலைவாய்ப்புகளை தராத திட்டங்களுக்கென பயன்படுத்தப்படுகின்றன. முன்மொழியப்பட்டுள்ள 100 ஸ்மார்ட் சிட்டி திட்டமும் பரந்துபட்ட இடம்பெயர்விற்கே வழிவகுக்கும்.

இத்திட்டங்களுக்கென தவறாகப் பயன்படுத்தப்படும் தண்ணீர், கடும் ஏற்றத்தாழ்விற்கும், பற்றாக்குறைக்கும் இட்டுச் செல்லும் என்பதே உண்மை. குறிப்பாக, மியான்மர் எல்லைக்கு அருகில் உள்ள ஸ்மார்ட் சிட்டியான மணிப்பூர், சுற்றுச்சூழல் சீரழிவுக்கான அபாயம் மிக்கதாகும். அது மக்கள் தொகையில் ஏற்றத்தாழ்வுகளை உருவாக்குவதோடு, முக்கியமாக பழங்குடி மக்கள் வாழும் பகுதிகளில் சமூகப் பதற்றத்திற்கு வித்திடுவதுமாகும்.

பிரம்மாண்ட பாசனத் திட்டங்களான போலாவரம் அணை, மல்லனாசாகர் (ஆந்திரா/தெலுங் கானா) ஆகியன ஒடிசா, சட்டிஸ்கர் ஆகிய மாநிலங்களில் கடும் தாக்கங்களை உருவாக்குவதோடு, பெரிய அளவு நிலஅழிவிற்கும் வழிவகுக்கும். அரசு விவரங்களின் படி, ஆந்திரா, தெலுங்கானா, போலாவரம் திட்டம், 276 கிராமங்களைப் பாதிக் கின்ற வகையில், ஒரு லட்சம் ஏக்கர் விவசாய நிலங்களை உள்ளடக்கியதாகும். மல்லனாசாகர் திட்டத்திற்கு, 18,000 ஏக்கர் கையகப்படுத்தப்பட்டதில் 16 கிராமங்கள், 5,000 ஏக்கர் உள்ளடங்கியதாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. தற்போது குடிபெயரும் மக்களுக்கு என்ன காத்திருக்கிறது என்பதை நர்மதா பள்ளத்தாக்கு மக்களின் மிக மோசமான மறுவாழ்வு மற்றும் மீள்குடியேற்ற அனுபவங்களே சுட்டிக்காட்டும்.

இவ்வாறு நிலம் கையகப்படுத்தப்பட்ட இடங்களிலெல்லாம், விளிம்பு நிலையில் உள்ள நிலமற்ற, குத்தகைதாரர்கள், விவசாயத் தொழி லாளர்கள், தலித்துகள், ஆதிவாசிகள் உள்ளிட்ட மக்களே மிகக்கடுமையான தாக்குதல்களுக்கு ஆளாகியுள்ளனர். ஆந்திராவில் தலித் மற்றும் ஆதிவாசி மக்களுக்கு ஒதுக்கப்பட்ட நிலங்கள், அதனையொத்த மேல் சாதியினரின் நிலங்களை விட மிகக் குறைவான

விலை கொடுத்து பறிக்கப் பட்டுள்ளது.

எவ்வித இழப்பீடோ அல்லது மறுவாழ்வு மற்றும் மீள்குடியேற்றங்கள் இல்லாமல் அரசு தன்னிச்சையாக நிலங்களை எடுத்துக் கொண்டதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. பயனற்ற நிலங்கள் பற்றிய சர்வே, பல தலைமுறைகளாக பயிர் செய்து வரும் சிறிய, நடுத்தர விவசாயிகளை வலுக்கட்டாயமாக வெளியேற்றுவதற்கு பயன்பட்டுள்ளது. கர்நாடகாவில், பாஹிர்ஷுகும் விளைச்சல்தாரர்கள் என அழைக்கப்படும் 40 லட்சம் பயிரிடுவோர் அம்மாநில காங்கிரஸ் அரசின் கொள்கையால் நிலங்களிலிருந்து வெளியேற்றப்படும் அபாயத்தில் உள்ளனர்.

நிலம் கையகப்படுத்தல் நடவடிக்கையானது செல்வ வளம் மற்றும் வாழ்வாதாரங்களை மக்களிடமிருந்து பறித்து, கார்ப்பரேட்டுகளுக்கு மடைமாற்றும் வகையில் திரட்டிடும் ஆகப் பெரும் முதன்மை கருவியாக உருவெடுத்துள்ளது. அரசின் பாத்திரம் மிகப் பெரும் ஏமாற்றமளிப் பதாக இருப்பது இனியும் தொடர முடியாது. அதிகாரவர்க்கத்தின் சார்பாக அரசு அதி தீவிரமாக தலையிட்டு, அவர்கள் வைத்திருக்கும் சிறு நிலத்திலிருந்து மக்களை வெளியேற்றுவதோடு, பாதிக்கப்பட்டவர்களுக்கு இருந்த சட்டரீதியான பாதுகாப்புகள் அனைத்தையும் தகர்த்தெறியவும் அனுமதிக்கிறது.

FRA மற்றும் PESA ஆகிய சட்டங்கள் அப்பட்டமாக மீறப்பட்டு, பட்டியலிடப்பட்ட பகுதிகளில் லட்சக்கணக்கானோர் வன உரிமை, நில பட்டா, விண்ணப்பங்கள் ஆகியவை திட்டமிட்டு மறுக்கப்பட்டன. இமாச்சலப் பிரதேசத்தில் தலித் மக்களுக்கான நிலங்கள்; ஆந்திரா, தெலுங்கானாவில் ஏழை மக்களுக்கான டி ஃபார்ம் பட்டாக்கள், தலித் நிலம் மற்றும் ஏனைய மாநிலங்களில் உள்ள எளிய மக்களின் நிலங்கள் தற்போது அபகரிப்பிற்கென குறிவைக்கப்பட்டு வருகின்றன. குத்தகை விவசாயிகள், நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள், கிராமப்புற ஏழைகள் ஆகியோர் மறுவாழ்வு, மீள்குடியேற்றம் மற்றும் வாழ்நிலை பாதுகாப்பு மறுக்கப்பட்டவர்களாக உள்ளனர். LARR 2013ஐ மறுதலிப்பதால் நிலம் சார்ந்து இருப்பவர்களுக்கான குறைந்த பட்ச பாதுகாப்பும் சூறையாடப்பட்டுவிட்டது.

வேதாந்தா வழக்கில், 2013ல் உயர்நீதிமன்றம் 12 கிராமப்புற பஞ்சாயத்துக்கள்

ஒடிசாவின் நியாம்கிரி மலையின், டோங்கியா கொந்த், குடியாகந்தா மற்றும் ஏனைய மலைவாழ் மக்கள், மலைகளின் மீதான மதம் சார்ந்த மற்றும் ஏனைய உரிமைகளை அவர்களே தீர்மானிக்கலாம் என தீர்ப்பளித்தது. மேலும், நியாம்கிரி மலையடிவாரத்தில் உள்ள லாஞ்சிகார் சுரங்கத்தில் பாக்சைட்டை வெட்டியெடுப்பது, அவர்களது பாரம்பரிய மத உரிமைகளை பாதிக்கிறதா, இல்லையா என்பதை அவர்களே தீர்மானிக்கலாம் என்று உரிமையையும் வழங்கியது.

மேலும், சிறப்பு வாய்ந்த இத்தீர்ப்பு, சுரங்கத்தால் உரிமைகள் பாதிக்கப்படுமானால், சுரங்கம் தோண்ட வழங்கப்பட்ட உரிமை ரத்து செய்யப் பட்டதாக கருதப்படும் என்றும் தீர்ப்பளித்தது. ஒடிசா சுரங்க நிறுவனம், வேதாந்தாவுடன் கைகோர்த்து திட்டமிட்ட சுரங்கத் திட்டத்தை அந்த 12 கிராம பஞ்சாயத்துகள் ஏக மனதோடு நிராகரித்தன. சுற்றுச்சூழல் அமைச்சகம் திட்டத்திற்கு வழங்கிய ஒப்புதலை ரத்து செய்தது.

பழங்குடி மக்கள் ஒப்புதல் பெறுவதை கைவிடச் செய்ய பாஜக தலைமையிலான பா.ஜ.க கூட்டணி அரசு தொடர்ந்து முயற்சித்தது. சமீபத்திய உதாரணமாக, ஜார்க்கண்டில் விவசாய நிலங்களை விவசாயம் அல்லாத நிலங்களாக மாற்ற அனுமதிக்கும் வகையில் பழங்குடி மக்களின் நில உரிமையை பாதுகாத்து வந்த குத்தகைதாரர் சட்டத்தை திருத்தியது. மிகக்குறைவான மதிப்பீடு மற்றும் அப்பட்டமான உரிமை மறுப்பு ஆகியவற்றின் மூலம் தலித் நிலங்கள் பெருமளவில் கையகப்படுத்தப்பட்டது என பல்வேறு பகுதிகளிலிருந்தும் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

எழுச்சி மிக்க எதிர்ப்பு

விவசாயிகள், வாழ்வாதாரத்திற்காக நிலத்தை சார்ந்திருப்போர் ஒன்றுபட்டு மூலதனத்தின் தாக்குதலை எதிர்கொள்வதில்தான் அவர்களின் எதிர்காலம் அடங்கியுள்ளது என்பதை நன்கு உணர்ந்துள்ளனர். போலாவரம், மல்லனா சாகர், நர்மதா, வனம், சிறப்பு பொருளாதார மண்டலம், தொழிற்சாலை கூடங்கள், துறைமுகம் என அனைத்து வகைத் திட்டங்களுக்கு எதிராகவும் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் கடும் அடக்குமுறைக்கு மத்தியிலும் உறுதியான எதிர்ப்புகளும், போராட்டங்களும் எழுந்து வருகின்றன. பல வகையான

தொழில்மயமாதல், கனிம வள சுரண்டல், வனச் சுரண்டல், நீராதாரங்கள் சுரண்டல் உள்ளிட்ட பல கூறுகளை கவனமாக ஆய்வு செய்து, செய்த தவறுகளிலிருந்து பெற்ற படிப்பினைகளையும் இணைத்து மேற்கொள்ளப்பட்ட நிலம் கையகப்படுத்துதலை எதிர்த்த இயக்கம் மேம்பட்டதொரு நிலையை அடைய உதவியுள்ளது. பகுதி பகுதியாக பிளவுபடுதலுக்கு மாறாக, அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும், வலைப்பின்னல் தொடர்புடனான ஒன்றுபட்ட எதிர்ப்பியக்கங்கள் அவசியம் என்பதை போராட்டத்தில் ஈடுபட்ட பல்வேறு அமைப்புகளும் உணர்ந்துள்ளன.

நிலம் கையகப்படுத்தலை எதிர்த்து தொடங்கப்பட்ட பாரத் அதிகார் அந்தோலன் தற்போது பல மாநிலங்களிலும் விரிவடைந்துள்ளது. நர்மதா பள்ளத்தாக்கில் 40,000 குடும்பங்கள் வெளியேற்றப்பட்டதற்கு எதிரான போராட்டத்திற்கு தீவிரமான ஆதரவு, கந்தார் அணை பழங்குடி மக்கள் வெளியேற்றப்பட்ட போராட்டத்துடனான இணைப்பு, டெல்லி – மும்பை தொழிற்சாலை கூடத்தின் ரெய்காடு மாவட்ட கையகப்படுத்தலுக்கு எதிரான ஒன்றுபட்ட போராட்டங்களில் பரந்து பட்ட பிணைப்புகள் வலுப்பட்டுள்ளன.

மேலும் இது, அரசின் உபரி நிலங்களில் பல தலைமுறைகளாக பயிர் செய்து வரும் விவசாயிகளை பெருமளவில் வெளியேற்றுவதற்கு எதிராகவும் மற்றும் ஆதிவாசிகள் மற்றும் பாரம்பரிய வனவாசிகளின் வன உரிமைகளை பாதுகாக்கும் போராட்டங்களோடும் பிணைக்கப்பட்டுள்ளது. சிறப்புப் பொருளாதார மண்டலம், தொழில்மயம் மற்றும் இன்னும் பல பெயர்களில் கையகப் படுத்தப்பட்ட ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பல வருடங்களாகப் பயன்படுத்தப்படாமலேயே உள்ளன. இவை நிலமற்றவர்களை திரட்டுவதற்கான மற்றும் மீட்கப்பட வேண்டிய நிலங்களாக மாறப் போகின்றன. ஜமீன் வாப்சி என்ற முழக்கம் எதிர்காலத்திற்கான தெளிவான அறைகூவலாக அமையும்.

கனிம வளங்கள், வனங்கள் மற்றும் நீர் ஆதாரங்களை கொள்ளையடிக்க வழிவகை செய்வதை நோக்கமாகக் கொண்ட கண்மூடித்தனமான நில கையகப்படுத்தலுக்கு எதிரான போராட்டமானது நில மறு பங்கீடு சீர்திருத்தத்தை நோக்கிய போராட்டத்தின் ஒரு பகுதியே ஆகும். மேலும், அது வீடற்றவர்களுக்கு வசிப்பிடங்களையும், வாழ்வாதாரத்திற்கான பாதுகாப்பினையும் உறுதி

செய்வதற்கான போராட்டத்தின் ஒரு பகுதியும் ஆகும்.

விவசாயிகளைப் பொறுத்தவரை, முன்னெப்போதும் இல்லாத வகையில் சரிந்து கிடக்கும் வருமானத்தால் தள்ளாடி வருகின்ற, பெரிய அளவிலான கட்டாய நிலம் கையகப்படுத்தல் நடவடிக்கைகளால் தங்களின் ஒரே வாழ்வாதாரத்தை அவர்கள் இழந்து நிற்கும் நிலையில், மிக நீண்ட காலமாக தடைபட்டிருந்த, பரந்துபட்ட ஒற்றுமை கொண்ட எதிர்ப்பு மேடையினை உருவாக்குவதற்கான நல்ல வாய்ப்பினையும் இது ஏற்படுத்தி யுள்ளது. (கட்டுரையாளர், இணைச் செயலாளர், அகில இந்திய விவசாயிகள் சங்கம்)

2. 17வது மக்களவை தேர்தல் முடிவுகள்: உறுதிப்படுத்தப்பட்ட வலதுசாரி திருப்பம்

உ. வாசுகி

நடந்து முடிந்த 17வது மக்களவை தேர்தலில் பாரதிய ஜனதா கட்சி தீர்மானகரமான வெற்றியை ஈட்டி ஆட்சியை அமைத்திருக்கிறது. பதிவு செய்யப்பட்ட வாக்குகளில் தனியாக 37.4%, கூட்டணியாக 45% பெற்றிருக்கிறது. 200க்கும் மேற்பட்ட தொகுதிகளில் அது 50% வாக்கு சத வீதத்தைத் தாண்டியுள்ளது. இமாசல பிரதேசத் தில் 69.11%, உத்தராகண்டில் 61% பெற்றுள்ளது. தமிழகம், கேரளா, ஆந்திரா, ஓரளவு தெலுங் கானாவில் இந்தப் போக்கு பிரதிபலிக்கவில்லை. மறுபக்கம் இடதுசாரிகள் பெரும் தோல்வியை சந்தித்துள்ளனர். அவர்களின் வாக்கு சதவீதம் சரிந்துள்ளது. இவை குறித்துப் பரிசீலித்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு, இந்தச் சரிவைத் தடுத்து நிறுத்தி, நிலைமைகளில் முன்னேற்றம் காணவும், அடுத்து மக்கள் மீது வரவிருக்கும் கடும் தாக்குதல்களை எதிர்கொள்ள வும் சில கடமைகளை முன்மொழிந்திருக்கிறது.

உலக அளவில் முதலாளித்துவத்தின் தொடர் நெருக்கடி பல்வேறு நாடுகளில் அரசியலில் வலதுசாரி திருப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறது. பீப்பிள்ஸ் டெமாக்ரசியில் பேராசிரியர் பிரபாத் பட்நாயக் இதைப் பட்டியலிட்டுள்ளார். இஸ்ரே லின் நேதன்யாகு மீண்டும் தேர்வு, துருக்கியில் எர்டோகன் மீண்டும் தேர்வு, ஆஸ்திரேலியாவில் கன்சர்வேட்டிவ் கட்சி அமோக வெற்றி. லத்தீன் அமெரிக்காவின் பல நாடுகளில் வலதுசாரிகள் முன்னேறி வருகிறார்கள். பிரேசிலில் போல் சனோரோ இதற்கு மோசமான ஓர் உதாரணம். ஐரோப்பிய ஒன்றிய தேர்தல்களில் பிரான்சில் லே பென் தலைமையிலான தீவிர வலதுசாரி கட்சி மிகப்பெரும் கட்சியாகவும், இத்தாலியில் மாட்டியோ சால்வினியின் மிக மோசமான பிற்போக்கான கட்சி அந்நாட்டின் ஆகப்பெரும் கட்சியாகவும் தேர்வாகியுள்ளன. ஜெர்மனியில் ஆல்டர்னேடிவ் ஃபார் ஜெர்மனி என்ற வலதுசாரி கட்சி 10% வாக்குகளைக் கூடுதலாகப் பெற்றிருக் கிறது. ஹங்கேரியில் விக்டர் ஓப்ரான் தலைமை யிலான வலதுசாரி கட்சி வெற்றிபெறும் நிலை யில் உள்ளது. இங்கெல்லாம் நவீன தாராளமய

கொள்கைகளின் தொடர் விளைவுகளால் அனைத்துப் பகுதி மக்களும் கடும் நெருக்கடியை சந்தித்து வருகிறார்கள். வலதுசாரி சக்திகள், பிரச்னைகளை மறைப்பது என்பதை விட, பிரச்னைகளுக்குக் காரணம் புலம்பெயர் தொழிலாளி கள், கறுப்பின மக்கள், இசுலாமியர்கள் என்று கைகாட்டி பெரும்பான்மை மத/இன/உள்நாட்டு மக்களின் ஆதரவைப் பெறுகின்றனர்.

வெகுமக்கள் அதிருப்தியை சரியான அரசியல் பாதையில் கொண்டு செல்ல இடதுசாரிகள் வலுவாக இல்லாத போது, மாயத்தோற்றங் களால், வார்த்தை ஜாலங்களால், இன, மத, தேசிய வெறியைக் கிளப்பும் வலதுசாரிகள் அதை அறுவடை செய்கிறார்கள் என்ற மதிப்பீடு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் கடந்த அகில இந்திய மாநாட்டின் அரசியல் தீர்மானத்திலும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. எந்த நவீன தாராளமயப் பாதை மக்களுக்குக் கொடுமையான பிரச்னைகளை ஏற்படுத்துகிறதோ, அதே கொள் கைகளைத்தான் வலதுசாரி கட்சிகளும் கடைப் பிடிக்கிறார்கள் என்பது பல்வேறு காரணிகளால் மறைக்கப்படுகிறது. இந்த சர்வதேச போக்கினைப் போலவே இந்தியாவிலும் 5 ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்ட வலதுசாரி அரசியல் திருப்பம் தற்போது வலுவாக உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது.

பாஜகவின் தீவிர மதவெறி, தேசியவாதப் பிரச்சாரம்

செல்லா நோட்டு, ஜிஎஸ்டி, வேலையின்மை, விவசாயிகள் நெருக்கடி உள்ளிட்ட ஏராளமான வாழ்வுரிமை பிரச்னைகளில் பாஜக அரசுக்கு எதிராக மக்களின் கடும் அதிருப்தி தலை தூக்கி யிருந்ததை வெளிப்படையாகக் காண முடிந்த போதும், அது ஏன் தேர்தலில் பிரதிபலிக்கவில்லை? பாஜகவுக்கும், அதன் கூட்டணிக்கும் வாக்குகள் எப்படி குவிந்தன? என்பது முக்கியமான கேள்வி. ஆர்.எஸ்.எஸ்.சின் வழிகாட்டுதலில் தேர்தலை சந்தித்த பாஜக, 2014 தேர்தலைப் போல் வளர்ச் சியை மையப்படுத்தி பிரச்சாரத்தைக் கட்டமைக்க வில்லை. ஐந்தாண்டுகளில் அனைத்து துறைகளி லும் பெரும் தோல்வியை அடைந்துள்ள சூழலில் அது சாத்தியமும் இல்லை. எனவே 2019ல் தேசத் தின் பாதுகாப்பு, பாகிஸ்தானுக்கு பதிலடி, அதை மோடியால்தான் செய்ய முடியும் என்கிற ரீதியில் ‘இந்து’ இந்தியாவைப் பாதுகாக்க ‘இசுலாமிய’ பாகிஸ்தானை முறியடிக்க வேண்டும் என்று எழுப்பப்பட்ட பாஜகவின் தீவிர மதவெறி, தேசியவாத குரல் வலுவாக எடுபட்டுள்ளது. 5

ஆண்டுகளில் நடந்த சிறுபான்மை மக்கள் மீதான தாக்குதல்களும், பசு பாதுகாப்பு, கர் வாப்சி, லவ் ஜிகாத் கருத்தியல் பிரச்சாரங்களும் இதற்குக் களம் அமைத்துக் கொடுத்துள்ளன.

தேசம், தேசிய அரசு, தேசிய உணர்வு போன் றவை முதலாளித்துவ வளர்ச்சியின்போது முழு மைப்பட்ட கருத்தியல்கள். இவற்றுக்கு வர்க்க பரிமாணம் உண்டு. ஆளும் வர்க்கம் தனது நலனுக்காக இவற்றைப் பயன்படுத்தும். எனவே தொழிலாளி வர்க்கத்தின் கண்ணோட்டத்தி லிருந்து இவற்றின் உள்ளடக்கத்தை வரையறை செய்ய வேண்டும். இந்த வித்தியாசத்தைக் கணக்கில் எடுக்காமல் தேசியம் என்ற ஆளும் வர்க்கத்தின் ஒற்றை வார்த்தையில் வீழ்ந்து விட முடியாது. தீவிர தேசியம், தேசிய வெறி, மதவெறி யின் அடிப்படையிலான கலாச்சார தேசியம் போன்ற கருத்தியல்கள் இந்துத்வ கோட்பாட்டின் அம்சங்கள் என்பதைப் பார்க்கத் தவறக் கூடாது.

புல்வாமா தீவிரவாதத் தாக்குதல் அதன் அனைத் துப் பரிமாணங்களிலும் தேசிய வெறியை ஏற்ற பயன்படுத்தப்பட்டது. பாலாகோட்டில் இந்திய விமானப்படை கொடுத்த பதிலடி பெருமிதம் ஏற்படுத்த உதவியது. இதோடு சேர்த்து, இதனை எதிர்கொள்ள, பலமற்ற காங்கிரஸ் உதவாது, தேசத்துக்கு வலுவான தலைவர், பாதுகாவலர் தேவை, அது மோடி தான் என்ற வகையில் பிரச்சாரம் முன்வைக்கப்பட்டது. தொகுதி வேட்பாளர் யாராக இருந்தாலும் பரவாயில்லை. மோடிக்கு வாக்களியுங்கள் என்பதே ஜனாதிபதி தேர்வு போல பிரச்சார உத்தியாக அமைந்தது. சவுகிதார் என்று பெயர் சூட்டிக் கொண்டதோ, பாலாகோட்டில் தாக்குதல் தொடுக்க இந்திய விமானப்படையே தயங்கிய போது, எனது அடிப்படை அறிவில் பட்டதை அதிகாரிகளுக் குச் சொல்லி தாக்குதல் நடத்த வழி காட்டினேன் என்று மோடி கூறியது, ஒரு புறம் கேலிக்கு உரிய தாக இருந்தாலும், கவனமாகத் திட்டமிடப்பட்ட பிரச்சாரம் என்பது தெளிவாகிறது. பாஜகவின் ஒட்டுமொத்த பிரச்சாரம் ஆர்.எஸ்.எஸ். மற்றும் அதன் பரிவாரங்களின் கதை வசனம் இயக்கம் தயாரிப்புதான். உதாரணமாக, இமாச்சல பிரதேசத் தில் 4 தொகுதிகளிலும் லட்சக்கணக்கான வாக்கு கள் வித்தியாசத்தில் பாஜக வெற்றி பெற்றிருக் கிறது. அநேகமாக ஒவ்வொரு குடும்பத்திலும் ஆயுத படையில் பணியாற்றுபவர்கள் அல்லது ஓய்வு பெற்றவர்கள் அல்லது போரில் கணவனை இழந்த பெண்கள்

உள்ளனர். இப்பிரச்சாரம் அவர்கள் மத்தியில் வெகுவாக எடுபட்டிருக்கிறது. இத்தகைய நிலைமை வாழ்வுரிமை பிரச்னை களைப் பின்னுக்குத்தள்ளியிருக்கிறது.

இது சமூக வலைத்தளத்தின் மூலம் நுட்பமாக மக்கள் மத்தியில், இளைஞர்கள் மத்தியில் கொண்டு செல்லப்பட்டிருக்கிறது. தொழில்நுட்ப வளர்ச்சி யும், புதிய தகவல்-தொடர்பு சாதனங்களும் பயன்படுத்தப்பட்டு, 25 கோடி பேருக்கு அவரவர் மொழியில், தனிப்பட்ட முறையில் செய்தி அனுப் பப்பட்டிருக்கிறது. மிகப்பெரிய அளவிலான, சிக்கலான புள்ளிவிவரங்களை படு வேகத்தில் ஒழுங்குபடுத்தி, ஆய்வு செய்து கொடுக்கும் பிக் டேட்டா அனலிட்டிக்ஸ் (அதிக அளவிலான புள்ளிவிவரங்களை அலசி ஆராயும்) முறை பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

உயர் கல்வி நிறுவனங்கள், அரசியல் சாசன அடிப்படையில் உருவாக்கப்பட்ட நிறுவனங்கள், நீதித்துறை, தேர்தல் ஆணையம், மத்திய புலனாய்வு பிரிவு, ரிசர்வ் வங்கி என பல்வேறு இடங்களில் தலைமைப் பொறுப்புகளில் ஆர்.எஸ்.எஸ். நபர் கள் அமர்த்தி வைக்கப்பட்டார்கள். தீவிர மத வெறி, தேசிய வெறி உணர்வுகளை உருவாக்கித் தக்க வைப்பதில் இந்நிறுவனங்கள் முக்கிய பங்கு வகித்தன.

கார்ப்பரேட்டுகளின் ஆதரவும், பணப் பயன்பாடும்

இந்திய கார்ப்பரேட்டுகளும், பெரும் தொழில் நிறுவனங்களும் மிகப்பெரும் அளவில் பாஜக வுக்கும், மோடிக்கும் ஆதரவு அளித்துள்ளனர். மொத்த தேர்தல் செலவில் 45ரூ (சுமார் ரூ.27,000 கோடி) பாஜகவால் மட்டுமே செலவழிக்கப் பட்டிருக்கிறது. தேர்தல் செலவினங்களை தேர்தல் ஆணையமே செய்திட வேண்டும். அதுவரை வேட்பாளர் செலவுக்கு மட்டுமல்ல; கட்சிகளின் தேர்தல் செலவுக்கும் உச்சவரம்பு வைக்க வேண் டும் என்ற மார்க்சிஸ்ட் கட்சியின் கோரிக்கை நிறைவேற்றப்பட்டால், பொருளாதாரத்தில் ஓரளவு சம தளத்தில் நின்று கட்சிகள் போட்டியிட முடியும். ஆளும் கட்சி என்ற அடிப்படையிலும், மிக வெளிப்படையான ஆளும் அரசியல்வாதி கள்- அதிகார வர்க்கம்- கார்ப்பரேட்டுகளின் கள்ளக் கூட்டணி (குரோனி கேபிடலிசம்) காரண மாகவும், கடந்த 5 ஆண்டுகளில் மிகப் பெரும் நிதியாதாரம் பாஜகவின் கைக்கு வந்திருக்கிறது.

மோடியின் ஆட்சியில் முகேஷ் அம்பானியின் தொழில் சாம்ராஜ்யம் 23 பில்லியன் டாலர் மதிப்பிலிருந்து 55 பில்லியன் டாலராக உயர்ந் திருக்கிறது. அதாவது, அம்பானியின் வாழ்நாள் காலத்தில் சேர்த்த சொத்தை விட, மோடியின் கடந்த 5 ஆண்டு கால ஆட்சி அவருக்கு அதிக சொத்தைக் கொடுத்திருக்கிறது. மோடி குஜராத் முதலமைச்சராக இருந்த போதே கவுதம் அதானி யின் சொத்து 5000ரூ உயர்ந்தது. 2014-18ல் அது 4 மடங்குக்கு மேலாக அதிகரித்து 2.6 பில்லியன் டாலராக உள்ளது. பாபா ராம்தேவின் பதஞ்சலி சாதாரணமாக ஆரம்பித்து, தற்போது 2018ல் 6 பில்லியன் டாலர் பிசினசாக மாறி, இந்தியாவின் முதல் 20 பணக்காரர்களில் ஒருவராக ராம்தேவ் ஆகிவிட்டார். தேர்தல் பத்திரங்கள் மூலம் வந்த ரூ.4,794 கோடி நன்கொடையில் சுமார் 95ரூ பாஜகவுக்கே சென்றிருக்கிறது.

சமூக ஊடகத்துக்கு, விளம்பரத்துக்கு, நமோ டிவி துவங்கி நடத்துவதற்கு, ஊழியர்களும், பல்வேறு துறைகளில் நிபுணத்துவம் வாய்ந்தவர்களும் தங்கிப் பணியாற்றவும், கட்டமைப்பு வசதிகளுக்கும், உப கரணங்களுக்கும், ஊடகங்களுக்கும் என கோடிக் கணக்கில் பாஜகவால் பணம் செலவிடப்பட்டிருக் கிறது. பல மாநிலங்களில் இதர கட்சியின் முன்னணி ஊழியர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், கவுன்சிலர் கள் விலைக்கு வாங்கப்பட்டிருக்கின்றனர். மேற்கு வங்கம் போன்ற மாநிலங்களில் திரிணமூல் காங்கிரஸ் கட்சியில் ஸ்லீப்பர் செல்லாகப் பணியாற்ற பாஜக ஊழியர்களை அனுப்பியுள்ளனர்.

வாக்காளர் பட்டியலில், ஒரு பக்கத்துக்கு ஒருவர் பொறுப்பு, அதாவது ஒரு பக்கத்தில் உள்ள வாக்காளர்களின் ஆதரவைப் பெற செயல்படு வதற்கு ஒருவர் பொறுப்பு எனப் போடப்பட்ட னர். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே வேட் பாளர்கள் பெரும்பாலான தொகுதிகளுக்கு இறுதி செய்யப்பட்டு, அவர்களை வெற்றி பெற வைக்க, ஓராண்டிலிருந்து இரண்டு ஆண்டுகள் வரை ஆர்.எஸ்.எஸ். ஊழியர்கள் வெவ்வேறு மாநிலங்களிலிருந்து வந்து தங்கிப் பணியாற்றிய உதாரணங்கள் உண்டு. குடும்பங்களை நேரிலும் சந்தித்தனர். வாக்களித்தால் அந்தக் குடும்பத்துக்கு வேண்டிய அரசு நலத் திட்டங்களை வாங்கிக் கொடுப்பதாக வாக்குறுதி அளித்துள்ளனர். சில தொகுதிகளில் எதிர்கட்சியினரின் போட்டி வேட்பாளரை நிறுத்த பாஜக நிதி செலவழித் திருக்கிறது. மஹாராஷ்டிராவில்

ஓவைசியின் எம்.ஐ.எம். கட்சியும், பிரகாஷ் அம்பேத்கரின் பகுஜன் மஹாசங் கட்சியும் சேர்ந்து வாஞ்சித் பகுஜன் அஹாதி என்ற அணியாக நின்று தேர்தலை சந்தித்தனர். இது மதச்சார்பற்ற கட்சிகளின் வாக்குகளைப் பிரித்தது. ஹெலிகாப்டரில் பறந்து பறந்து இவர்கள் பிரச்சாரம் செய்ய பாஜக நிதி கொடுத்திருப்பார்கள் என்ற ஊகங்கள் நிலவு கின்றன.

மேற்கு வங்கத்தில் ராய்கஞ்ச் தொகுதியில் காங்கிரஸ் போட்டியிடுவதில்லை என்ற முடிவை எடுத்ததை ஒட்டி, நீண்ட கால காங்கிரஸ் தலை வர் மறைந்த பிரியரஞ்சன் தாஸ் முன்ஷியின் மனைவி தீபா தாஸ் முன்ஷியைத் தாங்கள் ஆதரிப்ப தாகக் கூறி பாஜக போட்டியிட வைத்தது. அதே போல் கர்நாடக மாநிலத்தில் காங்கிரஸ் சார்பில் 3 முறை போட்டியிட்டு வெற்றி பெற்ற அம்பரீஷின் தொகுதியான மாண்டியாவை மதச்சார்பற்ற ஜனதா தளத்துக்கு விட்டுக் கொடுத்த சூழலில், அம்பரீஷின் மனைவி சுமலதாவை சுயேச்சை வேட்பாளராக நிற்க வைத்துத் தன் ஆதரவைத் தெரிவித்தது. அவரை வெற்றி பெறவும் வைத்தது. இவ்வாறு பல்வேறு தளங்களில் ஆர்.எஸ்.எஸ்./பாஜகவின் உத்திகள் அமல்படுத்தப்பட்டன.

தேர்தல் ஆணையத்தின் செயல்பாடு

நேர்மையான, நியாயமான தேர்தலை நடத் தும் வகையில் தேர்தல் ஆணையத்தின் செயல் பாடுகள் இருக்கவில்லை. பாஜக தரப்பில், குறிப்பாக மோடி, அமித் ஷா போன்றவர்கள், தீவிரவாத தாக்குதல்களை அரசியலாகப் பயன்படுத்தியது; சட்ட விரோதமாக நமோ டிவியைத் துவக்கியது; மத வெறியை எழுப்பும் வகையில் பேசியது போன்றவை குறித்து எதிர்க்கட்சிகள் அளித்த புகார்களை தேர்தல் ஆணையம் நிராகரித்தது. இத்தகைய அனுபவத்தை வைத்துப் பார்க்கும் போது இனியும் பதவியில் இருக்கும் அரசாங்கம் மட்டுமே தேர்தல் ஆணைய உறுப்பினர்களைத் தேர்வு செய்யும் முறை நீடிக்கக் கூடாது. லோக் பால் உறுப்பினர்களைத் தேர்வு செய்ய ஒரு குழு (கொலிஜியம்) இருப்பதைப் போல், தேர்தல் ஆணைய உறுப்பினர்கள் தேர்வுக்கும் ஒரு குழு அமைக்க வேண்டும். பதவிக் காலம் முடிந்த பின், தேர்தல் ஆணைய உறுப்பினர்களுக்கு வேறு பொறுப்பு/பதவிகள் அளிப்பதைத் தடை செய்ய வேண்டும். மேற்கு வங்கத்தில் பிரச்சாரம் செய்வதற் கான அனுமதி தேர்தல் ஆணையத்திடம் பெறுவ தும் கடினமாக

இருந்தது. டயமண்ட் ஹார்பர் தொகுதியில் தேர்தல் காலத்தில் 90 நிகழ்ச்சிகள் நடத்த அனுமதி கோரிய போது 18க்குத்தான் அனுமதி கிடைத்தது.

இதர காரணிகள்

அரசு நலத் திட்டங்கள், குறிப்பாக உஜ்வாலா இலவச எரிவாயு இணைப்பு திட்டம், பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டம், ஆயுஷ்மான் மருத்துவ காப்பீடு திட்டம் போன்றவை பல ஏழை குடும்பங்களுக்கு நம்பிக்கை ஊட்டியிருக் கிறது. பெண்களின் வாக்குகள் கடந்த தேர்தலை விட அகில இந்திய அளவில் பாஜகவுக்கு 7சூ அதிகரித்திருப்பது இதன் விளைவாக இருக்கக் கூடும். தேர்தலுக்கு சில தினங்களுக்கு முன்பாக அல்லது தேர்தல் அன்று பலரின் வங்கிக் கணக்குக்கு மானியங்கள் நேரடி பணப்பலனாக சேர்க்கப்பட்டுள்ளன. விவசாயிகளின் பயிர் காப் பீடு, உதவி தொகை, பல்வேறு விஷயங்களுக் கான மானிய தொகை கொடுக்கப்பட்டுள்ளது. இமாச்சல பிரதேசத்தில் 86சூ சிறு குறு விவசாயி களுக்கு 4 ஆண்டு கால நிலுவை மானிய தொகை ஒரேயடியாக தேர்தலுக்கு சில நாட்களுக்கு முன் வழங்கப்பட்டிருக்கிறது.

இதர கட்சிகளின் சாதிய அணி திரட்டலை முறியடித்து, தமக்கு சாதகமாக அதனை மாற்ற பல நுட்பமான திட்டமிடல் (மைக்ரோ சோஷி யல் என்ஜினியரிங்) பாஜக தரப்பில் செய்யப் பட்டிருக்கிறது. உதாரணமாக, உபி மாநிலத்தில், பகுஜன் சமாஜ் கட்சி, தலித் வகுப்பினரில் ஜாதவ் என்ற பிரிவினரைத் தன் செல்வாக்கில் வைத்துக் கொண்டபோது, ஜாதவ் அல்லாத தலித் பிரி வினரை பாஜக தன் வசமாக்கியது. சமஜ்வாதி கட்சி யாதவ சமூகத்தில் செல்வாக்கு செலுத்திய பின்னணியில், யாதவ் அல்லாத பிற்பட்ட வகுப் பினரை பாஜக அணி திரட்டியது. அதே போல் பல்வேறு பழங்குடியின சமூகங்களை ஒருங்கிணைத்தது. ‘இந்துக்கள்’ என்ற அடையாளம் கொடுத்து பல்வேறு சாதிகளை திரட்டியது.

மின்னணு வாக்கு இயந்திரங்கள்

இந்த இயந்திரங்களைப் பயன்படுத்தி, தவறான முறையில் வாக்குகளை பாஜக பெற்றதாக ஊடகச் செய்திகள் வருகின்றன. ஃபிரண்ட்லைன் பத்திரிகை, மஹாராஷ்டிராவில் ஒருவர் தகவல் அறியும் உரிமை சட்டப்படி

பெற்ற விவரங்களைப் பயன்படுத்தி, தேர்தல் ஆணையம் வாங்கிய இயந்திரங்களுக் கும், பயன்படுத்திய இயந்திரங்களுக்கும் இடையே 19 லட்சம் இயந்திரங்கள் இடைவெளியாக இருந்தன; அப்படியானால் அவை எங்கே என்ற கேள்வியை எழுப்பியது. 370 தொகுதிகளில் பதிவான வாக்குகளுக்கும், மின்னணு இயந்திரத்தில் எண்ணப் பட்ட வாக்குகளுக்கும் இடையே வேறுபாடு இருந்தது என்று ஊடகச் செய்திகள் வந்துள்ளன. உதாரணமாக, பீஹாரில் பாட்னாசாஹிப் தொகுதியில் 65,000 வாக்குகளும், குஜராத்தில் ஆனந்த் தொகுதியில் 1,32,000 வாக்குகளும் பதிவான வாக்குளைவிட எண்ணப்பட்ட வாக்குகள் அதிகமாக இருந்துள்ளன. இப்பிரச்னை காரணமாகத் தேர்தல் ஆணையத் தால் இதுவரை அகில இந்திய அளவில் ஒவ்வொரு கட்சிக்கும் கிடைத்த வாக்கு சதவீதத்தை அறிவிக்க முடியவில்லை. மின்னணு வாக்கு இயந்திரம் பற்றி இவ்வாறு எழுந்துள்ள சந்தேகங்கள் குறித்து ஆய்வு செய்வது என்று மார்க்சிஸ்ட் கட்சியின் மத்திய குழு முடிவு செய்துள்ளது.

காங்கிரசின் தோல்வி

2014 தேர்தலை விட 8 தொகுதிகளில் கூடுதலாக 52ல் காங்கிரஸ் வெற்றி பெற்றுள்ளது. வாக்கு சதவீதத்தையும் அது தக்க வைத்துக் கொண் டுள்ளது. பாஜகவைத் தோற்கடிக்க மதச்சார்பற்ற கட்சிகளை ஒருங்கிணைக்கும் பணியை, செல் வாக்கு சரிந்துள்ள நிலையில் இடதுசாரி கட்சி களால் செய்ய இயலவில்லை. அடுத்து ஆட்சியைப் பிடிக்கும் நோக்கத்துடன் செயல்பட்ட காங்கிரஸ் அப்பணியை செய்திருக்க வேண்டும். ஆனால் அதில் மிகுந்த பலவீனம் இருந்தது. உதாரணமாக, டெல்லியில் ஆம் ஆத்மியுடனும், உபியில் பகுஜன் சமாஜ், மற்றும் சமஜ்வாதி கட்சிகளுடனும் காங்கிரஸ் கூட்டு வைத்திருந்தால் சில தொகுதிகளிலாவது பாஜகவை முறியடிக்க முடிந்திருக்கும். அவர்கள் சமீபத்தில் சட்டமன்றத்தில் வெற்றி பெற்ற ஹரியானா, ராஜஸ்தான், மத்திய பிரதேசத்திலும் இதர கட்சிகளை ஒருங்கிணைக்கவில்லை. மேற்கு வங்கத்தில் ஏற்கனவே அவரவர் வெற்றி பெற்ற 6 தொகுதிகளில் பரஸ்பரம் போட்டி வேண்டாம் என்ற இடது முன்னணியின் குறைந்தபட்ச வேண்டுகோளைக் கூட அக்கட்சி நிராகரித்து விட்டது. கேரளாவில் வயநாட்டில் அதன் அகில இந்திய தலைவர் ராகுல் காந்தி இடது ஜனநாயக முன்னணியை எதிர்த்துப் போட்டியிட்டார். பாஜக எதிர்ப்பைக் காட்டிலும்

இடதுசாரிகளுக்கு எதிரான போட்டிக்கு காங்கிரஸ் முக்கியத்துவம் கொடுத்ததான தோற்றமே ஏற்பட்டது.

பாஜகவின் மதவெறி நடவடிக்கைகளைத் தேர்தலுக்கு முன்னும், தேர்தல் பிரச்சாரத்தின் போதும் தேவையான அளவு அம்பலப்படுத்த காங்கிரஸ் தவறி விட்டது. மென்மையான இந்துத்வாவைக் கடைப்பிடித்தது. முரண்பாடு இந்துத்வாவுக்கும் மதச்சார்பின்மைக்கும் தானே தவிர, மென்மையான இந்துத்வாவுக்கும், கடுமை யான இந்துத்வாவுக்கும் அல்ல. இதர கட்சிகளும் இது குறித்த திறன் மிக்க பிரச்சாரத்தை நடத்த வில்லை.

மார்க்சிஸ்ட் கட்சியின் தேர்தல் உத்தி

பாஜகவைத் தோற்கடிக்க வேண்டும்; நாடாளு மன்றத்தில் மார்க்சிஸ்ட் கட்சி மற்றும் இடதுசாரி கட்சிகளின் பிரதிநிதிகள் கூடுதலாக இடம் பெற வேண்டும்; மத்தியில் ஒரு மதச்சார்பற்ற அரசை அமைக்க முயற்சிகள் எடுக்க வேண்டும் என்பது மார்க்சிஸ்ட் கட்சியின் தேர்தல் உத்தியின் உள்ளடக்கமாக இருந்தது. மாநிலத்துக்கு மாநிலம் நிலைமைகள் வித்தியாசமாக இருந்த பின்னணி யில், அகில இந்திய அளவில் ஒரு கூட்டணி சாத்தியம் இல்லை என்ற புரிதலோடு, பாஜக எதிர்ப்பு வாக்குகளை ஒருமுகப்படுத்தி குவிக்க வேண்டும் என்ற அளவில், மாநிலங்களில் இந்த உத்தியை அமல்படுத்த வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா போன்ற மாநிலங்களில் பாஜக தோற்கடிக்கப் பட்டது. பொதுவாக உத்தியின் 3 அம்சங்களும் நிறைவேறவில்லை என்பதே தேர்தல் முடிவுகள் காட்டும் செய்தியாகும்.

கேரளாவைப் பொறுத்தவரை இடது ஜனநாயக முன்னணிக்கு 5.1ரூ வாக்குகள் குறைந்துள்ளன. காங்கிரசுக்கு 5.10ரூம், பாஜகவுக்கு 4.76ரூம் அதிகரித்துள்ளன. பொதுவாக சட்டமன்றத்துக் கும் நாடாளுமன்றத்துக்கும் வித்தியாசமாக வாக்களிப்பது கேரளாவின் அனுபவம். மேலும், இடது ஜனநாயக முன்னணி 1977ல் ஒரு தொகுதி கூட வெற்றி பெறாததும், 2004ல் 20க்கு 18ல் வெற்றி பெற்றதும் நிகழ்ந்திருக்கிறது. பாஜகவைத் தோற்கடிக்க வேண்டும் என்று நினைத்த சிறுபான்மை வகுப்பினரும் (மக்கள் தொகையில் இவர்கள் சுமார் 45ரூ), இதர சக்திகளும் மத்தியில் ஆட்சி அமைக்க காங்கிரசால் முடியும் என்ற நம்பிக்கையோடு

அவர்களுக்கு வாக்களித்தனர்.

மேலும், சபரிமலை பிரச்னையில் உச்சநீதிமன்ற தீர்ப்பை அமல்படுத்த வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கட்சியும், மாநில அரசும் எடுத்த நிலைபாடு சரியானது, இதைத் தவிர வேறு நிலைபாட்டை எடுத்திருக்க முடியாது. ஆனால், துவக்கத்தில் நீதிமன்ற தீர்ப்பை ஆதரித்த காங்கிரஸ், பாஜக கட்சிகள், மாநில அரசுக்கும் மார்க்சிஸ்ட் கட்சிக்கும் எதிராக இதனை மாற்ற முடியும் என்ற நிலையில், எதிர் நிலை எடுத்து, கடுமையான பிரச்சாரம் செய்ததில், மத நம்பிக்கை உள்ளவர்கள் மத்தியில் ஒரு குழப்பம் ஏற்பட்டது. அதில் ஒரு பகுதியினர், பாரம்பர்யமாக மார்க் சிஸ்ட் கட்சிக்கு வாக்களிப்பவர்கள், மாற்றி வாக்களித்துள்ளனர். இவர்களை மீட்டெடுக்க வேண்டியிருக்கிறது. சபரிமலை பிரச்னையில் சரியான நிலைபாடு எடுத்திருந்தாலும், வெவ் வேறு அளவில் பல்வேறு பகுதிகளில் இதனால் பாதிப்பு நிகழ்ந்திருக்கிறது. ஆனாலும் மாநில அரசின் நடவடிக்கைகள் மீது பொதுவாக இருக் கும் நன்மதிப்பு வாக்குகளாக ஏன் மாறவில்லை என்று பரிசீலிக்க வேண்டும். பாஜக ஒரு தொகுதி யில் கூட வெற்றி பெறவில்லை என்றாலும், வாக்கு சதவீதம் 15ருக்கு மேல் என்பது ஒரு அபாய எச்சரிக்கையே. பல்வேறு தொகுதிகளில் பாஜக, தன் ஒரு பகுதி வாக்குகளை காங்கிரசுக்கு மடை மாற்றம் செய்யும் வழக்கமான வேலை இந்தத் தேர்தலிலும் நடந்தது.

மேற்கு வங்கத்தில் மார்க்சிஸ்ட் கட்சி அடைந் திருக்கும் படு தோல்வி, கட்சியின் வரலாற்றிலேயே இதுவரை காணாதது. இடது முன்னணிக்கு 7.44ரு மட்டுமே வாக்குகள் மட்டுமே கிடைத்துள்ளன. கடும் வன் முறை, அச்சுறுத்தல்கள், வாக்குச்சாவடி கைப் பற்றல் ஆகிய பிரச்னைகளுக்கு மத்தியில் தேர்தல் நடந்தது. மேற்கு வங்கத்தில் திரிணமூல் காங்கிரஸ் மீதான எதிர்ப்புணர்வு வலுவாக இருந்தது. அவர்களின் வன்முறையை முறியடிக்க இடது சாரிகளை விட பாஜகவால்தான் முடியும் என்ற உணர்வு இருந்தது. அதேபோல் பாஜகவைத் தோற்கடிக்க நினைத்தவர்கள், திரிணமூல் காங் கிரசையே மாற்றாகப் பார்த்தார்கள். பாரம்பரிய மாக இடதுசாரிகளுக்கு வாக்களிக்கும் ஒரு பகுதியினர் திரிணமூல் மீதான வெறுப்பின் காரணமாக பாஜகவுக்கு வாக்களித்துள்ளனர். இது மதவெறியைக் குறைத்து மதிப்பிடுவதாகும். மக்கள் பிரச்னைகளில் போராட்டங்களை உருவாக் கும்போது இடது முன்னணிக்கு ஆதரவாக வரும் மக்கள், தேர்தலில் அதே அளவு

ஆதரிக்கவில்லை.

பொதுவாக 10 ஆண்டுகளுக்கும் மேலாக இடது முன்னணியின் சரிந்து வரும் வாக்கு சதவீ தம், அதிக அளவு வன்முறையை சந்திக்க வேண்டிய நிலை போன்றவையும் இதற்கு ஒரு காரணம். சிறுபான்மை மத அடிப்படைவாதிகளை திரிண மூல் காங்கிரஸ் தாஜா செய்யும் முறையானது, பெரும்பான்மை மதவாதத்தை தூண்டி விட பாஜகவுக்குக் களம் அமைத்துக் கொடுத்தது. இரண்டும் போட்டி போட்டுக்கொண்டு மத வெறியைக் கிளப்பி விடும் சூழலில், ஜனநாயகத் துக்கான இடதுசாரிகளுக்கான வெளி குறைகிறது. தேர்தல் களத்தில் திரிணமூல், பாஜக இரண்டு கட்சிகள்தான் நிற்கின்றன; மற்ற கட்சிகள் அருகில் கூட இல்லை என்ற திட்டமிட்ட பிரச் சாரத்தை ஊடகங்கள் செய்தன. கடந்த 50 ஆண்டு களில் ஆர்.எஸ்.எஸ். ஊடுருவ முடியாத மேற்கு வங்கத்தில் திரிணமூல் ஆட்சியில் ஷாகாக்கள் அதிகரித்துள்ளன. 47 மதவெறி தாக்குதல்கள் நடந்துள்ளன. கடந்த 8 ஆண்டுகளில் 209 மார்க்சிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் கொல்லப்பட்டுள்ளனர். உறுப்பினர்களும், ஆதரவாளர்களும் சேர்த்து சுமார் 40,000 பேர் குடியிருப்பிலிருந்து வெளி யேற்றப்பட்டுள்ளனர். இதற்கு மத்தியில்தான் கட்சி உறுப்பினர்கள் செயல்படுகின்றனர். மத வெறிக்கு எதிரான வலுவான, சித்தாந்த ரீதியான போராட்டத்தை மக்கள் மத்தியில் செய்வதன் மூலமாகத்தான் இந்த இரு கட்சிகளின் போட்டி மதவெறி அபாயத்தைக் குறைக்க முடியும். இடது சாரிகளின் அரசியல் செல்வாக்கிலிருந்து விலகிச் சென்றவர்களை மீட்டெடுப்பது முன்னுரிமை கடமையாக இருக்கிறது.

திரிபுராவில் வன்முறை, அச்சுறுத்தல், நிர்வாகம் மற்றும் காவல்துறையின் முழு உதவி, தேர்தல் ஆணையத்தின் பாராமுகம் போன்றவை பாஜக வெற்றி பெற உதவி செய்தன. திரிபுரா மேற்கு தொகுதியில் மொத்த வாக்குச்சாவடிகளில் 50சதவீதத்துக்கும் மேல் கள்ள ஓட்டு, வாக்குச்சாவடி கைப் பற்றல் நடந்த பின்னணியில் மறு வாக்குப்பதிவு கேட்கப்பட்டது. தேர்தல் ஆணையத்தின் ஒரு குழுவும் விசாரணை செய்து, பிரச்னை நடந் தாகவே அறிக்கை கொடுத்தது. ஆனாலும் 168 வாக்குச்சாவடிகளில், அதாவது நாம் கோரியதில் 20சதவீத வாக்குச்சாவடிகளில் மட்டுமே மறு வாக்குப் பதிவு நடத்தப்பட்டது. இந்த 168 வாக்குச்சாவடி களில் மறுவாக்குப்பதிவு என்பதும் கூட, இந்தியாவிலேயே மிக அதிகமான ஒன்றாகும்.

கிழக்கு தொகுதியிலும் பல பிரச்னைகள் நடந்தன. பெரும்பாலான இடங்களில் மார்க்சிஸ்ட் கட்சி யின் ஊழியர்கள் மக்களை சந்தித்து பிரச்சாரம் செய்யவே போக முடியவில்லை. தொடர்ச்சி யான வன்முறைக்கு மத்தியில் கட்சி கிளைகளில் பெரும்பகுதியை கூட்டவே முடியவில்லை.

பொதுவாக

மார்க்சிஸ்ட் கட்சியின் சொந்த பலமும், மக்கள் பிரச்னைகளில் தலையீடு செய்யும் திறனும் பல வீனமடைந்துள்ளது. வாக்கு சதவீதம் தொடர்ந்து சரிகிறது. வர்க்க, வெகுஜன அமைப்புகள் மூலமாகக் கிடைக்கும் தொடர்புகளை அரசியல்படுத்துவ தில் குறைபாடு உள்ளது. போராட்டங்களில் வருபவர்களை அரசியல்படுத்தத் தவறும்போது, வெகுஜன தளம் உருவாகாது; தேர்தல் வாக்குகளி லும் அது பிரதிபலிக்காது. இளைஞர்களின் பங்கேற்பை அதிகரிக்க வேண்டியிருக்கிறது. அடிப் படை வர்க்கங்களின் வாக்குகள் கிடைப்பதில்லை. இவற்றை சரி செய்வதற்கு கூடுதல் கவனத்தோடு அரசியல் ஸ்தாபன பணிகளை ஆற்ற வேண்டும். இழந்த தளங்களை மீட்க வேண்டும். ஸ்தாபன பிளீனம் எடுத்த முடிவுகளை அமல்படுத்தியது பற்றி பரிசீலனை செய்ய வேண்டும். குறிப்பாக, மக்களுடன் உயிரோட்டமான தொடர்பு என்ற ஸ்தாபன பிளீனத்தின் சாராம்சத்தை உள்வாங்க வேண்டும்.

வரவிருக்கும் 5 ஆண்டுகளில், பாஜக அரசு உழைக்கும் மக்களின் வாழ்வுரிமை மீது கூடுதல் தாக்குதல்களைத் தொடுக்கும். மத அடிப்படை யில் மக்களைப் பிரிக்கும் வேலையைக் கடுமை யாக முன்னெடுக்கும். கருத்துச் சுதந்திரம் பறிப்பு, போராட்டங்கள் ஒடுக்கப்படுவது போன்ற நட வடிக்கைகள் அதிகரிக்கும். பொதுத்துறை தனி யார்மயமாக்கப்படுவது விரைவாகும். கார்ப் பரேட்டுகளுக்கு சாதகமாக நிலங்கள் பறிக்கப் படும். தலித், சிறுபான்மை, பெண்கள் மீதான ஒடுக்குமுறை அதிகரிக்கும். மதச்சார்பின்மை மீது பெரும் தாக்குதல் வரும். மதச்சார்பற்ற, ஜனநாயக பூர்வமான இந்திய கட்டமைப்பு இந்து ராஷ்டிர மாக மாற்றப்பட திட்டமிட்ட முயற்சிகள் தீவிர மாக மேற்கொள்ளப்படும். திரிபுரா, மேற்கு வங்கத்தில் இடதுசாரிகளைப் பின்னுக்குத் தள்ளிய பின், கேரளாதான் அடுத்த குறி. பரந்து பட்ட மக்களைத் திரட்டியே நம்மால் இவற்றை எதிர்கொள்ள முடியும்.

இது சோர்வடையும் தருணமல்ல; பரிசீலனை செய்து, படிப்பினைகளைப் பெற்று, துணிச் சலாக முன்னேற வேண்டிய நேரம். சவால்களை எழுச்சியோடு சந்திக்க வேண்டிய நேரம். தேர்தல் வெற்றி தோல்விகளைத் தாண்டிய கண்ணோட்டம் இடதுசாரிகளுக்கு உண்டு. சமூக மாற்றத்தை ஏற்படுத்த, அரசியல் மாற்றை முன்னெடுக்க, சோஷலிசத்தை நோக்கி முன்னேற உறுதி பூண்டுள்ள இயக்கம் இது. இடதுசாரிகள் எதிர்ப்பது இந்த அல்லது அந்த அரசியல் கட்சி மட்டுமல்ல. ஏகாதி பத்திய, ஏகபோக, நிலப்பிரபுத்துவ சக்திகள், சாதியம், மத வெறி, பணபலம் உள்ளிட்ட எதிரி களை எதிர்கொள்ள வேண்டிய அவசியம் உண்டு. இடதுசாரிகள் வீழ்ந்து விட்டனர் என்று பிரச் சாரம் செய்யப்படுகிறது. உலக அளவிலும், இந்தியாவிலும் இதை விட மோசமான நிலைக் குத் தள்ளப்பட்டபோதெல்லாம் மீண்டு வந்திருக் கும் இயக்கம்தான் மார்க்சிய இயக்கம். அரசியலில் வலதுசாரி திருப்பத்துக்கு ஒரே பதில் இடதுசாரி திருப்பம்தான். இதை அடைய குறுக்கு வழி எதுவும் கிடையாது. இடை விடாத அரசியல், ஸ்தாபன, சித்தாந்த செயல்பாடு கள் இதற்குத் தேவைப்படுகின்றன.

3. மீண்டுமொருமுறை சாதிகள், வர்க்கங்கள் குறித்து...

இ.எம்.எஸ்.நம்பூதிரிபாட்

தமிழில்: அசோகன் முத்துசாமி

பொதுவாழ்வில் நேரடியாகப் பங்கேற்ற போது நான் பதின்பருவத்தில் இருந்தேன். நவீன ஜனநாயக இயக்கம் எனது மாநிலத்தில் பரவிய போது அதன் இருவிதமான போக்குகளின் ஆழ மான செல்வாக்கிற்கு நான் ஆட்பட்டிருந்தேன். முதலாவது, கேரளாவின் சாதி ஆதிக்கம் மிகுந்த சமூக வாழ்விற்கு எதிராக வளர்ந்து வந்த எதிர்ப்பியக்கம். குறிப்பாக மாநிலத்தின் மிக உயர்ந்த சாதியான நம்பூதிரிகளின் காலாவதியா கிப் போன சடங்கு சம்பிரதாயங்கள், மூடநம்பிக் கைகள், குடும்ப அமைப்புகள் மற்றும் இவை போன்றவற்றிற்கு எதிரானது. இரண்டாவது, விடுதலை இயக்கம்; அந்த காலகட்டத்தில் காந்தியின் தலைமையில் நடந்த வெகுமக்கள் போராட்ட அலை பல நூற்றாயிரக்கணக்கான இளம் ஆண்களையும் பெண்களையும் தன்னுள் ஈர்த்து இழுத்துக் கொண்டிருந்தது.

ஆரம்பத்தில் நான் இந்த இரண்டு நீரோட்டங் களிலும் உருவாகி வந்த வளர்ச்சிகளையும் கூர்ந்து நோக்குவதில் ஆர்வம் காட்டினேன்; 1920களின் பின்பாதியில் அந்த இரண்டிற்குள் நானும் படிப்படியாக ஈர்க்கப்பட்டேன். 1930ஆம் ஆண்டின் சத்தியாகிரகப் போராட்ட, ஏகாதிபத் திய எதிர்ப்பு மக்கள் இயக்கத்தின் அடுத்த அலை வீசத் துவங்கியபோது-1930ம் ஆண்டு உப்பு சத்தியாகிரகம்- சமூகக் கலாச்சார, அரசியல் வாழ்வில் நான் ஏற்கனவே தீவிர கொள்கை கொண்டவனாக ஆகிவிட்டிருந்தேன்.

சமூக தளத்தில், நம்பூதிரி சமூகத்தின் குடும்ப வாழ்வில், ஓரளவு சீர்திருத்தங்களுக்கான முயற்சி கள் என்பதிலிருந்து சாதிப் படிநிலையின் உச்சத் தில் சமூக வாழ்வைப் புரட்சிகரமாக மறுசீரமைப் பதற்கான போராட்டம் என்கிற நிலைக்கு முன்னேறினேன். இது கேரள சமுதாயத்தின் தாழ்ந்த சாதிகளின்உயர்சாதி எதிர்ப்பு இயக்கத் திற்கு உணர்வுபூர்வமாக என்னைக் கொண்டு சென்றது; குறிப்பாக, ஒடுக்கப்பட்ட சாதிகளில் மிகவும் புரட்சிகரமான சமூக எதிர்ப்பியக்கத்தை

வளர்த்திருந்த ஈழவர்களிடம் கொண்டு சென்றது. ஈ.வெ.ராமசாமி நாயக்கரின் தலைமையில் தமிழ் நாட்டில் நடந்த சமூகக் கலாச்சார இயக்கத்துடன் இந்த ஒடுக்கப்பட்ட சாதித் தலைவர்கள் தொடர்பு கொண்டிருந்ததனால், பகுத்தறிவு மற்றும் நாத்திகம் ஆகிய கருத்துக்களை நான் உட்கிரகித் துக் கொள்ளத் துவங்கினேன். காந்தியிசத்திலிருந்து என்னை நான் முறித்துக் கொள்ளவில்லை என்ற போதிலும், அரசியல் ரீதியாக நான் ஜவகர்லால் நேரு மற்றும் சுபாஷ் சந்திரபோஸ் ஆகியோரின் தலைமையிலான காங்கிரசின் இடதுசாரித் தலைவர்களின் தீவிர ஆதரவாளராக ஆனேன்.

உப்பு சத்தியாகிரக வருடங்களும், அதைத் தொடர்ந்த அரசியல் வளர்ச்சிப்போக்குகளும் தீவிரமான சமூகக் கலாச்சார மற்றும் அரசியல் இயக்கங்களில் என்னை மூழ்கச் செய்தன. விடுதலைப் போராட்டத்தை ஆதரிப்பதாக நான் கருதிய அனைத்து அரசியல் நடவடிக்கைகளிலும் கல்லூரி மாணவன் என்கிற முறையில் முழுமை யாக பங்கேற்றேன். அதே வேளையில், தீவிரமான சமூகக் கலாச்சார இயக்கத்தை முன்னெடுத்துச் செல்வதற்காகவும் என்னுடைய நேரத்தை அர்ப்பணித்தேன். 1930-31 ஆண்டுகளில் நான் ஆசிரியராக இருந்து செயல்பட்ட ஒரு வாரப் பத்திரிகையின் பத்திகள் சமூகக் கலாச்சார மற்றும் தேசிய அரசியல் தளங்களில் இடதுசாரிக் கருத்துக் களைப் பரப்புவதற்காகப் பயன்படுத்தப்பட்டது.

மாணவன் என்கிற முறையிலான என்னுடைய செயல்பாடுகள் அடுத்து என்னை ஒத்துழையாமை இயக்கத்தின் செயலூக்கமுள்ள தொண்டர் என்கிற வகையில் சிறைக்கு கொண்டு போய்ச் சேர்த்தது. அன்றிலிருந்து ஒரு சாதாரண சமூக சீர்திருத்தவாதி மற்றும் விடுதலைப் போராட்ட வீரன் என்பதிலிருந்து மொத்த சமுதாயத்தையும் புரட்சிகரமாக மறுகட்டமைக்கப் போராடும் இளைஞனாக என்னை மாற்றிக்கொண்டேன். துவக்கத்தில் ஒரு சோசலிசவாதியாகவும், அதை அடுத்து ஒரு கம்யூனிஸ்டாகவும் ஆனேன். 'நான் எப்படி ஒரு கம்யூனிஸ்டாக ஆனேன்' என்கிற என்னுடைய நூலில் இது கூறப்பட்டிருக்கிறது.

என்னுடைய அரசியல் ஆளுமையின் இந்த இரு குறிப்பிட்ட வகையான வளர்ச்சி என்னுடைய அரசியல் சிந்தனைக்கு இரண்டு வெவ்வேறு விதமான போக்குகளை அளித்தது. விடுதலைப் போராளி மற்றும் புரட்சிகரமான

தேசியவாதி என்கிற வகையிலும் சாதி, மத அரசியலுக்கு எதி ரானவனாக நான் இருந்ததுடன் புரட்சிகரமான சமூக சீர்திருத்தவாதி என்கிற வகையிலும், சாதி, மத அடிப்படையிலான அனைத்து வேறுபாடு களும் முற்றிலும் ஒழிக்கப்பட வேண்டும் என்பதை ஆதரித்து வந்தேன்.

எனினும், நாம் அடைய விரும்பும் இறுதி இலக்கு என்னவாக இருந்தபோதும், யதார்த்தத் தில் நிலவிவரும் சாதி மற்றும் மதச் சமூக அடிப்படையிலான வேறுபாடுகளையும், வித்தி யாசங்களையும் ஒதுக்கித் தள்ளி விட முடியாது. ஆதலால்தான் ஒடுக்கப்பட்ட சாதி மக்களின் நலனுக்காகவும், ஆதிக்கசாதியினரின் சமூக அமைப்பு மற்றும் குடும்ப அமைப்பிற்கு எதிராகப் போராடு வதற்காகவும் தங்களை அர்ப்பணித்துக் கொண் டுள்ள சமூக அரசியல் இயக்கங்களின் மீது இரக்கம் கொண்டவனாக இருந்தேன். சாதியை அடிப்படையாகக் கொண்ட அமைப்புகளில் சில, ஒடுக்கப்பட்ட சாதிகளின் சமூகநீதிக் கோரிக்கை யையும், அரசியல் ஜனநாயகத்திற்கான இயக்கத் தையும் ஒன்றிணைத்து அரசியல் கோரிக்கை களுக்காகப் போராடத் துவங்கியபோது என்னு டைய ஆதரவு மேலும் கூடுதலானது.

1930ம் ஆண்டுகளின் முதல் பாதியில் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த வளர்ச்சியான, ஒடுக்கப் பட்ட ஈழவ சாதித் தலைவர்கள் சிலரால் தொடங்கப்பட்ட தனிச்சிறப்பான தீவிர சமூக அரசியல் இயக்கத்தின் தோற்றம் என் மீது செல்வாக்கு செலுத்தியது. திருவாங்கூரைச் சேர்ந்த காலஞ்சென்ற சி.கேசவன் அவர்களால் தொடங்கப்பட்ட அந்த இயக்கம் பொறுப்புள்ள ஒரு அரசாங்கம் வேண்டுமெனக் கோரும் திருவாங்கூர் மக்களின் ஜனநாயக விருப்பங் களையும், ஒடுக்கப்பட்டசாதிகள் மற்றும் மதச் சமூகங்களின் சமூக நீதிக் கோரிக்கையையும், அந்த சமஸ்தானத்தின் அன்றைய மேல்சாதி ஆதிக்கத்திற்குட்பட்ட எதேச்சதிகார ஆட்சியில் ஒன்றிணைக்க முயற்சித்தது. பெரும்பான்மை யான தேசியவாதிகள் அவரையும் அவரது இயக்கத்தையும் ‘சாதிவாதம்’ என்றும், ‘வகுப்பு வாதம்’ என்றும் கண்டித்ததுடன் ‘தேசவிரோ தம்’ என்றும் குற்றம் சாட்டினர். கேசவனின் தலை மையில் நடைபெற்ற இயக்கத்திற்கு முழு ஆதரவு அளித்த தேசியவாத மலையாள பத்திரிக்கை களில் நான் ஆசிரியராக இருந்த வாரப் பத்திரிகை யும் ஒன்று (மலையாள பத்திரிகை உலகின் மறைந்த பெரியவர் ஏ.பாலகிருஷ்ண பிள்ளை அவர்களை ஆசிரியராகக் கொண்ட பத்திரிகை மற்றொன்று).

அதன் பின்னர் அந்த இயக்கம் கூட்டு அரசியல் காங்கிரஸ் (தடி்வே யீடிடவை்உயட உடிபேசநளள) என்றழைக்கப் பட்ட, மேல்சாதி ஆதிக்கத்திற்கு எதிரான சில சாதிகள் மற்றும் சமூகங்களின் அரசியல் கூட்ட ணியாக வளர்ச்சி பெற்றது. இந்த 'சாதி மற்றும் சமூகக் கூட்டணி' சமஸ்தானத்தில் இருந்த அனைத்து ஜனநாயக சக்திகளையும் உள்ளடக்கிய 'திருவாங் கூர் மாநில காங்கிரஸ்' என தன்னை மேலும் விரிவுபடுத்திக் கொண்டது. 'வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமையும், பிற்படுத்தப் பட்ட சமூகங்களுக்கு இடஒதுக்கீடும் கொண்ட பொறுப்புள்ள ஒரு அரசாங்கம்' என்பதே அந்த இயக்கத்தின் மையமான முழக்கமாக ஆனது.

பக்கத்திலிருந்த கொச்சி சமஸ்தானத்திலும் இதே மாதிரியான வளர்ச்சிப் போக்குகள் நிகழ்ந்து கொண்டிருந்தன. சமஸ்தானத்தில் ஒரு பொறுப் புள்ள அரசாங்கத்திற்காகப் போராடிய முதல் அமைப்பு, திருவாங்கூர் மாநில காங்கிரசைப் போலவே, பிற்படுத்தப்பட்ட சாதிகள் மற்றும் சமூகங்களுக்கு இடஒதுக்கீடு என்பதையும் தன்னு டைய அடிப்படையான அரசியல் கோரிக்கையில் இணைத்துக் கொண்டது. இடதுசாரிகளாகிய நாங்கள் இரண்டு மாநிலங்களிலும் இந்தக் கோரிக்கைக்கு எங்களுடைய முழுமையான ஆதரவை அளித்தோம். மலையாளம் மற்றும் ஆங்கில மொழிகளில் எழுதிய கட்டுரைகளில், கேரளாவிலும் உள்ள உண்மையான நிலைமை களில், ஜனநாயக இயக்கத்தின் வளர்ச்சியென்பது சாதி இந்து ஆதிக்கத்திற்கு எதிரான ஒழுங்கமைக் கப்பட்ட போராட்டத்துடன் இணைக்கப்படுவ தென்பது எப்படி கட்டாயமாக நிகழும் என்பதை விளக்க முயற்சித்தேன்.

இதற்கிடையே, சோசலிச மற்றும் கம்யூனிச இயக்கங்களைச் சேர்ந்த நாங்கள் தொழிலாளர்க ளையும், விவசாயிகளையும், மாணவர்களையும், ஆசிரியர்களையும், மற்றவர்களையும் அணிதிரட் டும் பணியில் முழுமையாக இறங்கினோம். இந்த செயல்பாட்டிற்காக நடத்தப்பட்ட இயக்கங் களும், உருவாக்கப்பட்ட அமைப்புகளும் அனைத்து சாதிகளையும், அனைத்து மதங்களையும் உள்ளடக்கியதாக இருந்தன என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. 'உலகத்தொழிலாளர்களே, ஒன்று சேருங்கள்' என்கிற மார்க்சிய அறைகூவல் எங்கள் அனைவருக்கும் உத்வேகமளித்தது. ஆதலால், சாதி, மதம் அல்லது

இதர அது போன்ற எண்ணங்கள், முதலாளிகளுக்கு எதிராக தொழிலாளிகளின் ஒற்றுமை, நிலப்பிரபுக் களுக்கு எதிராக விவசாயிகளின் ஒற்றுமை மற்றும் தங்களது கோரிக்கைகளுக்காக மற்ற உழைக்கும் மக்களின் ஒற்றுமை, மற்றும் பிரிட்டிஷ் ஏகாதிபத் தியத்திற்கு எதிராக, சமஸ்தானங்களின் எதேச்சதி காரஆட்சிகளுக்கு எதிராக இவர்கள் அனைவரின் ஒற்றுமை ஆகியவற்றுக்குக் குறுக்கே வருவதற்கு நாங்கள் அனுமதிக்கவில்லை. ஆதலால், ஒடுக்கப் பட்ட சாதிகளின் நலன்களைப் பாதுகாப்பது, சமூகநீதிக்காகக் குரல் கொடுப்பது போன்றவை ஒடுக்கப்பட்ட வர்க்கங்களின் ஒற்றுமை மற்றும் தேச ஒற்றுமை ஆகியவற்றிற்கு உட்பட்டதாக ஆக்கப்பட்டன.

அன்றும் சரி இன்றும் சரி, ஒடுக்கப்பட்ட சாதி மற்றும் மதச் சமூகங்களின் நலன்களுக்காகப் போராடுவதால் ‘தேசியவாதம் மற்றும் சோசலி சம் ஆகிய கொள்கைகளிலிருந்து விலகிச் செல்வ தாக எங்களைக் குற்றம் சாட்டுவோருடன் ஒரு பக்கமும் ஒடுக்கப்பட்ட சாதிகளைச் சேர்ந்த மக்க ளைப் பாதுகாக்கிறோம் என்கிற பெயரில், உண்மையில் அம்மக்களை, சாதி மத வேறுபாடின்றி உழைக்கும் மக்கள் நடத்தும் ஒன்றுபட்ட போராட்ட பொது நீரோட்டத்திலிருந்து தனிமைப் படுத்துவோருடன் மறு பக்கமும் என இரண்டு முனைகளில் நாங்கள் போராட வேண்டியிருந்தது.

சுதந்திரத்திற்குப் பிந்தைய வருடங்களில் குறிப்பாக, கேரளாவிலிருந்த இரண்டு சமஸ்தானங் களின் பொறுப்பற்ற திவான்களின் ஆட்சிகள் நீக்கப்பட்டு, அவற்றினிடத்தில் தேர்ந்தெடுக்கப் பட்ட அரசாங்கங்கள் அமைக்கப்பட்டு, பின்னர் அவை கேரளாவுடன் இணைக்கப்பட்ட பிறகு, இந்த இரு முனைப் போராட்டமானது மேலும் கடுமையானது.

இந்த வளர்ச்சிப் போக்குகள் ஒடுக்கப்பட்ட சாதிகளையும், சமூகங்களையும் சேர்ந்த சாமான்ய மக்களின் வாழ்நிலைமைகளிலும், பணி நிலைமைகளிலும் எந்த உருப்படியான மாற்றத்தையும் கொண்டு வரவில்லை என்ற போதிலும், ஒரு சிறிய மேல் வர்க்கத்தினர் அவர்களிலிருந்து தோன்றி, ஆண்டுகள் செல்லச் செல்ல செல்வாக்கிலும், அதிகாரத்திலும் வளரத் துவங்கினர். வளர்ச்சிப் போக்கின் இறுதியில் மேல்சாதியினர் மற்றும் பெரும்பான்மை சமூகத் தினர் உள்ளிட்ட

அனைத்து சாதிகளையும் சமூகங்களையும் சேர்ந்த பெரும்பான்மையான மக்கள் ஏழைகள் மற்றும் அடித்தட்டு மக்கள் என்கிற தரத்திற்குத் தாழ்த்தப்பட்டனர். ஒடுக்கப் பட்ட சாதியினரையும், மதச் சமூகத்தினரையும் பாதுகாக்க உறுதி ஏற்றுக் கொண்ட, அதே வேளையில் அனைத்து சாதி மற்றும் சமூகங் களைச் சேர்ந்த ஒடுக்கப்பட்ட பிரிவினருடன் எங்களை அடையாளப்படுத்திக் கொண்ட நாங் கள், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பழங்குடி யினருக்கும், பிற்படுத்தப்பட்ட சமூகங்களுக்கும் அளிக்கப்படும் இடஒதுக்கீடு என்பது முற்படுத்தப் பட்ட சமூகங்களைச் சேர்ந்த ஏழைகளின் மீது ஏற்படுத்தக் கூடிய தாக்கம் பற்றியும் சிந்திக்க வேண்டியிருந்தது.

மேல்சாதிகளையும், பெரும் பான்மை மதத்தையும் சேர்ந்தவர்களிலும் மேலும் மேலும் அதிகமான பிரிவினர் தாங்கள் முன்னர் அனுபவித்து வந்த பழைய அந்தஸ்தையும், செழிப்பையும், சிறப்புரிமைகளையும் இப்போது அனுபவிப்பதில்லை என்கிற யதார்த்தத்திற்கேற்ற வேகமூட்டும் வகையில் தாழ்த்தப்பட்ட சாதி களுக்கும், பழங்குடியினருக்கும், பிற்படுத்தப் பட்ட சமூகங்களுக்கும் நிபந்தனையற்ற இடஒதுக் கீடு என்று இருபது ஆண்டுகளுக்கு முன்னர் வடிவமைக்கப்பட்ட தீர்வில் மாற்றங்கள் செய் யப்பட வேண்டும்; சாதியை அடிப்படையாகக் கொண்டு அல்லாமல், பொருளாதார நிலை மையை அடிப்படையாகக் கொண்ட இடஒதுக் கீடு செய்யப்பட வேண்டும் என்கிற கோரிக்கை வலியுறுத்தப்படலானது.

இந்தக் கோரிக்கையை எழுப்பியவர்களின் மீது நாங்கள் அனுதாபம் கொண்டிருந்த போதிலும் அப்போதும் சரி, இப்போதும் சரி எங்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை; ஏனெனில், சாதிய ஒடுக்குமுறை மற்றும் அந்த ஒடுக்கு முறையின் சமூக கலாச்சார, பொருளாதார மற்றும் அரசியல் விளைவுகள், இன்னமும் அகற்றப்பட வில்லை என்றே நாங்கள் கருதுகிறோம். ஆதலால், என்னுடைய 1977-ம் ஆண்டு கட்டுரையில் நான் விளக்கியதைப் போல, நாங்கள் பின்வரும் முடி வுக்கு வந்தோம்.

1) தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் பழங்குடியினருக்கும் இடஒதுக்கீடு இப்போது இருப்பது போலவே எந்த மாற்றமுமின்றி தொடர வேண்டும்.

2) இதர பிற்படுத்தப்பட்ட சாதிகள் மற்றும் சமூகங்களின் விஷயத்திலும், சம்பந்தப்பட்ட சாதி அல்லது சமூகம் தன்னுடைய பிற்பட்ட நிலையைக் கடக்கின்ற வரையில், சாதி மற்றும் சமூக அடிப்படையிலான இடஒதுக்கீடு தொடர வேண்டும்.

3) இந்த பிற்படுத்தப்பட்ட சாதிகள் மற்றும் சமூகங்களில் சிறு பிரிவுகள் இப்போது தாங்கள் அனுபவித்து வரும் சலுகை களால் ஆதாயம் அடைந்திருப்பதால், அவர் களில் நிர்ணயிக்கப்பட்ட உச்ச வரம்பிற்கு மேல் ஆண்டு வருமானம் உள்ளவர்கள் இடஒதுக்கீட்டின் பலன்களிலிருந்து விலக்கி வைக்கப்பட வேண்டும்.

இதை முற்படுத்தப்பட்டவர்கள் பிற்படுத்தப் பட்டவர்கள் ஆகிய இருவருமே கண்டித்தனர். சாதி அடிப்படையிலான இடஒதுக்கீட்டை இது கைவிடுவதாக பிற்படுத்தப்பட்டவர்கள் கண்டித்த னர். முற்படுத்தப்பட்டவர்களோ நேரெதிரான காரணத்திற்காகக் கொந்தளித்தனர். இரு தரப் பினரும் பெரும் போராட்டங்களை நடத்தினர். ஆனால், நாங்கள் எங்கள் நிலையில் உறுதியாக இருந்தோம்.

கேரளாவில் என்னால் பிரதிநிதித்துவப்படுத் தப்படும் கட்சியும், இயக்கமும் சாதி மற்றும் வகுப்புவாத அமைப்புகள் குறித்த பிரச்சனையை அம்மாநில உழைக்கும் மக்களின் அரசியல் மற்றும் மக்கள் இயக்கத்தின் வளர்ச்சியில் அவை என்ன பாத்திரம் வகிக்கின்றன என்கிற கண் ணோட்டத்திலிருந்தே கையாள்கின்றோம் என்பதை மேலே கூறப்பட்டவற்றிலிருந்து காணலாம். நான் சில தத்துவார்த்த ரீதியிலான ஆய்வுகளை மேற் கொண்டு, சில முடிவுகளுக்கு வர வேண்டி யிருந்தது. அது குறித்து இப்போது பார்க்கலாம்.

தொழிற்சங்கமும், விவசாயிகள் இயக்கமும்

காங்கிரஸ் சோசலிசவாதிகளாகத் துவங்கி, பின்னர் கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள், தொழிற் சங்கம் மற்றும் விவசாயிகள் இயக்கத்தை வளர்க்க இயல்பாகவே கடுமையாக உழைத்தோம். இரண் டிலுமே முன்னேற்றம் மிக விரைவாக இருந்தது. அன்றைய சென்னை ராஜதானியின் மலபார் மாவட்டம் முழுவதிலும் பற்பல தொழிற்சங்கங் களை எங்களால் ஒரு ஐந்தாண்டுகளுக்குள்ளாகவே உருவாக்க

முடிந்தது. கொச்சி மற்றும் திருவாங் கூர் பகுதிகளிலும் கூட, ஏற்கனவே இருந்த தொழிற் சங்கங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளவும், பல புதிய சங்கங்களை உருவாக்க வும் முடிந்தது. விவசாய இயக்கத்தைப் பொறுத்த வரையில், அதனுடைய வளர்ச்சி பெரும்பாலும் மலபார் பகுதிக்கு உட்பட்டதாக மட்டுமே இருந் தது; ஏனெனில், குத்தகை சீர்திருத்தச் சட்டம் மலபாரைவிட கொச்சி மற்றும் திருவாங்கூரில் பெருமளவிற்கு முன்னேறியிருந்தது. வேறு வார்த் தைகளில் கூறினால், நிலப்பிரபுத்துவ (ஜென்மி) ஆதிக்கம் மலபார் பகுதியில் மிக வலுவாக இருந்தது.

அன்றைய சென்னை ராஜதானியின் முதல் காங்கிரஸ் அரசாங்கம் நானும் உறுப்பினராக அங்கம் வகித்த மலபார் குத்தகை சீர்திருத்தக் குழுவை அமைத்தாக வேண்டிய நிர்பந்தம் கொடுக்கும் அளவு மலபார் பகுதியின் விவசாய இயக்கத்தின் வளர்ச்சி அவ்வளவு வேகமாக இருந்தது; என்னைத் தவிர, நிலச்சீர்திருத்தப் பிரச் சனையில் இடதுசாரிப் பார்வை கொண்டிருந்த மேலும் இருவர் அதில் உறுப்பினர்களாக இருந் தனர். அந்தக் குழுவின் ஒரு டஜனுக்கு மேற்பட்ட எஞ்சிய உறுப்பினர்கள் வலதுசாரி அரசியல் எண்ணம் கொண்டவர்கள். ஆதலால், நாங்கள் மூவரும் எங்களது அதிருப்தியை எழுத்து மூலம் தனியே தெரிவிக்க வேண்டியிருந்தது.

குத்தகைச் சட்டங்களில் உடனடியாக திருத் தங்கள் செய்யப்பட வேண்டும் என்கிற ஆலோ சனைகள் எங்களது தனித்தனி குறிப்புகளில் ஏறத் தாழ ஒரே மாதிரி இருந்தபோதும், என்னுடைய குறிப்பு, நிலப்பிரபுத்துவத்தின் தோற்றம் மற்றும் வளர்ச்சி பற்றியும், அதன் சமூகப் பொருளாதார தாக்கம் பற்றியும் விவாதிப்பதாக மிக விரிவான தாகவும், மிக நீண்டதாகவும் இருந்தது. முந்தைய குழுக்கள் மற்றும் ஆணையங்களின் ஆய்வுகளை அடிப்படையாக வைத்துக் கொண்டும், குத்தகை விவசாயிகளின் வாடகைச் சுமை பற்றிய சில கணக்கீடுகளுடன், ஜென்மி முறையை முற்றிலும் ரத்து செய்ய வேண்டும் என்று வலுவாக நான் வாதாடினேன்; இந்த முறை ரத்து செய்யப்பட்டால் தான் மக்களின் பொருளாதார, சமூகக் கலாச் சார, மற்றும் அரசியல்-நிர்வாக பின்தங்கிய நிலை மையை அகற்ற முடியும் என்றும் கூறினேன். இது உடனடியாக அடைய முடியாத அடிப்படை யான குறிக்கோள். ஆதலால், தற்போதுள்ள சட்டங்களில் சில குறிப்பிட்ட உடனடி சீர்திருத் தங்கள், அதாவது, சில

திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் என்ற ஆலோசனையை முன்வைத்தேன்.

இது, தங்களது உடனடிக் கோரிக்கைகளை அடைவதற்காக விவசாயிகள் நடத்திய அன்றாடப் போராட்டங்களை, மலபார் பகுதியில் நிலமான்ய -ஜென்மி முறைக்கு முடிவு கட்ட வேண்டுமென்கிற அடிப்படையான பிரச்சனையின் மட்டத்திற்கு உயர்த்துவதற்கு நான் எடுத்த முதல் முயற்சியா கும். இந்த ஆய்வும், அதே நேரத்தில் கேரளாவில் அரசியல் இயக்கத்தில் ஏற்பட்ட வளர்ச்சியும், குறிப்பாக கொச்சி மற்றும் திருவாங்கூர் சமஸ் தானங்களில் ஒரு பொறுப்புள்ள அரசாங்கத்திற் காக நடந்த ஜனநாயக இயக்கம் ஆகியவை நில மான்ய முறையை அதன் சமூகப் பொருளாதார மற்றும் அரசியல் நிர்வாக வடிவில் ஆராய்வதற்கு என்னை இட்டுச் சென்றது. மலபார் பகுதியின் ஜென்மி முறையும், கொச்சி மற்றும் திருவாங்கூர் சமஸ்தானங்களில் மன்னராட்சியும் ஒரே நாண யத்தின் இரு பக்கங்களாகப் பார்க்கப்பட்டன. மலபார் பகுதியின் குத்தகை விவசாயிகள் இயக் கமும் மற்றும் சமஸ்தானங்களில் பொறுப்புள்ள அரசாங்கத்திற்காக நடந்த ஜனநாயக இயக்கமும் ஒரு பொதுவான நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு இயக்கத்தில் ஒன்றிணைக்கப்பட வேண்டியிருந்தது.

இது சென்னை ராஜதானியின் மூன்று நிர்வாக மாவட்டங்களிலும், கொச்சி மற்றும் திருவாங் கூர் பகுதிகளிலும் வசிக்கும் மலையாளம் பேசும் மக்கள் மறுபடியும் ஒன்றிணைக்கப்பட வேண்டு மென்கிற அரசியல் கோரிக்கையை எங்கள் கட்சி எழுப்புவதற்கு இட்டுச் சென்றது. மலபாரின் ஜென்மி ஆதிக்க ஒழிப்புடன் 'ஐக்கிய கேரள' கோரிக்கையும் சேர்க்கப்பட்டது. யுத்தத்தின் ஆரம்பத்திலும், யுத்தத்தின் போதும் கம்யூனிஸ்ட் கட்சியின் செயல்பாடுகளை கொச்சி மற்றும் திருவாங்கூர் பகுதிகளுக்கும் நீட்டிப்பதற்கு இது உதவி செய்தது.

இது என்னை மற்றொரு போராட்ட -தத்து வார்த்தப் பணியை மேற்கொள்ளச் செய்தது. 'ஒண்ணே கால் கோடி மலையாளிகள்' (ஹ ஊசடிசந யனே ய ணுரயசவநச ஆயடயலயடநநள) என்கிற தலைப்பில் ஒரு பிரசுரம் 1945-ல்வெளியிடப்பட்டது; அது ஐக்கிய கேரளக் கோரிக்கைக்காக வாதாடியது. அதில் இனங்காணப்பட்ட புதிய மாநிலம் ஜனநாயகத் தன்மையும், மதச்சார்பற்ற தன்மையும், நவீன தன்மையும் கொண்டதாக இருக்கும். மலபார் குத்தகை சீர்திருத்தக் குழுவின் அறிக்கையில்

உள்ள என்னுடைய அதிருப்தி குறிப்பின் மைய ஆலோசனையாக முன்வைக்கப்பட்ட 'உழுபவனுக் கே நிலம் சொந்தம்' என்கிற முழக்கம் இப்போது அடையப்பட்டுள்ள ஐக்கிய கேரளத்தின் ஒரு முக்கியமான அம்சமாகும். அத்துடன், மொத்த தேசத்திற்கும் என கம்யூனிஸ்ட் கட்சி வகுத்துள்ள திட்டப்படி, உழைக்கும் மக்களின் நலனுக்காகச் செயல்படும் நவீன ஜனநாயக, மதச்சார்பற்ற அரசு என்கிற மற்ற அம்சங்களும் இதனுடன் சேர்க்கப்பட்டது.

கிட்டத்தட்ட அதே சமயத்தில் சுந்தரய்யா வின்' விசாலாந்திரா' மற்றும் பவானி சென்னின் 'நதூன் பங்களா' ஆகிய இதே போன்ற பிரசுரங் கள் ஆந்திராவிலும், வங்கத்திலும் வெளியிடப் பட்டன; கேரளா, ஆந்திரா, வங்கம் ஆகிய மாநிலங் களில் வெகுஜன அரசியல் தளம் கொண்டதாக, கம்யூனிஸ்ட் கட்சி அன்று வலுவாக இருந்தது. ஆதலால், சுதந்திர, ஜனநாயக, மதச்சார்பற்ற இந்தியா என்று கட்சி கருதியிருந்த இந்தியாவின் ஒரு பகுதியாக தொழிலாளி வர்க்கம், விவசாயி கள் மற்றும் இதர உழைக்கும் மக்கள் பிரிவினரின் நலன்கள் பாதுகாக்கப்படுவது உத்திரவாதப்படுத் தப்படும். தங்களது சொந்த மொழி வழி மாநிலம் என்கிற கோரிக்கையை இம்மாநிலங்களில் உள்ள கம்யூனிஸ்ட் கட்சிகள் எழுப்பியதும் இயற்கையானதே.

எதிர்கால சுதந்திர இந்தியாவின் ஒரு பகுதி யாக புதிய ஜனநாயக, மதச்சார்பற்ற கேரள மாநிலத்தின் பொதுவான வடிவமைப்பை இவ்வி தம் வகுத்த பின்னர், கேரளாவின் மற்றும் கேரள மக்களின் கடந்த கால வரலாற்றை ஆராய்வதற்கு எனக்குக் கிடைத்த முதல் வாய்ப்பைப் பயன்படுத் திக் கொண்டேன். அதன் பலனாக மலையாள மொழியில் கேரளாவின் சுருக்கமான வரலாறு 1947-ல்எழுதப்பட்டு, அதற்கடுத்த வருடத்தில் அது வெளியிடப்பட்டது.

கேரளாவின் மத்தியகால சமுதாயத்தை வர்ணிக்க அந்தப் பிரசுரத்தில் பயன்படுத்தப் பட்ட சொல் நிலப்புரபுத்துவம்என்பதல்ல என்பதும், மேல்சாதிகள், ஜென்மிக்கள் உள்ளூர் குலபதிகள்' என்கிற பொருள்படும்'சாதி-ஜென்மி-நடுவழி மேதாவித்வம்' என்பது. 'பிராமணர்களை சமூகரீதியாக உயர்த்துவதும், ஜென்மிக்களை பொருளாதார ரீதியாக உயர்த்துவதும், சமந்தா-நாயர் சாதிகளை நிர்வாக ரீதியாக உயர்த்துவ தும்', மிகப் பெரும்பான்மையான மக்களின் நிலையை

சமூக ரீதியாகவும், பொருளாதார ரீதி யாகவும், அரசியல் ரீதியாகவும்தாழ்த்துகின்றது எனவும் மேற்குறிப்பிட்ட உயர் பிரிவினரிலிருந்து விரல் விட்டு எண்ணத்தக்க மாபெரும் அறிஞர் கள், மற்றும் கவிஞர்கள், கலைஞர்கள் தோன்று வதற்கு வழிவகுத்ததானது மிகப் பெரும்பான் மையான மக்களின் கலாச்சார ரீதியாகப் பின் தங்கிய நிலைமைக்கு இட்டுச் சென்றது இப்படித் தான் எனவும் நான் அதை விவரித்திருந்தேன்.

அப்போது வெளிக் கொணரப்பட்ட அந்தப் பிரசுரம் கேரள வரலாற்றிற்கு மார்க்சிய வர்க்கப் போராட்ட கோட்பாட்டைப் பொருத்திப் பார்க்கும் என்னுடைய முதல் முயற்சியாகும். முதல் முயற்சி என்பதால், இயல்பாகவே அதில் குறைகளும் இருந்தன. பெரும் எண்ணிக்கையிலான விமர்சனங்கள் வரப்பெற்று அவற்றிலிருந்து பலனும் பெற்றேன். அந்த நூல் ஒன்றுக்கு மேற்பட்ட முறை திருத்தி எழுதப்பட்டது. அதன் பலனாக 'கேரளாவில் தேசியப் பிரச்சனை' (1952) என்கிற தலைப்பில் என்னுடைய முதல் ஆங்கில நூல் வெளிவந்தது; அதன் மேம்படுத்தப்பட்ட வடிவம் 'கேரளா-நேற்று, இன்று, நாளை' (1967) என்கிற தலைப்பில் வெளிவந்தது. இந்த இரண்டு நூல் களிலிருந்து விரிவாக மேற்கோள் காட்டாமல், பிந்தைய நூலில் 'நிலப்பிரபுத்துவ முறையின் தோற்றம்' என்கிற தலைப்பில் ஒரு அத்தியாயம் இருக்கிறது என்பதை சுட்டிக்காட்டுகின்றேன். அதில் பின்வருமாறு கூறியிருந்தேன்:

'சேரப்பேரரசின் காலத்திலோ அல்லது அதற்கும் முன்பாகவோ...வர்க்கப் பிரிவினைகள் தோன்றிக் கொண்டிருந்தன....என்றாலும், வர்க்கப் பிரிவினைகள் சாதிப்பிரிவினைகளின் வடிவத்தை எடுத்தன. பெருமளவில் செல்வம் குவிக்கும் நிலையில் இருந்தவர்கள் உயர்சாதியினராகக் கருதப்பட்டனர்; செல்வக் குவிப்பில் அடுத்த நிலையில் இருந்தவர்கள் அடுத்த நிலை உயர் சாதியினராகக் கருதப்பட்டனர்; அப்படியே படிப்படியாக இறங்கி, செல்வம் எதுவும் குவிக்கவே முடியாத நிலையில் இருக்கும் வர்க்கத்தவர் தாழ்ந்த சாதியினராயினர்'.

அடுத்து, 'ஒவ்வொரு சாதிக்கூட்டத்திற்கும் சொந்தமான கோவில் இருந்தது; மொத்த சாதி யின் கூட்டு அமைப்பின் பிரதிநிதியாகயும், அதன் பிரதிபலிப்பாகவும் அக்கோவிலின் தெய்வம் இருந்தது. அந்தக் கோவிலின் பெயரிலும், அதன் தெய்வத்தின் பெயரிலும் தலைமுறை தலைமுறை யாகச் சேர்க்கப்பட்ட செல்வம்

வைக்கப்பட் டிருந்தது. இருப்பினும் படிப்படியாகக் கோவிலின் கட்டுப்பாடும், ஆதலால் அதன் சொத்தும், முதலில் மொத்த சாதிக் கூட்டத்திடமிருந்து கூட்டு அமைப்பிற்கும் (உதாரணமாக, பஞ்சாயத்துக்கு-), பின்னர் குடும்பங்களின் தலைவர்களுக்கும், அதற்குப் பின்னர் ஒரு குடும்பத்தின் தலைவருக் கும் உரியதாகச் சுருங்கியது. அது அந்தக் கட்டத்தை அடைந்தவுடன், கோவிலின் தர்மகர்த்தா என்கிற முறையில் கோவிலின் சொத்துரிமை கொண்டிருந்த குடும்பத் தலைவரிடமிருந்து, அதன் மூலமாக மொத்த சாதியினுடையதாக இருந்த சொத் துரிமை, அந்தக் குடும்பத் தலைவருக்கு உரியதாக உரிமையுடன் மாற்றப்படுவதற்காக மட்டுமே இருந்தது.'

ஆதலால், ஜென்மி ஆதிக்கத்தின் தோற்று வாயும், வளர்ச்சியும் பிரிக்க முடியாத வகையில் சாதிப் படிநிலையின் இருப்பு மற்றும் வளர்ச்சி யுடன் தொடர்புடையதாக இருக்கின்றது. உண்மையில், மலையாளத்தில் நான் எழுதிய கேரள வரலாறு குறித்த நூலில் நான் புள்ளிவி வரங்களுடன் பின்வருவதை நிரூபித்திருக்கின்றேன்:

1) *சொத்துடமை விஷயத்தில் புலையர்களும், பறையர்களும், கணக்கர்களும் மற்ற ஒடுக்கப்பட்ட சாதிகளும் மிகவும் கீழானவர்கள். மறுபுறமோ, மிக உயர்ந்த சாதியினரான நம்பூதிரிகள், சொத்துடமை விசயத்தில் மிக உயர்ந்த நிலையில் இருக்கின்றார்கள். நான் வந்தடைந்த முடிவு களுக்கு அடிப்படையாக உள்ள கொச்சியைச் சேர்ந்த நான்கு கிராமங்களில் எந்த ஒரு சாதியும் நம்பூதிரிகளைவிட அதிகமான சொத்துள்ளவர் களாகவோ அல்லது ஒடுக்கப்பட்ட சாதிகளை விட குறைவான சொத்துள்ளவர்களாகவோ இருக்கவில்லை.*
2) *நம்பூதிரிகளுக்கு அடுத்தபடியாக மற்ற சாதி இந்துக்கள் வருகின்றனர். அவர்களில் சொத்துட மை விசயத்திலும், சாதிப் படிநிலையிலும் மிகக் கீழானவர்களாக இருப்பவர்கள் நாயர்கள்.*
3) *மிக மிக ஏழைகளான ஒடுக்கப்பட்ட சாதி களுக்கு அடுத்த படியாக ஈழவர்களும் முஸ்லிம் களும் வருகின்றனர்; அதே வேளையில், கிறித்து வர்கள் நாயர்களை விட தாழ்வானவர்களாகவும், ஆனால் ஈழவர்கள் மற்றும் முஸ்லிம்களைவிட மேலானவர்களாகவும் இருக்கின்றனர்.*

ஆதலால், இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்ட காலகட்டத்தில் (1930) சாதியப்

படிநிலையின் அந்தஸ்திற்கும் சொத்துடமைக்குமிடையில் தெளி வான ஒன்றுடன் ஒன்று உறவு இருக்கின்றது என்பது என் முடிவுகளுக்கு அடிப்படையாக அமைந்தது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள உண்மைத் தரவு கள் மத்தியகால கேரளா தொடர்பானவை. எந்த வகையிலும் முக்கியத்துவமற்றதாகக் கருதப்படும் மாற்றங்கள் கடந்த இரண்டு நூற்றாண்டுகளில் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன; குறிப்பாக முதலாம் உலகப்போருக்குப் பின்னரும் இன்னும் கூடுதலாக நாடு விடுதலை அடைந்த பின்னர். தலைமுறைகள் கடந்து மேல்சாதிகளைச் சேர்ந்த குடும்பங்கள் தரித்திரமாக்கப்பட்டு, மென்மேலும் பெரிய அளவில் பாட்டாளிகளின் கூட்டத்திற்கு தூக்கி வீசப்படுகின்றன. கீழ்சாதிகளைப் பொறுத்த வரையில், மொத்த தாழ்த்தப்பட்ட சாதியினர் உள்பட, முன்பு போலவே அதே சமூகப் பொருளா தார குறைபாடுகளால் தொடர்ந்து பாதிக்கப் பட்டு வருகின்றனர். தாழ்த்தப்பட்டவர்கள் அல்லாத, ஆனால் பிற்படுத்தப்பட்ட சாதிகளைச் சேர்ந்த சிறு குழுக்கள் பிரிட்டிஷ் ஆட்சி காலத்திலிருந்து ஏற்பட்டு வரும் முதலாளித்துவ வளர்ச்சியைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு தங்களை முன்னேற்றிக் கொண்டிருக்கின்றன. தரித்திரமாக்கப்பட்ட மேல்சாதி மற்றும் பிற்படுத் தப்பட்ட சாதிகளில் பெரும்பான்மையானோர் மற்றும் ஒட்டுமொத்த தாழ்த்தப்பட்ட சாதியினர் ஆகியோருக்கிடையில் ஓரளவிற்கான இணைப்பு இவ்விதமாக ஏற்படுகின்றது.

வேறு வார்த்தைகளில்கூறினால், இந்தியாவின் எஞ்சியுள்ள பகுதிகளைப் போலவே, கேரளா வின் அரசியல் வாழ்வில் இன்னமும் சாதி ஒரு முக்கிய காரணியாக இருப்பதால், செயல்படுவ தால், சாதி மற்றும் சமூகங்களுக்கு அப்பாற்பட்டு, வர்க்கங்களின் ஒற்றுமையை அடிப்படையாகக் கொண்டு செயல்படும் அரசியல் கட்சிகள் மற்றும் வெகுஜன அமைப்புகள், மென்மேலும் முக்கியத்துவம் பெற்று வருகின்றன. ஆதலால், பொது வாழ்வில் உள்ள முற்போக்கு சக்திகள் சாதிய ஒடுக்குமுறைகள் நிலவுவதை கவனிக்கும் அதே நேரத்தில் வளர்ந்து வரும் வர்க்கங்களைத் தங்களது அடிப்படையாகக் கொள்ள வேண்டும்; ஆதலால், வர்க்கச் சுரண்டலுக்கும், ஒடுக்கு முறைக்கும் எதிரான போராட்டத்தில் அனைத்து சாதிகளையும் சமூகங்களையும் சேர்ந்த மக்களை ஒன்றிணைப்பது இன்னும் முடிக்கப்படாத பணியான ‘சாதி-ஜென்மி-நடுவழி மேதாவித்வத்தை’ முடிவிற்கு

கொண்டு வருவதற்கு அதிஅவசிய மான முன்நிபந்தனையாகும். மேல்சாதிகளைச் சேர்ந்த முற்போக்கு சக்திகள் தங்கள் பங்கிற்கு கீழ்சாதிகளின் விருப்பத் தேர்வுகளின் விஷயத்தில் எதிர்மறையான அணுகுமுறையை மேற்கொள்ள முடியாது.

இவ்வாறாக, எங்களது கட்சியும் அதன் தொண்டனாகிய நானும் வர்க்கப் போராட்டம் எனும் மார்க்சியக் கோட்பாட்டை எங்களது அடிப்படையாகக் கொண்டிருக்கின்றோம்; சுரண்டும் வர்க்கங்களுக்கு எதிராக சாதி மத வேறுபாடின்றி சுரண்டப்படுபவர்களை ஒற்று மைப்படுத்த வேண்டிய தேவைகளுக்காக சாதி ஒடுக்குமுறைப் பிரச்சனையை அதற்கு உட்பட்ட தாகக் கொண்டிருக் கின்றோம்.

அகில இந்திய அளவில்

மேலே விவரிக்கப்பட்டபடி ஆரம்பத்தில் கேரளாவிற்கு மட்டுமே உட்பட்டதாக இருந்த என்னுடைய செயல்பாடுகள் படிப்படியாக அகில இந்திய அரசியலுக்கு விரிவடைந்தன. அதனால் நான் 1940 மற்றும் 1950களில் அன்றாடப் போராட்டங்களிலும், பிரச்சாரத்திலும், தத்து வார்த்த அடிப்படையிலும் அகில இந்திய முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு பிரச்சனை களைக் கையாள வேண்டியிருந்தது. கேரளாவில் கம்யூனிஸ்ட் கட்சியின் ஒரு நிர்வாகியாகவும், கட்சியின் அகில இந்திய மையத்தில் சில பொறுப்பு களை எடுத்துக் கொண்டவனாகவும் நான் பணியாற்றிக் கொண்டிருந்த நாட்கள் அவை.

1950களின் இறுதியிலும், 1960களின் துவக்கத் திலும் கம்யூனிஸ்ட் கட்சி கடுமையான உட்கட்சிக் கருத்து வேறுபாடுகள் நிலவிய காலகட்டத் திற்குள் நுழைந்ததென்பது அனைவருக்கும் தெரி யும். இந்திய சமுதாயத்தின் தன்மை, இந்தியப் புரட்சியின் சமூகப் பொருளாதார உள்ளடக்கம், மற்றும் கொள்கை, உத்தி, மூலஉத்தி தொடர் பான எண்ணற்ற பிரச்சனைகள் இயல்பாகவே எழுந்தன. என்னுடைய பங்கிற்கு, இந்திய சமுதா யம் மற்றும் புரட்சியின் பொருளாதார, சமூக, கலாச்சார மற்றும் அரசியல் பிரச்சனைகள் குறித்து தீவிரமான ஆய்வு மேற்கொள்வது என்று நான் தீர்மானித்தேன். அதன் பலனாக 'இந்திய வடிவ சோசலிசத்தின் பொருளாதாரம் மற்றும் அரசியல்' என்கிற தலைப்புடைய நூல் 1963-64ல் எழுதப்பட்டு அது ஆகஸ்ட் 1966ல் பதிப்பிக்கப் பட்டது. உண்மையில், அது

இந்தியப் புரட்சியின் அடிப்படைத் திட்டத்தின் பரிணாம வளர்ச்சிக்கு என்னுடைய பங்களிப்பாகும்; அதன் அடிப்படை யில் கம்யூனிசஇயக்கத்திற்குள் இருந்த வேறு பாடுகளைத் தீர்ப்பதற்கு முயற்சிக்கப்பட்டது.

1964ல் வகுக்கப்பட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)-யின் திட்டம் இந்த வேறு பாடுகளைத் தீர்த்ததென்பது தெரிந்ததென்கிற போதிலும்; ஒன்றுபட்ட கம்யூனிஸ்ட் கட்சியின் ஒரு பிரிவு அதை ஏற்கவில்லை. மற்ற பல பிரச் சனைகளுடன், தற்போதைய இந்திய சமுதாயத் தில் முதலாளித்துவத்திற்கு முந்தைய சமுதாயத் தின் செல்வாக்குகள் எந்த அளவிற்கு இருக்கின்றது என்பது பற்றியும் அந்த திட்டம் பரிசீலிக்க வேண்டியிருந்தது. பிரச்சனையும், அதன் தீர்வும் கட்சித் திட்டத்தில் பின்வரும் வார்த்தைகளில் விளக்கப்பட்டிருக்கின்றன:

'மேற்கு ஐரோப்பாவிலும், இதர முன்னேறிய முதலாளித்துவ நாடுகளிலும் நிகழ்ந்தது மாதிரி யான முதலாளித்துவ வளர்ச்சி இந்தியாவில் நிகழவில்லை. இந்திய சமுதாயம் முதலாளித் துவப் பாதையில் வளர்ந்து கொண்டிருந்த போதி லும், அது முதலாளித்துவத்திற்கு முந்தைய சமுதாயத் தின் பலமான கூறுகளை இன்னமும் தன்னுள் கொண்டுள்ளது. முதலாளிகளால் அழிக்கப்பட்ட, முதலாளித்துவத்திற்கு முந்தைய சமுதாயங்களின் சாம்பலின் மீது வளர்ந்த முன்னேறிய முதலாளித் துவ நாடுகள் போலல்லாது, இந்தியாவில் முதலாளித் துவம் அதற்கு முந்தைய சமுதாயத்தின் மேலே அப்படியே பொருத்தப்பட்டது. ஒரு நூற்றாண்டுக் கும் மேலாக ஆட்சி புரிந்த பிரிட்டிஷ் ஆட்சி யாளர்களோ அல்லது 1947ல் அதிகாரத்தைப் பெற்ற இந்திய முதலாளிகளோ, முதலாளித்துவ சமுதாயத்தின் தடையற்ற வளர்ச்சிக்கும், பின்னர் அது சோசலிச சமுதாயத்தால் நீக்கப்படுவதற்கும் இன்றியமையாத செயலான முதலாளித்துவத் திற்கு முந்தைய சமுதாயங்களுக்கு மரண அடி கொடுக்கும் வேலையைச் செய்யவில்லை.

ஆதலால், இன்றைய இந்திய சமுதாயமானது, ஏகபோக முதலாளித்துவம் சாதி, மத, இனக்குழு நிறுவனங்களுடன் இணைந்திருக்கும் ஒரு விசித் திரமான கலவையாகும். இவ்வாறாக, முதலாளித் துவத்திற்கு முந்தைய சமுதாயத்தின் அழிவில் நாட்டம் கொண்ட முற்போக்கு சக்திகளை ஒன்று படுத்தும் கடமையும், ஜனநாயகப் புரட்சியை மிக விரைவாக பூர்த்தி செய்வதற்காக அதற்குள்ளேயே

இருக்கின்ற புரட்சிகர சக்திகளை உறுதிப்படுத் தும் கடமையும், சோசலிசத்திற்கு மாறிச் செல்வ தற்காக தளத்தைத் தயார்படுத்தும் கடமையும் தொழிலாளி வர்க்கத்தின்மீதும், அதன் கட்சியின் மீதும் விழுந்துள்ளது.'

கட்சியின் இந்தப்புரிதலின் அடிப்படையில், நான் மேலே குறிப்பிட்ட நூலில் சாதிப் பிரச் சனையை விவாதித்திருக்கின்றேன். அதிலிருந்து சில பொருத்தமான பகுதிகளை இங்கு கொடுப் பது பயனுள்ளதாக இருக்கும்:

'மக்களின் சமூக வாழ்வின் மீது சாதியம் மற்றும் வகுப்புவாதம் ஆகியவற்றின் பிடி பலவீனமடைந்து கொண்டிருக்கும்போது, அவை அரசியல் ரீதி யாக மேலும் மேலும் வலுவடைந்து வருகின்றன என்பதென்னவோ முரண்பாடாகத் தோன்றலாம். ஆனால், அதுதான் உண்மை. தங்களது சாதியால் மற்றும் மதத்தால் விதிக்கப்பட்ட பாரம்பரிய சடங்குகள் மற்றும் பழக்க வழக்கங்களை மீறுகிற அனைத்து சாதிகளையும், மதக் குழுக்களையும் சேர்ந்த மக்களின் எண்ணிக்கை இடைவிடாமல் அதிகரித்துக் கொண்டிருக்கும் நாட்கள் இவை. பழைய புனிதத் தடைகள் முந்தைய தலைமுறை யினரை விட இன்று குறைவாகவே கடைப் பிடிக்கப்படுகின்றது. முந்தைய தலைமுறையே தன்னுடைய முன்னோர்களைவிடக் குறைவான அளவே கடைப்பிடித்தது. சாதி மற்றும் மதத்தால் விதிக்கப்பட்ட புனிதத் தடைகளைக் கடைப்பிடிக் காத ஒரு போக்கு குறைந்தபட்சம் ஒன்றரை நூற்றாண்டுகளாக நிகழ்ந்து கொண்டிருக்கின் றது. தீட்டு மற்றும் தீண்டாமை, சமபந்தி போஜனம் மற்றும் சாதிகளுக்கு இடையிலான திருமணம் போன்றவை சம்பந்தமான விதிகள் மக்கள் மீதான தங்களுடைய பிடிமானத்தை மென்மேலும் இழந்து வருகின்றன.

அதே சமயம் சாதி, மதச் சமூகம், இனம் ஆகியவை நாட்டின் அரசியல் வாழ்வில் மென்மேலும் சக்தி மிக்கவையாக ஆகி வருகின்றன. ஒரு சமூக அமைப்பு என்கிற முறையில் சாதியின் விதிகளையும், தடை களையும் கடைப்பிடிக்க மறுக்கும் அதே நபர்கள் தேர்தல் நேரத்தில் வாக்காளர்களை வசீகரிப்பதற் காகவும், வேலைகளைப் பெறுவதற்காக அல்லது ஒப்பந்தங்களைப் பெறுவதற்காக சரியான இடத் தில் இருக்கும் சரியான நபர்களின் மீது செல் வாக்கு செலுத்துவதற்காகவும் சாதி இறுக்கத் தைப் பயன்படுத்துகின்றனர்.'

இந்த முரண்பட்ட நிகழ்வை முறையாகப் புரிந்து கொள்வதற்கு இரண்டு உண்மைகளைக் கவனிப்பது அவசியம்.

முதலாவதாக, நவீன முதலாளித்துவம், 'முதலில் பிரிட்டிஷ் மேலாதிக்கவாதிகளின் மூலமாகவும், பின்னர் தேசிய முதலாளி வர்க்கத்தின் மூலமாக வும் இந்தியாவின் சமூகப் பொருளாதார, கலாச் சார, அரசியல் வாழ்வின் பல்வேறு பக்கங்களில் புரட்சிகரமான மாறுதல்களை நிகழ்த்தியது.... ஆதலால், தங்களது குறுகிய சுயநலன்களுக்காகச் செயல்பட்ட போதும், பிரிட்டிஷ் ஆட்சியாளர் கள்' இந்தியாவின் ஆன்மா' என்றழைக்கப்படு வதின் வேர்களை வெட்டினர்; நூற்றாண்டு கால பழமையான இந்திய சமுதாயத்தில் புரட்சிகர மான மாறுதல்களை அவர்கள் கொண்டு வந்தனர்.'

இரண்டாவதாக, 'தாங்கள் அன்னிய ஆட்சி யாளர்கள் என்கிற உண்மை நிலையே பிரிட்டி ஷார்களை அன்னிய ஆட்சியாளர் தங்களுடைய நலன்களை பாதுகாக்கவே உள்ளார்கள் என்று கருதிய இந்திய சமுதாயத்தின் சில வர்க்கங்களை யும், பிரிவினைரையும் சார்ந்திருக்கச் செய்தது; உழைக்கும் மக்கள் திரளையோ அல்லது எழுந்து கொண்டிருந்த முதலாளித்துவ வர்க்கத்தையோ தங்களது அன்னிய ஆட்சியை ஆதரிப்பதற்காகச் சார்ந்திருக்க முடியாது என்பதால், பிரிட்டி ஷாருக்கு முந்தைய பழைய ஆட்சியின் பிரதிநிதி களான- மன்னர்கள் மற்றும் நிலப்பிரபுக்கள், காலாவதியாகிப் போன சாதிப்பிரிவினைகள் நிறைந்த பழைய சமுதாயத்தின் பூசாரிகள் மற்றும் அவர்களைப் போன்றவர்கள், மத அதிகார பீடத்தின் பிரதிநிதிகள், கிராம சமுதாயங்கள் மற்றும் இனக்குழுத் தலைவர்கள், இதரர்கள் ஆகியோரின் ஆதரவைத் திரட்ட வேண்டியிருந்தது. ஆதலால், பழைய சமுதாயத்தின் பிரதிநிதிகளான இந்தப் பிரிவைச் சேர்ந்த ஒவ்வொருவரிடமும் அவர்கள் சமரசம் செய்து கொள்ள வேண்டி யிருந்தது. அவர்கள் மக்கள் திரளின் பிற்படுத்தப் பட்ட (சாதி, மதம், இனம் இத்தியாதி) உணர்வை யும் பயன்படுத்த வேண்டியிருந்தது.

அன்னிய ஆட்சியாளர்களுக்கும், சாதி உள்ளிட்ட காலாவதியாகிப் போன சமூக நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்குமிடையிலான இந்த சமரசம் சுதந்திரப் போராட்டத் தலைமையிலும் பிரதி பலித்தது. அரசியல் ரீதியான முற்போக்குத் தன்மையுடன், சமூகக் கலாச்சார பிற்போக்குத் தன்மையும் இணைந்திருந்ததென்பது

எழுந்து கொண்டிருந்த முதலாளித்துவ ஜனநாயக இயக் கத்தின் ஒரு முகமாகும். சமூகக் கலாச்சார முற் போக்குத் தன்மை அன்னிய ஆட்சியாளர்களுக்கு அரசியல் ஆதரவளித்ததென்பது அதே நாணயத் தின் மறுபக்கமாகும்.

வர்ண தர்மம் அல்லது இஸ்லாமியச் சட்டம் ஆகியவற்றை பாதுகாப்போம் என்கிற உறுதி யேற்றுக் கொண்ட, இந்து அல்லது முஸ்லிம் மறுமலர்ச்சியை ஆதரிக்கும் சுதந்திரப் போராட்ட வீரர்கள்; சுதந்திரப் போராட்டத்தை எதிர்த்து பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுடன் கைகோர்த்துக் கொண்ட முற்போக்குவாதிகள் மட்டுமின்றி 'சோசலிஸ்டுகளும்' – ஆகிய இரண்டு மாற்றுக் களை எழுந்து கொண்டிருந்த முதலாளி வர்க்கத் தின் அரசியல் தலைமை முன் வைத்தது.

இந்த இரண்டு போக்குகளும் இறுதியில் 'ஒரே, பிரிக்க முடியாத இந்தியா (அகண்ட பாரதம்)' மற்றும் 'இந்து மற்றும் முஸ்லிம் ஆகிய இரண்டு தேசங்களைக் கொண்ட இந்தியா' ஆகிய இரு கோட்பாடுகளில் தங்களை பலப்படுத்திக் கொண் டன. விடுதலை இயக்கத்தின் முதலாளித்துவ தலைமையின் போற்றப்பட்ட லட்சியம் நிறை வேறியபோது அது பழைய, ஒன்றுபட்ட, பிரிட் டிஷ் ஆளுகைக்குட்பட்ட இந்தியா இரண்டு சுதந்திர தேசங்களாகப் பிரிக்கப்படும்வடிவத்தை எடுத்ததென்பது அந்தத் தலைமையின் தோல்வியே ஆகும்.

அந்த நிலைமையை உண்டாக்கிய முதலாளித் துவ தலைமையின் பிரிவுகளுக்கெதிராகப் போராட்டப் பதாகையை உயர்த்திப் பிடித்தது நாங்கள்தான் என்று கம்யூனிஸ்ட் இயக்கத்தைச் சேர்ந்த எங்களால் பெருமையுடன் கூறிக் கொள்ள முடியும். எங்களது முயற்சியில் நாங்கள் தோல்வி அடைந்தோம் என்பதென்னவோ உண்மைதான்; அத்துடன் அந்த முயற்சி எடுக்கும் போதும் சில பெரும் பிழைகளைச் செய்தோம் என்பதும் உண்மைதான் என்றபோதும், விடுதலை இயக்கத்தில் பங்கேற்ற மற்ற ஒவ்வொரு அரசியல் கட்சியும், அமைப்பும், குழுவும் முதலாளித்துத் தலைமையின் இந்த அல்லது அந்தப் பிரிவின் பின்னால் அணிதிரண்டபோது, கம்யூனிஸ்டு களாகிய நாங்கள் இரு பிரிவுகளையும் எதிர்த்துப் போராடினோம் என்பதும் உண்மை. நாட்டி லிருந்த அரசியல் கட்சிகள், குழுக்கள், அமைப்பு கள் ஆகியவற்றில், இந்தியாவில் வாழும் பல்வேறு தேசிய இனங்களை

ஒன்றுபடுத்துவதற்காகவும், ஒரு தன்னார்வக் கூட்டமைப்பை அமைப்பதன் மூலம் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங் களின் பலன்களை உறுதிப்படுத்தவும், மக்களின் புதிய இந்தியாவை நிர்மாணிக்கவும் போராடியது நாங்கள் மட்டுமே. மொத்த அரசியல் நிலைமை யில் உடனடியாகத் தாக்கத்தை ஏற்படுத்த முடி யாத அளவு நாங்கள் மிகச் சிறிய சக்தியாக இருந் தோம் என்பதும், ஆதலால் நாடு பிரிக்கப்பட்ட தும், அது துயரம் மிக்க வகுப்புக் கலவரங்களுக்கு இட்டுச் சென்றது என்பதும் உண்மை. ஆனால் நாங்கள் முயற்சித்தோம் என்பதே திருப்திக்கும் பெருமிதத்திற்கும் உரிய விசயமாகும்.

1930களின் பின்பாதியில் இந்தியாவில் கம்யூனிஸ்ட் இயக்கம் தன்னை ஒன்றுபடுத்திக் கொண்டு, நாட்டின் அரசியல் நிலைமையில் நேரடியாகத் தலையிட ஆரம்பித்த நாளிலிருந்து, அதன் தலை மையும், தொண்டர்களும், அதைப் பின்பற்றும் மக்களும் காங்கிரஸ், முஸ்லிம்லீக் ,மற்றிதர அரசியல் கட்சிகளில் தங்களைப் பலப்படுத்திக் கொண்ட முதலாளித்துவ – நிலப்பிரபுத்துவ வர்க்கங்களின் தத்துவத்திற்கு எதிராக இடைய றாத போராட்டத்தை நடத்த வேண்டியிருந்தது. 1940களில், வெள்ளையனே வெளியேறு இயக்கத் திலிருந்து ஒதுங்கியிருந்த அதே வேளையில், விடுதலை இயக்கத்தின் மீது அடக்குமுறையை ஏவும் பிரிட்டிஷ் கொள்கையை எதிர்த்தும். சோவியத் யூனியன் மற்றும் இதர உலகப் புரட்சி கர சக்திகளின் பின்னாலும் அதே வேளையில் அத்தருணத்தில் பாசிஸ எதிர்ப்பு முகாமில் இருந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக வும் போராடினோம்; காங்கிரஸ் வகை அகண்ட பாரதத்திற்கும், முஸ்லிம்லீகின் இரு தேசக்கொள் கைக்கும் எதிராக ஏககாலத்தில் நாங்கள் நடத்திய போராட்டம், சுதந்திரம், ஜனநாயகம் மற்றும் நவீனமயமாக்கல் ஆகியவற்றிக்கான இந்தியா வின் போராட்டத்தை வெற்றிகரமான முடிவை நோக்கி எடுத்துச் செல்லும் முயற்சியிலிருந்து பிரிக்க முடியாததாகும்.

இந்தப் போராட்டம் எங்களைப் பெரும்பா லும் விடுதலைப் போராட்டத்தின் பொது நீரோட்டத்திலிருந்து தனிமைப்படுத்தியது என்கிற போதிலும், இந்தியாவிலும், அயல்நாடுகளிலும் முதலாளி வர்க்கத்தையும் அதன் கூட்டாளிகளை யும் எதிர்த்துப் போராடுவதற்காக பாட்டாளி வர்க்கப் புரட்சி எனும் பதாகையின் கீழ் மென்மே லும் பெரிய எண்ணிக்கையில் உழைக்கும் மக்களை, எங்களது

மனஉறுதியை அது பதப்படுத்தியது. அதனால்தான், நாட்டிலுள்ள இடதுசாரி சக்தி களில் தனியொருசக்தியாக, வங்கத்தின் தெபாகா இயக்கம், ஆந்திராவின் தெலுங்கானா இயக்கம், மலபார், மராட்டியத்தின் வொர்லி பகுதி மற்றும் இதர பிரம்மாண்டமான போர்க்குணமிக்க இயக் கங்களை, யுத்தத்திற்குப் பிந்தைய வருடங்களி லும், விடுதலைக்குப் பிந்தைய வருடங்களிலும் எங்களால் நடத்த முடிந்தது. அந்தப் போக்கில் சில பெரும் பிழைகளை நாங்கள் செய்தோம் என்கிற உண்மை இன்னும் பெருமளவிலான மக்களின் ஆதரவைப் பெறுவதிலிருந்து எங்களைத் தடுத்துவிடவில்லை.

விடுதலைக்குப் பின் இயற்றப்பட்ட புதிய அரசியல் சட்டத்தின் கீழ் நடந்த முதல் பொதுத் தேர்தலில் கம்யூனிஸ்ட் கட்சி நாடாளுமன்றத்தி லும், நான்கு மாநிலங்களிலும் முக்கிய எதிர்க்கட் சியாக ஆனதிலிருந்து இது தெளிவானது. அந்த நான்கில் இரண்டு மாநிலங்களில் கட்சி, தன் தோழமைக் கட்சிகளுடன் சேர்ந்து சட்டமன்றத் தில் கிட்டத்தட்ட பெரும்பான்மை பெற்று, கூட்டணி அரசாங்கம் அமைக்கும் நிலை வரை வந்தது. ஐந்து வருடங்களுக்கு பின்னர் கட்சி உள்ளபடியே பெரும்பான்மை பெற்றது; அதைத் தொடர்ந்து அது தானே தன்னுடைய சொந்த மாநில அரசாங்கத்தை அமைத்தது.

இது கம்யூனிஸ்ட் கட்சிக்கு மட்டுமே உரித் தான பெருமை. பின்வந்த ஆண்டுகளில் கட்சியில் பிளவு ஏற்பட்டபோது பிளவுபட்ட இரண்டில் வலுவானதாக இருந்த கட்சி இடதுசாரி மற்றும் இதர எதிர்க்கட்சிகளைக் கொண்ட ஆட்சிகள் அமைக்கப்பட்டபோது அந்த கூட்டணியின் முக்கிய அங்கமாக ஆனது. இன்றும் கூட, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) மூன்று மாநிலங் களில் கூட்டணிக்கும், அரசாங்கத்திற்கும் தலைமை தாங்குகின்றது. வேறு எந்தக்கட்சியோ, குழுவோ அல்லது அமைப்போ இத்தகைய ஒரு நிலையை வகித்ததில்லை.

1980ம்ஆண்டின் அரசியல் நிகழ்வுகள் மேலே கூறப்பட்டது எவ்வளவு உண்மை என்பதை மீண்டுமொரு முறை அடிக்கோடிட்டுக் காட்டின. முதலாளித்துவ-நிலப்பிரபுத்துவ ஆளும் வர்க்கங் களின் கட்சிகள் அனைத்தும் உடைந்து சிதறி யதை அந்த வருடம் கண்டதுடன் அவற்றில் மிக வும் வலுமிக்க கட்சி, மத்தியிலும், பெரும்பாலான மாநிலங்களிலும் அதிகாரத்தில் இருந்தபோதும், அது உள்கட்சி

மோதல்களால் பிளவுண்டு கிடந்த துடன் மக்களின் மீதான தனது பிடிமானத்தை அது மிக வேகமாக இழந்து கொண்டிருந்தது. ஜனநாயகத்திற்காகப் போராடுவது, உழைக்கும் மக்களின் நலன்களைப் பாதுகாப்பது என்கிற கொள்கை வழிப்பட்ட நிலை எடுக்கவும், அதற் காக இடதுசாரிகளுடன் ஒத்துழைக்கவும் மறுத்த அனைத்து எதிர்க்கட்சிகளுக்கும் அதே கதிதான் ஏற்பட்டுக்கொண்டிருந்தது. ஆதலால், மக்களுக் குச் சேவை செய்யும், ஆளும் வர்க்கங்களை எதிர்த்துப் போராடும் ஒரு எளிய திட்டத்தின் அடிப்படையில் இடதுசாரிக் கட்சிகள் மற்றும் இதர எதிர்க்கட்சிகளை ஒன்றிணைக்கும் ஒரு இயக்கம் நடந்து கொண்டிருக்கின்றது.

ஆளும் வர்க்கங்களை எதிர்த்து நிற்கும் ஆற்றல் உள்ள ஒரே தத்துவம், இந்தியாவின் பிரச்சனை களுக்கு நியாயமான, நீடித்திருக்கும் தீர்வுகளைக் கண்டுபிடிக்கக் கூடிய தத்துவம், மார்க்சியம்-லெனினியம்தான். கம்யூனிஸ்ட் இயக்கத்தைச் சேர்ந்த நாங்கள் இந்த தத்துவத்தை இந்தியாவின் பிரத்தியேக நிலைமைகளுக்குப் பிரயோகிக்க முயற்சிப்பதால் தான் 1964 வரை ஒன்றுபட்ட கம்யூனிஸ்ட் இயக்க மும், அதற்குப் பின்னர் சிபிஐ(எம்)-மும் அரசியல் தளத்தில் மிதமான வெற்றிகளைப் பெற்று வந்துள்ளோம்.

4. தேர்தல்கள் பற்றி மார்க்சும் எங்கெல்சும்

வீ. பா. கணேசன்

இன்று இந்திய சமூகத்தில் அதிகரித்து வரும் அனைத்து வகையான அரசியல், பொருளாதார, சமூக, கலாச்சார சிக்கல்களை இன்றைய அரசியலை அவதானிக்கும் ஒவ்வொருவருமே எதிர்நோக்கி வருகின்றனர். ஓர் எதிர்க்கட்சியின் வேலை என்பது ஆளும் கட்சியின் அனைத்து நடவடிக்கைகளையும் குறைகூறுவது மட்டுமே என்பதற்கு மாறாக கம்யூனிஸ்ட் இயக்கம் சுயமாக பரிசீலித்து, நாட்டை எதிர்நோக்கி வரும் பிரச் சனைகளை எதிர்கொள்வதற்கான தனது செயல் பாட்டிற்கான அணுகுமுறையை உருவாக்கிக் கொள்ள வேண்டியது அவசியமாகும். தொழிற் புரட்சி தலையெடுத்த காலத்தில் ஒன்றன் பின் ஒன்றாக வெளிவந்த எண்ணற்ற பிரச்சனைகளை மார்க்சிய ஆசான்கள் அன்று எதிர்கொண்டார் களெனில், இன்றைக்குத் தலையெடுத்துள்ள செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் போன்ற, இன்றைய காலப்பகுதியில் நாம் சந்திக்கின்ற, சந்திக்கவிருக் கும் பிரச்சனைகளும் கணக்கில் அடங்காதவையே.

அவ்வகையில் இந்த ஆண்டு மே மாதம் நடை பெற்ற இந்திய நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு நாட்டில் உருவாகியுள்ள கடினமானதொரு சூழ்நிலை மார்க்சிய ஆதரவாளர்கள் மத்தியில் பல பெரும் கேள்விகளை எழுப்பியுள்ளது. உலகின் பல நாடுகளைப் போன்றே இந்தியாவும் வலதுசாரிப் பாதையை நோக்கித் திரும்பியுள்ளதா என்ற கேள்வியும் நம்மிடையே எழுந்துள்ளது. இத்தகைய பின்னணியில் அரசு, நாடாளுமன்றம், தேர்தல் ஆகியவை குறித்தும் ஒரு தொழிலாளி வர்க்கக் கட்சியின் இலக்குகள் பற்றியும் மார்க்ஸ், எங்கெல்ஸ் ஆகியோரின் சீரிய கருத்துக்கள் இந்த விஷயத்தில் தற்கால நடப்புகளை ஆய்வு செய்வதற்கு வழிகாட்டுகின்றன.

ஒரு வர்க்கம் என்ற வகையில் அதன் அளவு எவ்வளவு சிறியதாக இருப்பினும் சரி, அதன் வளர்ச்சி எவ்வளவு குறைவாக இருந்தபோதிலும் சரி, பாட்டாளி வர்க்கம் தன்னை முதலில் ஓர் அமைப்பாகவும், பின்னர் ஓர் அரசியல் கட்சியாக வும் அணிதிரட்டிக் கொள்ள வேண்டும் என்று பாட்டாளி வர்க்கத்தின் வரலாற்றுச்

சிறப்புமிக்க பாத்திரம் குறித்து உறுதிப்பட எடுத்துக் கூறியது மார்க்ஸ்-எங்கெல்ஸின் கம்யூனிஸ்ட் அறிக்கை.

1848-ம் ஆண்டில் ஜெர்மனியில் உருவான கிளர்ச்சிக்குப் பிந்தைய சூழலில், ஒரு நாடாளு மன்றம் உருவாகும் வாய்ப்பு இருக்குமானால் தொழிலாளர்களின் கட்சி தன் வேட்பாளர்களை முன்நிறுத்த வேண்டும் என்றும், அக்கட்சியின் தனிப்பட்ட நடவடிக்கையின் மூலம் வெற்றி பெறும் ஒரு சில வேட்பாளர்களின் இருப்பு அத்தகைய அவையில் மிக முக்கியமானதாகும் என்றும் ஜெர்மன் தொழிலாளர் கட்சியின் மத்தியக் குழுவிற்கு மார்க்ஸ் அறிவுரை வழங்கி யிருந்தார்.

ஜெர்மனியில் புரட்சிகர சூழ்நிலை தணிந்த நிலையில் மார்க்சின் இந்த 1848 மார்ச் மாத கடிதம் கட்சியின் பொதுக் கவனத்திற்கு வைக்கப் படவில்லை என்றபோதிலும், ஜெர்மனியில் முதலாவது வெகுஜன சோஷலிச தொழிலாளர் கட்சி உருவாக்கப்படுவதையும், தனது வர்க்க நலன்களை முன்னெடுத்துச் செல்ல ஜெர்மன் நாடாளுமன்றத்தை அது பயன்படுத்திக் கொள் வதையும் மார்க்ஸ்- எங்கெல்ஸ் ஆகியோரால் தங்கள் வாழ்நாளிலேயே காண முடிந்தது.

அதைப் போன்றே அன்றைய ஜெர்மானிய சமூக ஜனநாயக கட்சியின் தலைவரும், புரட்சிகர கோட்பாடுகளை திருத்தி செயல்பட்டு வந்தவரும் நாடாளுமன்ற வாதத்தில் மூழ்கிப் போனவரு மான பெர்ன்ஸ்டைன் போன்றவர்களின் சந்தர்ப்ப வாதப் போக்கை எதிர்த்து மார்க்சும் எங்கெல்சும் தங்கள் கருத்துக்களை சுட்டிக் காட்டுகையில், நவீன சமூகப் புரட்சியின் மிகப்பெரும் உந்து சக்தியாக விளங்கும் முதலாளி வர்க்கத்திற்கும் பாட்டாளி வர்க்கத்திற்கும் இடையிலான வர்க்கப் போராட்டத்தை இயக்கத்திலிருந்து ஒருபோதும் அகற்றலாகாது. தொழிலாளி வர்க்கம் தனது சொந்த வர்க்கப் போராட்டத்தின் மூலமாகவே தனது வர்க்கத்தின் விடுதலையை வென்றடைய முடியும் என்பதையும் அவர்கள் ஆழமாக வலியுறுத்தினர்.

ஜெர்மனியில் 1871-ல் வலிவு பெற்ற பிஸ்மார்க் கின் ஆட்சிக் காலத்தில் 1878 முதல் 1891 வரை நடைமுறையில் இருந்த சோஷலிசத்தைத் தடை செய்யும் சட்டங்களுக்கு மத்தியிலும் 1884-ல் 5 லட்சம் வாக்குகளைப் பெற்றிருந்த ஜெர்மன் தொழிலாளர் கட்சியின் செல்வாக்கு 1890-ல் இரண்டு மடங்கானது. அது மீண்டும்

1898-ல் மேலும் இரண்டு மடங்காக உயர்ந்தது. (1912-ல் அக்கட்சி 40 லட்சத்திற்கும் மேற்பட்ட வாக்கு களைப் பெற்றது.) இந்தப் பின்னணியில் கட்சி யின் வளர்ச்சியை சுட்டிக்காட்டிய எங்கெல்ஸ் ப்ரான்சில் வர்க்கப் போராட்டங்கள் என்ற மார்க்சின் நூலுக்கு 1895-ல் எழுதிய முன்னுரை யில் ஜெர்மன் நாடாளுமன்றத்தைப் பயன்படுத்து வதன் முக்கியத்துவம் குறித்து கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டிருந்தார்:

"அனைவருக்குமான வாக்குரிமை என்பது வேறெந்த பயனையும் அளிக்கவில்லை என்றாலும் ஒவ்வொரு மூன்றாண்டுகளுக்கும் நமது ஆதரவாளர் களின் எண்ணிக்கையைக் கணக்கெடுக்க நமக்கு வாய்ப்பளிக்கிறது. தொடர்ச்சியாகவும் துரிதமாக வும் நமக்கு அதிகரித்து வரும் ஆதரவு என்பது நமது வெற்றியை உறுதிப்படுத்தும் அதே நேரத் தில் நம் எதிரிகளுக்கு கலக்கத்தையும் ஏற்படுத்து கிறது. அவ்வகையில் பிரச்சாரத்திற்கான ஒரு கருவியாகவும் அது மாறுகிறது. நமது சொந்த வலிமையையும், நம்மை எதிர்க்கும் அனைத்துக் கட்சிகளின் வலிமையையும் அது நமக்கு உணர்த்துவதோடு நம்மை விட்டு விலகி நிற்கும் விரிவான பகுதி மக்களிடையே தேர்தல் நேரத்தில் சென்று நமது கருத்துக்களை பரப்புவதற்கான வாய்ப்பையும் இவை நமக்கு வழங்குகின்றன. நாடாளுமன்றத்தில் நமது உறுப்பினர்கள் மக்களின் பிரச்சனைகளைப் பேசுவது போலவே, நமக்கு எதிரான தாக்குதல்கள் குறித்தும் மக்களிடையே உரக்கப் பேச முடிகிறது. நமது பொதுக் கூட்டங் கள், பத்திரிக்கைகள் ஆகியவற்றின் மூலமாக மக்களிடம் நாம் பேசுவதை விட மேலும் அதிக மான சுதந்திரத்துடன் நம்மால் பேச முடிகிறது. இந்த விஷயத்தில் நாடாளுமன்றத்திலும் பொது வெளியிலும் சோஷலிச கருத்தோட்டங்களுக்கு எதிரான சட்டங்கள் பயனற்றவை என்பதை நம்மால் தொடர்ந்து நிரூபிக்கவும் முடிந்துள்ளது." (மார்க்ஸ்-எங்கெல்ஸ் தொகுப்பு நூல்கள் தொகுதி 27, பக். 516)

எனினும் இத்தகைய தேர்தல் வெற்றிகளின் விளைவாக கட்சியின் நீண்ட கால இலக்குகளை கட்சித் தலைவர்கள் ஒதுக்கித் தள்ளும் போக்கை மேற்கொள்வதை உணர்ந்து கொண்ட எங்கெல்ஸ் ஜெர்மன் சமூக ஜனநாயகக் கட்சியில் தலையெடுத்துள்ள இந்தப் போக்கிற்கு எதிராகவும் குரல் கொடுத்தார். 1891-ம் ஆண்டின் கட்சித் திட்டத்திற்கான நகல் குறித்த தனது விமர்சனத்தில் இதைச் சுட்டிக் காட்டிய எங்கெல்ஸ் இத்தகைய சந்தர்ப்ப வாதம் மிகவும் அபாயகரமானது

என்றும் குறிப்பிட்டார்.

1871-ம் ஆண்டில் பிரெஞ்சு பாட்டாளி வர்க்கம் மிகக் குறுகிய காலத்திற்கு பாரீஸ் நகரைக் கைப்பற்றியிருந்த போதிலும் இறுதியில் பெரும் அழிவுக்கு வழிவகுத்த பாரீஸ் கம்யூன் நிகழ்வில் கிடைத்த அனுபவத்தைக் கணக்கில் கொண்ட மார்க்சும் எங்கெல்சும் கம்யூனிஸ்ட் அறிக்கையில் ஒரே ஒரு முக்கிய திருத்தத்தை மேற்கொண்டனர். "ஏற்கனவே நடைமுறையில் இருக்கும் அரசு இயந்திரத்தை தனக்கு ஆதரவாகவும், தனது நோக்கங்களுக்காகவும் பாட்டாளி வர்க்கத்தால் பயன்படுத்த இயலாது. பொருளாதார ரீதியாக வலிமைமிக்க ஆளும் வர்க்கத்தின் ஆட்சியை நிலைநிறுத்தும் வகையில் உருவாக்கப்பட்ட அரசை புதியதொரு சோஷலிச சமூகத்தைப் படைக்க விழையும் தொழிலாளர்கள் கையி லெடுத்து அப்படியே பயன்படுத்திக் கொண்டு விட முடியாது" என்றும் அவர்கள் குறிப்பிட்ட னர்.

மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட நவீன அரசு என்பது கூலி உழைப்பை மூலதனம் பயன்படுத்திக் கொள்வதற்கான ஒரு கருவியே என குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம் என்ற தனது நூலில் குறிப்பிடும் எங்கெல்ஸ் "அனைவருக்குமான வாக்குரிமை என்பது தொழிலாளி வர்க்கம் எந்த அளவிற்கு முதிர்ச்சி அடைந்துள்ளது என்பதைக் காட்டும் ஓர் அளவுமானியே ஆகும். நவீன உலகில் அதுவே போதுமானது. பொதுமக்களின் கருத்தை வெளிப் படுத்தும் இந்த அளவுமானி தொழிலாளர் களிடையே கொதிநிலை அதிகரித்துள்ளதை சுட்டிக் காட்டும்போது, அவர்களும் சரி, முதலாளி களும் சரி, தாங்கள் எங்கே நிற்கிறோம் என்பதை உணர்ந்து கொள்வார்கள்" என்றும் விரிவாக எடுத்துரைத்துள்ளார்.

மார்க்சிய ஆசான்களின் தெளிவான இந்தக் கருத்துக்களை உள்வாங்கி தொழிலாளி வர்க்கத் தின் வலிமையை அதிகரிக்கும் வகையிலான வர்க்கப் போராட்டங்களை மேலும் தீவிரப்படுத்தும் கடமையை மேற்கொள்வதே இன்றைய தேவை யாகும். அதே நேரத்தில் சோஷலிச சமூகம் குறித்த சிந்தனையை பெரும்பகுதி உழைக்கும் மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கான அனைத்து வகையான வாய்ப்புகளையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற ஆசான்களின் அறிவுரை யையும் நாம் முழுமையாக கையகப்படுத்திக் கொள்ள வேண்டிய

அவசியமும் உள்ளது. கம்யூனிஸ்ட் அறிக்கை வெளியாகி 170 ஆண்டுகளுக்குப் பிறகும் கூட, உலகெங்கிலும் பல்வேறு பரிசோதனைகளுக்கும், சோதனை களுக்கும் பிறகும் கூட, சமூகத்தின் அவலங்களுக் கான மாமருந்தாக சோஷலிச கருத்தாக்கம் செயலூக்கம் மிக்கதொரு தத்துவமாக இன்றள வும் தொடர்ந்து நீடித்து வருகிறது. சமகாலப் பிரச்சனைகளை இணையற்ற உத்வேகத்துடன் எதிர்கொண்ட மார்க்சும் எங்கெல்சும் வழங்கி யுள்ள அறிவுரைகள் நமக்கு உரிய வழிகாட்டும் கலங்கரை விளக்கங்கள் என்பதை உணர்ந்து செயல்படுவதே இக்காலப் பகுதியின் தேவையாகும்.

5. கருந்துளை; அறிதல், அறிவியல், இயக்கவியல் பொருள் முதல்வாதம்!

இரா.சிந்தன்

மனிதகுலம், தனது முதல் கருந்துளை படத்தை பார்த்துக் கொண்டிருக்கிறது. அறிவி யல் ஆராய்ச்சியில் இது ஒரு புதிய உயரம். கருந் துளை என்றால், அண்டத்தில் காணப்படுவதி லேயே புரிந்துகொள்ள சிக்கலான பொருளாகும். ஏற்கனவே நாம் பல்வேறு ஆராய்ச்சிகளை மேற் கொண்டிருக்கிறோம், இப்போது நாம் அதனைப் படம்பிடிக்கும்முயற்சியில் முன்னேறியுள்ளோம். அறிவியல் கோட்பாடுகளின் அடிப்படையில் அனுமானித்த ஒன்றை, கண்ணுற்றுக் காண்பது மிக முக்கியமானது. இப்போது நமக்கு கிடைத்திருப்பது, எம் 87 என அழைக்கப்படுகின்ற கேலக்சி எனப்படும் ஒரு அண்டத்தின் மையத்தில் அமைந்த மிகப் பெரிய கருந்துளையின் படமா கும். பூமியில் இருந்து 5,349 கோடி ஒளியாண் டுகள் தொலைவில் அது அமைந்திருக்கிறது. அதாவது அங்கிருந்து ஒளி நம்மை வந்து அடைய சுமார் 5,349 கோடி ஆண்டுகள் ஆகும். நம் சூரியனுடைய நிறையை விட 65 லட்சம் மடங்கு பெரியதாக அந்தக் கருந்துளை உள்ளது.

கருந்துளையை படம்பிடித்தல் எப்படி சாத்தியமானது என்பது குறித்து ஏராளமான கட்டுரைகள் இணையத்தில் கிடைக்கின்றன. இந்த முயற்சி, இனி வரும் நாட்களில் பூமியை விட பெரிய தொலைநோக்கியை ஏற்படுத்துவதற்கான சாத்தியத்தை ஏற்படுத்தியுள்ளது. அவ்வாறு நடந்தால் கருந்துளை பற்றிய வேறு பல சந்தேகங் களுக்கும் விடை கிடைக்கும். ஐன்ஸ்டீனின் தத்து வம் எவ்வளவு தூரம் சரி; குவண்டாம் தத்துவத் துடன் ஐன்ஸ்டீன் தத்துவத்தை இணைத்து புதிய இயற்பியல் தத்துவத்தை ஏற்படுத்துவது போன்ற, மேலும், வானில் அறிய முடியாத பல உண்மை களை கூர்நோக்கி ஆராய முடியும்.

கருந்துளை என்பது என்ன?

சூரியன் போன்ற விண்மீன்களை எடுத்துக் கொண்டால் அவற்றுள் எப்போதும் எதிரும் புதிருமான முரண்பட்ட இரண்டு விசைகள் செயல்பட்டுக்

கொண்டிருகின்றன. முதலாவதாக அவற்றின் சொந்த நிறை ஏற்படுத்தும் ஈர்ப்பு விசை காரணமாக அவை சுருங்கும். அவ்வாறு சுருங்கும்போது மையத்தில் அழுத்தம் கூடி கருப் பிணைவு ஆற்றல் எனும் ஒருவகை அணுவிசை ஏற்படும். இதன் காரணமாகவே சூரியன் ஒளிர் கிறது. வெப்ப ஆற்றல் எல்லாவற்றையும் விரிவு படுத்தும். ஆகவே இந்த விரிவுபடுத்தும் வெப்ப விசை சுருங்க செய்யும் ஈர்ப்பு விசைக்கு எதிராக செயல்பட்டு எப்போதும் சூரியனுள் எதிர் எதிர் முரண்கள் நிகழ்ந்து கொண்டிருக்கும். சூரியன் நிலையாக இருப்பதும் ஒளிர்வதும் இந்த எதிர் எதிர்முரண்களின் செயலால்தான். எதிர்மறை களின் ஒற்றுமையும், முரண்களும் என்ற இயக்க வியல் பொருள்முதல்வாத விதி இங்கே நமக்கு தெளிவாக புலப்படுகிறது.

பருப்பொருள் அளவில் ஏற்படுகின்ற மாற்றம் அதன் பண்பிலும் மாற்றத்திற்கு இட்டுச் செல்லும் என்ற பொருள்முதல்வாத இயக்கவியல் விதிக்கு ஏற்ப குறிப்பிட்ட அளவை விட விண்மீனின் நிறை கூடினால் அதன் தன்மை மாறிவிடும். சூரியனை போல சுமார் மூன்று மடங்குக்கு மேலே நிறை கொண்ட விண்மீன்கள் தமது வரலாற்றில் ஒரு கட்டத்தில் சொந்த ஈர்ப்பு விசையின் காரணமாக சுருங்கி வெள்ளைக்குள்ள விண்மீன் என்ற ஒரு வகை விண்மீனாக மாறும் என முதன்முதலில் கூறியவர் விஞ்ஞானி சந்திரசேகர் . இவர்தான் குறிப்பிட்ட விண்மீனின் நிறை கூடக் கூட அந்த விண்மீனின் தன்மை மாறுபடும் என முதலில் நிறுவியவர்.

அதே போல சூரியனை விட சுமார் இருபது மடங்கு கூடுதல் நிறை கொண்ட ராட்சச குண்டு விண்மீன்கள், தமது இயல்பு வளர்ச்சியில் ஒரு கட்டத்தில் அந்த விண்மீன் வெளியிடும் வெப்ப ஆற்றல், அதன் ஈர்ப்பு விசையை தாக்கு பிடிக்க முடியாமல் போகும். ஈர்ப்பு விசையின் கை ஓங்குவதுடன் அந்த விண்மீன் தனக்குள்ளேயே சுருங்கத் தொடங்கும். இப்படி சுருங்கத் தொடங் கும் விண்மீன்கள் “ஸ்வார்ஸ் சைல்ட்” விட்டம் என்ற அளவுக்கு சுருங்குகின்றன.

அவ்வாறு “ஸ்வார்ஸ் சைல்ட்” விட்டம் எனும் அளவுக்கு குறைவாக சுருங்கி போனால் அதன் ஈர்ப்பு விசை வெகுவாக அதிகரிக்கும். இவ்வாறு உருவாவதுதான் கருந்துளை.

கருந்துளைகளுக்கு ஈர்ப்பு விசை எந்த அளவுக்கு உச்சமாக

இருக்குமெனில், அது தான் வெளியிடும் வெளிச்சத்தைக் கூட தானே விழுங் கிக்கொள்ளும். அதன் மீது ஒளியை பாய்ச்சினால் அதனை திரும்ப பிரதிபலிக்கவும் செய்யாது. இதன் காரணமாக கருந்துளைகளைப் பார்க்க முடியாது. எனவே, அவைகளை ஆராய்வதும் எளிதல்ல.

சார்பியல் கோட்பாட்டின் அடிப்படையிலேயே கருந்துளையின் இருப்பு குறித்த முதல் அனு மானம் எழுந்தது. ஆய்வுகள் தொடங்கின. இது நாள் வரையில் கருந்துளைகள் அண்டங்களில் நிலவுவதற்கான தற்செயல் ஆதாரங்கள்தான் கிடைத்து வந்தன. இப்போது கருந்துளையின் படம் கொடுக்கும் சில விபரங்கள் சார்பியல் கோட்பாட்டின் அனுமானங்களை மேலும் உறுதிப்படுத்துகின்றன.

சார்பியல் கோட்பாடும் கருந்துளைகளும்:

19 ஆம் நூற்றாண்டில் தொடக்கத்தில் ஒளியின் திசை வேகத்தை கணக்கிடும் அளவுக்கு இயற்பியல் முன்னேற்றமடைந்தது. ஒளியின் திசைவேகமானது, ஆராய்ச்சியாளரின் திசை வேகத்திற்கு ஏற்ப மாற்றத்திற்கு உள்ளாகும் என்றுதான் அதுவரை நிலவிவந்த விசையியல் (மெக்கானிக்ஸ்) அறிஞர்கள் நம்பினார்கள். ஆனால் எதிர்பார்ப்புக்கு மாறாக ஒளியின் திசைவேகம் நிலையானது என்ற முடிவு வந்தது. இக்கண்டுபிடிப்பு விசையியல் மற்றும் மின் காந்தவியல் (எலெக்ட்ரோ மேக்னெட்டிக்ஸ்) ஆகிய துறைகளிடையே முரண்பாட்டை ஏற்படுத்தியது.

இச்சிக்கலைத் தீர்க்கும் ஆராய்ச்சியில் ஈடு பட்ட ஐன்ஸ்டைன், அதன் முடிவில், 1905ஆம் ஆண்டு, சிறப்பு சார்பியல் கோட்பாட்டை வகுத் தளித்தார். அந்தச் சமயத்தில் அவர் ஸ்விட்சர் லாந்து நாட்டின் காப்புரிமை அலுவலகம் ஒன்றில் கடைநிலை ஊழியராக பணியாற்றி வந்தார் என்பதையும் இங்கே குறிப்பிடவேண்டும். மேற் சொன்ன கோட்பாடுதான் ஐன்ஸ்டைனின் மேதமையை உலகுக்கு அறிமுகப்படுத்தியது.

1905ஆம் ஆண்டில் ஐன்ஸ்டைன் மொத்தம் நான்கு கருத்துகளை வெளியிட்டு அறிவியல் உலகை ஆச்சரியத்தில் ஆழ்த்தினார். அதில் இரண்டு கருத்துகள் சார்பியல் தொடர்பான வையாகும். மேலும் ஒன்று நிறையைஆற்றலாக மாற்ற முடியும் என நிரூபித்த சமன்பாடான நு=ஆஊ2 என்பதும், மற்றொன்று அணுக்களின்

இருப்பை நிரூபித்தலும் ஆகும். சார்பியல் குறித்தான ஐன்ஸ்டைனின் கருத்துக்கள், காலம் – வெளி ஆகியவை இரண்டும் அறுதியானவை அல்ல. எல்லோருக்கும் ஒரே மாதிரியானவை அல்ல. காலத்தையும், வெளியையும் உணர்கிற நபர் அல்லது பொருட்களின் இயக்கத்தை சார்ந்து, காலம், வெளி ஆகிய இரண்டுமே வேறுபடும். மேலும் காலம், வெளி இரண்டும் ஒன்றில்லாமல் மற்றொன்று தனித்திருக்காது. எனவே, காலம், வெளி ஆகியவைகளை காலம்-வெளி என இணைத்துக் குறிப்பிடவேண்டும் எனவும் நிறுவுகிறார்.

அதன் பிறகு, மேற்சொன்ன சிறப்பு சார்பியல் கோட்பாட்டினை அடித்தளமாக கொண்டு, ஈர்ப்பு விசையை விளக்குவதற்கானமுயற்சியில் ஐன்ஸ்டைன் ஈடுபடுகிறார். 10 ஆண்டுகள் கழித்து, இவ்வாராய்ச்சியின் முடிவில் பொது சார்பியல் கோட்பாட்டை வெளியிடுகிறார். காலம்-வெளி இரண்டினுடைய வளைவின் காரணமாக ஏற் படுகிற விளைவே ஈர்ப்பு விசை என்றும், பெரும் நிறை கொண்ட ஒரு பொருளை ஒளி கடந்து செல்லும்போது அது வளைகிறது எனவும் குறிப்பிடுகிறார்.

மேற்சொன்ன கோட்பாட்டு விளக்கங்களின் அடிப்படையிலேயே கருந்துளையின் இருப்பு முதலில் அனுமானிக்கப்பட்டது. இந்த அனு மானங்கள் விஞ்ஞான ஆய்வுகளின் வழியே பரிசோதிக்கப்படுகின்றன. கருந்துளை பற்றிய ஐன்ஸ்டைனின் கருத்தை நவீன காலம் வரையில் விஞ்ஞானிகள் தொடர்ந்து வளர்த்தெடுக்கின்றனர்.

1974ஆம் ஆண்டு ஸ்டீபன் ஹாக்கிங் வகுத்துக் கொடுத்த கோட்பாடு கருந்துளைகளின் இருப்பை புரிந்துகொள்ள உதவுவதாக அமைந்தது. கருந் துளைகள் வெளியிடும் கதிரியக்கம் (ரேடியேசன்) பற்றிய கருத்துக்களையும் அவரே வெளியிட்டார். ஸ்டீபன் ஹாக்கிங் மறைவுக்கு பின் அவரது குழுவினர் கருந்துளைகளின் இயக்கம் குறித்த மேலும் சில கருத்துகளை வெளியிட்டனர். அதாவது கருந்துளைக்குள் ஈர்க்கப்படும் எந்த ஒரு பொருளும் அதன் வெப்பத்தை அதிகரிக்கும் என்பதும் மேலும் கருந்துளைகளில் இருந்து ஹாக்கிங் கதிரியக்கம் மட்டுமல்லாது போட்டான் இழைகள் வெளியேறலாம் எனவும் குறிப்பிட்ட னர். (போட்டான் இழைகள் குறித்த கருத்து நிரூபிக்கப்படாத அனுமானமே) இப்படியான ஆராய்ச்சிகள் பிரபஞ்ச வெளியைப் புரிந்து கொள்ள நமக்கு உதவுகின்றன.

கருந்துளைகளும் கருத்துமுதல்வாதிகளும்

அறிவியலில், அனுமானங்களுக்கு இடம் உண்டு; கற்பனைகளுக்கும் ஒரு பங்கு இருக்கிறது. ஆனால் அந்த கற்பனைகளும், அனுமானங்களும் மந்திரத்தில் விழும் மாங்காய்கள் அல்ல. ஐன்ஸ் டைன் முன்வைத்த சிறப்பு சார்பியல் கோட்பாடு, ஏற்கனவே பயன்பாட்டில் இருந்து வந்த இருவேறு அறிவியல் உண்மைகளுக்கு இடையில் ஏற்பட்ட முரண்பாட்டில் இருந்து உதித்தது என்பதை குறிப்பிட்டோம். அதனை மேலும் கூர்ந்து நோக்கினால் அனுமானங்களுக்கு உள்ள இயக்கவியல் அடிப்படையும் புரிபடும்.

காலம் குறித்த மனிதர்களுடைய அறிவு மிக இயல்பானது என்றே தோன்றுகிறது. ஏனென் றால் மனிதர்கள் பிறந்தது முதலே காலத்தோடு உறவாடுகிறார்கள். காலத்தைக் கணக்கிட்டு பயன்படுத்துகின்றனர். எனவே இந்த அறிவு போதுமானது போல் தோன்றுகிறது. ஆனால், மனித ஆராய்ச்சி, விண்ணைத் தாண்டி வெளியை எட்டுகிறபோது, முற்றிலும் புதிய சூழலில், காலம் குறித்த அறிவு வளர்த்தெடுக்கப்படவேண்டிய ஒன்று என்பது புரிகிறது.

ஒளியின் வேகத்தில் பயணிப்பது சாத்தியமே இல்லாத ஒருவருக்கு, வேகத்திற்கேற்ப நிறை அதிகரிக்கும் என்ற உண்மை அனுபவத்தில் புரியாது. பல்வேறு கதிர்களையும், அணுப்பிளவு களையும்ஆராய்கிற நவீன காலத்திற்கு ஐன்ஸ் டைன் தத்துவ வெளியில் ஏற்படுத்திய புரட்சிகர மாற்றம், எத்தனை முக்கியமானது என்பது புரிகிறது.

ஒரு குவளையில் தண்ணீர் இருக்கிறது. குடித்து முடித்தவுடன் காலியாகி விட்டதாகச் சொல்கிறோம். இல்லை; குவளைக்குள் காற்று நிறைந்து விட்டது. மேற்சொன்ன தகவல் அன்றாட உரையாடலுக்கு தேவைப்படும் தகவ லாக இல்லை. ஆனால் அறிவியல் இவ்வுண் மையை சாதாரணமாக கடந்து செல்லாது. அண்டத்தில் பல்வேறு துகள்கள், வாயுக்கள், கோள்கள், ஆற்றல் என நிறைந்திருக்கின்றன. இவை நிறைந்துள்ள வெளியை காலியிடம் என்பதா? வேறு எப்படிக் குறிப்பிடுவது என நுணுகி ஆராயும்.

ஒரு ஆப்பிள் பழம், மரத்திலிருந்து கீழே விழுவதைக் கொண்டு புவி

ஈர்ப்பினை வரையறுக் கத் தொடங்கலாம். அதுவே, பூமியும், சூரியனும் ஒன்றை ஒன்று ஈர்த்துக்கொண்டிருப்பதும், நிலவும் பூமியும் ஒன்றை ஒன்று ஈர்த்தபடி சுழன்று கொண்டிருப்பதும் தெரியவரும்போது, ஈர்ப்பு விசையின் வரையறைகள் மாறுகின்றன.

காலம் ஒரு நேர்கோட்டில் பயணிப்பதாக நியூட்டன் கருதினார். அவருடைய கோட்பாடு இயற்பியலில், விசையியலில் தாக்கம் செலுத் தியது. காலம் என்ற குவளைக்குள்ளே அனைத் தும் இருப்பதாகவும், மாறிவருவதாகவும் நியூட்டன் அனுமானித்தார். ஈதர் என்ற ஒரு கற்பனை பொருளையும் அவர் வசதிக்காக அனுமானித்துக் கொண்டார். ஐன்ஸ்டைன் மேற்சொன்ன அனு மானங்களை காலாவதியாக்கினார்.

உண்மையில் ஒளியின் இயல்பு குறித்த திட்ட வட்டமான கண்டுபிடிப்புதான், அதுவரையிலான போக்குகளை புரட்டிப் போட்டது. நியூட்டனின் கருத்துக்களுடைய எல்லையை புரிய வைத்தது. ஐன்ஸ்டனின் கோட்பாடானது, காலனம், வெளி குறித்த புரிதலில் புரட்சிகரமான மாற்றங்களைச் செய்தது. மேற்சொன்னவைகளில் இருந்து பார்த்தால், ஐன்ஸ்டைனின் கோட்பாடு உருவான இயக்கவியல் அடிப்படையும் புரியும். இயற்பியலில் ஒட்டுமொத்த மனித சமூகம் முன்னேற்றமடைந்த இரு வேறு கட்டங்களோடு இணைத்து புரிந்து கொள்ள முடியும்.

வெளி என்பது அனைத்து பொருட்களும் இடம்பெற்றுள்ள, நகர்கின்ற கலனாகும் (ஒரு பாத்திரம் போல). காலம் என்பது எண்ணற்ற நகர்வுகளின் அண்டம் தழுவிய ஓட்டம். மேற் சொன்ன பார்வையை ஈர்ப்புவிசையோடு இணைத்து பொது சார்பியல்கோட்பாட்டை ஐன்ஸ்டைன் உருவாக்கினார். அது நியூட்டனின் ஈர்ப்புவிசைத் தத்துவத்தின் மெய்த்தன்மையை நிரூபித்து அதனை வளர்த்தெடுத்தது.

சூரியனை நெருங்கிச் செல்லும் வெளிச்சக் கதிர்கள் சிறிதளவு வளையும் என்பதும், சூரியனை சுற்றி கோள்கள் நகரும் பாதை ஒரே நீள்வட்ட மல்ல என்பதும், அது சற்றே மாறி மாறி ரோசாப் பூவின் இதழோரங்களை ஒத்த வடிவத்தில் அமைந்திருப்பதும், ஈர்ப்புவிசை காரணமாகத் தான். சூரியனில் இருந்து வெளிவருகிற ஒளியா னது பூமியைஅடையும்போது செம்மை நிறம் பெறுகிறது

என்பதையும் அவர் நிரூபித்தார்.

சிறப்பு, சார்பியல் கோட்பாட்டின் அடிப் படையில் வெளியும் காலமும் 'காலவெளி' (Space-Time) என்ற பிரிக்க முடியாத ஒரு கட்ட மைப்பு என்ற வரையறைக்கு அவர் வந்தார். அதன் பொருள், இனிமேல் காலம் என ஒன்றோ, வெளியென ஒன்றோ கிடையாது என்பதல்ல. காலம் அதனுடைய தனித்தன்மையைக் கொண் டுள்ளது, வெளி அதற்கேற்ற தன்மையைக் கொண்டிருக்கிறது ஆனால் இவை இரண்டும் ஒன்றில்லாமல் தனித்து நின்று பொருள் தருகிறவை அல்ல என்பதே ஆகும்.

சார்பியல் கோட்பாட்டையும், கருந்துளைகள் பற்றிய அனுமானங்களையும் கருத்துமுதல்வாதத் திற்கான எடுத்துக்காட்டாக கைப்பற்றும் முயற்சிகள் ஆரம்ப காலத்திலேயே தொடங்கி விட்டன. அதாவது, அறிவியலால் அறியவே முடியாத ஒன்று உண்டு என்றும், அண்டம் படைக்கப்பட்ட ஒன்றே என்றும் மேற்சொன்ன கோட்பாடுகள் நிறுவி விட்டதாக அவர்கள் முன்வைக்கின்றனர். உண்மைக்கு மாறாக, மேற் சொன்ன வகையில் கருத்துக்களை முன்வைக்கிற வர்கள் முதலாளித்துவத்தின் தேவையில் இருந்தே செயல்படுகின்றனர். காரண காரியத்தை தாக்கி அழிப்பதே அவர்களுடைய கெட்ட நோக்கம். அறிவியலுக்கு விரோதமான கருத்துமுதல்வாதத்தை திணிக்க, அறிவியலையே கையகப்படுத்திக் கொள்கிற முயற்சிகளை, பொருள்முதல்வாதிகள் தொடர்ந்து எதிர்க்க வேண்டியுள்ளது. மேலும் அதனை காரண காரியத்தை பாதுகாத்து முன்னெடுக்கவும் வேண்டியுள்ளது.

சார்பியல் கோட்பாட்டை முன்வைத்து அறிவியலைத் திரிப்பவர்கள் பற்றி லெனின் குறிப்பிடும்போது, "ஐன்ஸ்டைன், பொருள் முதல் வாதத்தின் அடிப்படையின் மீது எந்த தாக்கு தலையும் நடத்தவில்லை" ஆனால் அவருடைய கோட்பாடு, மிகப்பெரிய எண்ணிக்கையிலான முதலாளித்துவ அறிஞர்களால் கைப்பற்றப்பட்டிருக் கிறது. இந்த நிலைமை ஐன்ஸ்டைனுக்கு மட்டும் ஏற்படவில்லை, இயற்கை அறிவியலை சீர்திருத்தி அமைத்த பெரும்பாலான அறிஞர்களுக்கு நேர்ந் துள்ளது" என்றார்.

அறிவியலும் மார்க்சியமும்

மனித குல வரலாற்றில் அறிவியலின் பங்களிப்பு பற்றி எங்கல்ஸ் விதந்தோதுகிறார். அவரது காலத்தில் நிக்கோலஸ் கோபர்நிகஸ், பூமிதான் சூரியனை சுற்றிவருகிறது என்ற உண்மையை உலகுக்குச் சொன்னபோது இதுவொரு 'புரட்சிகர நடவடிக்கை' என்றார் எங்கல்ஸ். அதே போல மார்க்சும் எங்கல்சும் சார்லஸ் டார்வினின் பரிணாம வளர்ச்சித் தத்துவத்தை வரவேற்றுக் கொண்டாடியதை நாம் அறிவோம்.

மனித அறிவை தத்துவப் பார்வையில் நோக்கும் போது, புலனறிதல், பகுத்தறிதல் என இருவேறு கட்டங்களாக சொல்லலாம். புலனறிதலை மட்டும் சார்ந்து சிந்திக்கும்போது அது அனுபவ வாதத்திற்கு வழிகோலுகிறது. பகுத்தறிவை மட்டும் சார்ந்து நின்றால் அது பகுத்துப் பார்த்து, ஆய்வு செய்கிற திறனை புலனுணர்தலுக்கு மேலான ஒரு உயர்நிலையாக நிலைநிறுத்தி விடுகிறது. மார்க்சியம் இவை இரண்டையும் கணக்கிலெடுக்க வேண்டும் என்கிறது. அறிவுச் செயல்பாடு என்பது உண்மை நிலையைப் பற்றி புலன்களின் உணர்வு மற்றும் பகுத்து நோக்கி ஆராயும் நடவடிக்கை ஆகிய இரண்டுமே பிரதிபலிப்பதன் ஒருங்கிணைவே என்கிறது மார்க்சியம்.

மேலும் அது அறிவியல் ஆராய்ச்சிகளைப் பற்றி குறிப்பிடும்போது, விஞ்ஞானிகளின் 'அனுமானங்களுக்கு' ஒரு முக்கிய இடம் இருப்பதை அங்கீகரிக்கிறது. புனைவாற்றலுக்கு உள்ள முக்கியத்துவத்தையும் கணக்கில் கொள் கிறது. இத்தகைய புனைவாற்றல் இயல்புணர்வு ஒரு மாயாஜாலம் போல நேர்வது அல்ல; மனித குலத்தின் கடந்த கால சமுதாய அறிவாற்றலை உள்வாங்கிய ஒரு தனிநபருடைய அறிவாற்றல் மற்றும் அனுபவங்கள் ஆகியவற்றில் இருந்து தான் வெளிப்படுகிறது.

உத்தேசக் கருத்துக்களில் இருந்து உருவாகும் அனுமானங்கள், புனைவுகள் என்பதோடு முடிந்து விட்டால் அது அறிவியல் ஆகாது. அந்த அனு மானத்தை சாரப்படுத்தி, அதனை பகுத்தாய்ந்து பின்னர் நிரூபணம் செய்வது அவசியம். இதிலிருந்து தான் கோட்பாடுகள் பிறக்கின்றன. மேலும் ஒரு குறிப்பிட்ட அறிவுக் கட்டத்தில் சரி என அறியப் பட்ட கருத்துக்கள், மற்றொரு கட்டத்தில் மேலும் மேம்படுத்தப்படவேண்டிய நிலைமைக்கு வருகின்றன. நியூட்டனின்

மேதமையோ, பாரடே வின் ஆய்வுக் கருத்துக்களோ போலியானவை அல்ல. அவர்களின் அனுமானங்கள் அறிவி யலுக்கு விரோதமானவையோ அல்ல. ஆனால் அறிவின் வளர்ச்சிக் கட்டத்தில் அவை மேலும் திட்டவட்டமாக வேண்டும். அறிவு வளர்ச்சியும் இயக்கவியலுக்கு உட்பட்டது என்பதையே கருந்துளை பற்றிய வரலாற்றுப் பருந்துப் பார்வை நமக்கு விளக்குகிறது.

பொதுவானதில் இருந்து, குறிப்பான ஒன்றை நோக்கி நகர்வதும். குறிப்பான நிகழ்வுகளை, பொதுவானவைகளுடன் இணைப்பதுமே மார்க் சிய நோக்கு. இந்த இயக்கம் தொடர்ந்து நடக் கிறபோதுதான் அறிவு வளர்கிறது.

கருத்துளை ஒளியை உமிழாது; அதன் மீது விழும் ஒளியையும் பிரதிபலிக்காது – அப்படி என்றால் எப்போதும் காட்சியே தராத பொருளாக இருக்குமா? ஐன்ஸ்டீனுக்கே பெரும் கலக்கம் ஏற்பட்டது. காட்சியே தராத ஒன்றை சந்தர்ப்ப சூழல் தரவுகள் கொண்டு அனுமானம் செய்யலாம். ஆனால் எப்போதும் காட்சியே தராது என்றால் அது மெய்யாக இருக்கிறது என அறிவியல் பார்வையில் ஏற்றுக் கொள்வது கடினம். எனவேதான் நேரடிச் சான்று தேடி அலைந்தனர் விஞ்ஞானிகள். ஐன்ஸ்டீன்னின் தத்துவத்தை வைத்து மேலும் கருந்துளையை கூர்ந்து ஆராய்ந்தபோது அதன் அருகே குறிப் பிட்ட தொலைவில் செல்லும் ஒளி கற்றை கருந் துளையை வலம் வந்து வந்த திசையிலேயே வெளிப் படும் என கண்டனர். அதாவது கருந்துகளை இருந்தால் அங்கே ஒளிவட்டம் போல காட்சி தரவேண்டும்.

ஏற்கனவே எம் 87 கேலக்சி மையத்தில் கருந் துளை உள்ளது என அனுமானம் செய்து வைத் திருந்தோம். அங்கே கண்ணுக்கு தெரியாத கருந் துளையை சுற்றி ஒளிவட்டம் இருக்கிறதா என தேடி எடுத்த புகைப்படமே தற்போது வெளியாகி யுள்ள புகைப்படம். இரண்டு ஆண்டுகள் போராடி, உலகம் முழுவதும் விஞ்ஞானிகள் இணைந்து செயல்பட்டு ஒரு படத்தை வெளியிட்டுள்ளனர். இதன் காரணமாக, இதுவரை இருக்கலாம் இல்லாமலும் இருக்கலாம் என சந்தேகத் துடன் வெறும் அனுமானமாக இருந்த கருந் துளை எனும் வான்பொருள் மெய்யாக இருக்கிறது எனபது உறுதியாகியுள்ளது. இப்படி ஒவ்வொரு நாளும் மனித அறிவுப் பரப்பு புதிய திசையில் விரிவடைந்து வருகிறது.

இயக்கவியல் பொருள்முதல்வாதத்தை குறித்து லெனின் ''எழுதும்போது எலெக்ட்ரோன் குறித்து எப்போதும் எல்லாம் அறிந்துவிட்டோம் என்ற நிலை ஏற்படாது'' என்றார். அதாவது எப்போதும் அறிவுத் தேடல் இருந்து கொண்டே தான் இருக் கும் என்றார் லெனின். அந்தந்த காலகட்டத்தில் உள்ள உற்பத்தி சக்திகள், அதாவது கருவிகளின் வளர்ச்சிக்கு ஏற்ப நமது அறிவின் ஆழம் அமை யும். நிலை மறுப்பின் நிலை மறுப்பு மற்றும் பருப்பொருளில் ஏற்படும் அளவு மாற்றம் பண்பு மாற்றத்தை ஏற்படுத்தும் என்ற இயக்கவியல் விதிக்கு இணங்க, புதிய அறிவியல் துறைகளின் பிறப்புக்கும், நவீன கோட்பாடுகள் வளர்த் தெடுக்கப்படுவதற்கேற்ற, புதிய அனுமானங்கள், புதிய ஆய்வுகளுக்குமான சூழல் பிறந்து கொண்டிருக்கிறது.

கணியம் அறக்கட்டளை

தொலை நோக்கு – *Vision*

தமிழ் மொழி மற்றும் இனக்குழுக்கள் சார்ந்த மெய்நிகர்வளங்கள், கருவிகள் மற்றும் அறிவுத்தொகுதிகள், அனைவருக்கும் கட்டற்ற அணுக்கத்தில் கிடைக்கும் சூழலை உருவாக்குதல்.

பணி இலக்கு – *Mission*

அறிவியல் மற்றும் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு ஒப்ப, தமிழ் மொழியின் பயன்பாடு வளர்வதை உறுதிப்படுத்துவதும், அனைத்து அறிவுத் தொகுதிகளும், வளங்களும் கட்டற்ற அணுக்கத்தில் அனைவருக்கும் கிடைக்கச்செய்தலும்.

எமது பணிகள்

கணியம் மின்னிதழ் *kaniyam.com*

கணிப்பொறி சார்ந்த கட்டுரைகள், காணொளிகள், மின்னூல்களை இங்கு வெளியிடுகிறோம்.

கட்டற்ற தமிழ் நூல்கள் *FreeTamilEbooks.com*

இங்கு யாவரும் எங்கும் பகிரும் வகையில், கிரியேட்டிவ் காமன்ஸ் உரிமையில், தமிழ் மின்னூல்களை இலவசமாக, அனைத்துக் கருவிகளிலும் படிக்கும் வகையில் *epub, mobi, A4 PDF, 6 inch PDF* வடிவங்களில் வெளியிடுகிறோம்.

- தமிழுக்கான கட்டற்ற மென்பொருட்கள் உருவாக்கம்
- தமிழ் ஒலியோடைகள் உருவாக்கி வெளியிடுதல்
- விக்கி மூலத்தில் உள்ள மின்னூல்களை பகுதிநேர/முழு நேரப் பணியாளர்கள் மூலம் விரைந்து பிழை திருத்துதல்

OpenStreetMap.org ல் உள்ள இடம், தெரு, ஊர் பெயர்களை தமிழாக்கம் செய்தல்

மேற்கண்ட திட்டங்கள், மென்பொருட்களை உருவாக்கி செயல்படுத்த உங்கள் அனைவரின் ஆதரவும் தேவை. உங்களால் எவ்வாறேனும் பங்களிக்க இயலும் எனில் உங்கள் விவரங்களை kaniyamfoundation@gmail.com க்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்.

வெளிப்படைத்தன்மை

கணியம் அறக்கட்டளையின் செயல்கள், திட்டங்கள், மென்பொருட்கள் யாவும் அனைவருக்கும் பொதுவானதாகவும், முழுமையான வெளிப்படைத்தன்மையுடனும் இருக்கும். இந்த இணைப்பில் செயல்களையும், இந்த இணைப்பில் மாத அறிக்கை, வரவு செலவு விவரங்களுடனும் காணலாம்.

கணியம் அறக்கட்டளையில் உருவாக்கப்படும் மென்பொருட்கள் யாவும் கட்டற்ற மென்பொருட்களாக மூல நிரலுடன், GNU GPL, Apache, BSD, MIT, Mozilla ஆகிய உரிமைகளில் ஒன்றாக வெளியிடப்படும். உருவாக்கப்படும் பிற வளங்கள், புகைப்படங்கள், ஒலிக்கோப்புகள், காணொளிகள், மின்னூல்கள், கட்டுரைகள் யாவும் யாவரும் பகிரும், பயன்படுத்தும் வகையில் கிரியேட்டிவ் காமன்சு உரிமையில் இருக்கும்.

நன்கொடை

உங்கள் நன்கொடைகள் தமிழுக்கான கட்டற்ற வளங்களை உருவாக்கும் செயல்களை சிறந்த வகையில் விரைந்து செய்ய ஊக்குவிக்கும்.

பின்வரும் வங்கிக் கணக்கில் உங்கள் நன்கொடைகளை அனுப்பி, உங்கள் விவரங்களை kaniyamfoundation@gmail.com க்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்.

Kaniyam Foundation

Account Number : 606 1010 100 502 79

Union Bank Of India

West Tambaram, Chennai

IFSC – UBIN0560618

Account Type : Current Account